Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 13/50
දිනමුරසු වාරමලර් ஒக்.07-13, 2001

# வாரமலர் தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 428

## பிரச்சனையை விடவும் ஆபத்தான தீர்வு

## அரசாங்கத்தின் இருபக்க நகர்வு

## மண வாழ்வில் சிக்கல்







## சூழும் போர் மேகம்

## பிடித்த நடிகர் பிரசாந்த்

# ஆன்மீகம்


## நெஞ்சுக்கு நிம்மதி

ஆதி நாயகன் அவனின் சட்டங்கள் தெளிவானவை. அவனின் தீர்ப்பும் தெளிவானவை. அவற்றை தெரிந்துக் கொண்டவனுக்கு நெஞ்சுக்கு நிம்மதி உண்டு.

ஆதி நாயகனின் தீர்ப்பு என்றும் பிழையானதாக இல்லை. ஆதிநாயகனே நீ ஒருத்திக்கு ஒருவன் என்ற தீர்ப்பை புறாவின் மூலம் காட்டினாய். இந்த உலகத்திலே நன்றி மறந்த மனிதர்கள், வளர்த்தவனையே தூற்றுவார்கள் என்பதற்காக வாயைக் கட்டி நாயை எங்களுக்கு காட்டினாய். முள்ளங்கியும், வடித்த கஞ்சியும் சோறுமாக உணவு கொடுத்து பன்றியை வளர்த்தாலும், வடிகால் வாயைத் திறந்தவுடன் அது வடிகாலுக்குள்தானே ஓடுகிறது. பன்றியை படைத்து இழிந்த குணம் படைத்த கயவர்களை எங்களுக்கு இப்படி காட்டுகிறாய். மொழியின் ஆரம்பத்தை கிளியின் மூலமும் இசையின் துவக்கத்தை குயிலின் மூலமும், கலையின் பிறப்பை மயிலின் மூலமும் காட்டிய ஆதிநாயகனே உன்னை நினைக்கும் போதெல்லாம் எனக்கு வியப்பு மேலிடுகிறது. உன்னோடு முடங்கிப் போய் கிடக்கும் பல இரகசியங்கள் விஞ்ஞானத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

இன்று வரண்டுபோய் வெடித்து சிதறும் நிலத்துக்கு மழையையும் குளிர்ந்த பூமிக்கு வெயிலையும் நீ பருவத்தில் தர மறுக்கும் போது யாரையோ தண்டிக்க எண்ணுகிறாய். உனது இந்தத் தீர்ப்பு பிழையானதல்ல. இவ்விடயத்தில் உன்னைக் குறைகூறுவோர் முடர்களே!

க. பொ. புஷ்பராஜா, சிலாபம்.



## அல்லாஹ்வின் அச்சம்

ஒரு முறை ஆயிஷா நாயகி அவர்கள் அண்ணல் நபியிடம் உங்கள் உம்மத்தென்னும் கூட்டத்தினரில் நாளை மறுமையில் விசாரணையின்றிச் சுவர்க்கம் புகுபவர் எவரேனும் உண்டா? எனக் கேட்டார்கள்.

அதற்கு அண்ணல் அவர்கள் யாரெல்லாம் தன்னுடைய பாவங்களை நினைத்து அழுகின்றார்களோ அவர்கள் அல்லாஹ்வின் கேள்வி கணக்கின்றி சுவர்க்கம் புகுவர் என்றார்கள்.

ஆதாரம் : ஹாகிம்

அல்லாஹ்வின் அச்சத்தால் ஒருவர் அழுத அந்தக் கண்ணீர் அவனுடைய முகத்தில் விழுமாயின் அல்லாஹ் அந்த முகத்தை நரக நெருப்புத் தீண்டவிடமாட்டான்.

இறையச்சமானது நற்கருமங்கள் புரிய மனிதனுக்கு வழிவகுக்கிறது. அல்லாஹ்வுக்கு அஞ்சி அவன் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பவனுக்கு எல்லாவஸ்துக்களும் அஞ்சும். அல்லாஹ் அல்லாதவைகளுக்கு அஞ்சி நடப்பவனை எல்லா வஸ்துக்களும் பயமுறுத்தும்.

மானிடன் வறுமைக்கு பயப்படும் அளவு நரக வேதனைக்கு பயப்படுவானாயின் அவன் நாளை மறுமையில் நேரடியாக சுவர்க்கம் செல்வான்.

எம். சி. கலீல், கல்முனை-05.

## ஆண்டவரின் வார்த்தைகளை அலட்சியப்படுத்தாதீர்கள்

திருவிவிலியம் (பைபில்) கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய புத்தகம். ஒவ்வொருவரின் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருக்க வேண்டுமென்பதை விவிலியத்தின் வாயிலாக விவரமாக தெரிந்துகொள்ளலாம்.

கண்ட கண்ட இடங்களிலெல்லாம் காளான் தோன்றி மறைவதைப்போன்று தற்போது போலிப் போதகர்கள் தோன்றுவதையும் விவிலியத்தை கையில் எடுத்துக்கொண்டு தாங்களும் போதகர்களென்று கூறிக்கொண்டு துர்நடத்தையுள்ள பெண்களோடு உல்லாசமாக சுற்றித்திரிவதையும் இன்று நாம் காணக் கூடியதாகவுள்ளது. இப்படியானவர்கள் விவிலியத்தை கையில் தொடவே அருகதையற்றவர்கள். விவிலியத்தை அசுத்தப்படுத்துபவர்கள்.


ஆலயங்களிலே ஆண்டவரின் வார்த்தைகளை மக்களுக்கு போதிக்கும் குருக்கள் போதகர்கள் கூட தங்களின் நடைமுறையில் அவரின் வார்த்தைகளை செயற்படுத்துவதில்லை.

இப்படியானவர்கள் அவரின் வார்த்தைகளை அலட்சியப்படுத்துபவர்கள் மட்டும் அல்ல. அசுத்தப்படுத்துபவர்களாகவும் கணிக்கப்படுவர். அத்தோடு அவரின் தண்டனைக்குரியவர்களுமாவர்.

சகோதர, சகோதரிகளே இந்நிமிடம் தொட்டு அவரின் போதனைக் கேட்ப நடந்து நல்லவாழ்வு வாழ கற்றுக் கொள்வோம். அவரின் ஆசியையும் நிறைவாக பெற்றுக்கொள்வோம்.

ஜோசப் அருள்சாமி, திகனை.

## கவிதைப் போட்டி இல.428



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 13.10.2001

கவிதைப் போட்டி இல.428
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.425

### பரிசுக்குரிய கவிதை

#### தேடல்

என் வசதிக் கேற்ற
பைனாக்குலரால்-
பார்க்கிறேன்.
எங்காவது?
போரில்லா பூமியில்
புதுயுகம் புலர்கிறதா
என்று.

மு. விஜயதீபம்-பசறை.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



#### தேடு

காணாமல்போன கடந்தகால
வாழ்க்கையை விட்டு விட்டு
நிகழ்காலத்தில் நிம்மதியாய் வாழ்வதற்கு
எதிர்கால வாழ்க்கையைத்தேடு!

த. தருமராஜா-பெரியபோரதீவு.

#### நிதானப்பார்வை

விழி விளிம்பில் வெடிபட்டு
வேதனையில் அடிபட்டுவிட்டேன்
மீண்டும் தாக்காதிருக்க
விழி வரம்பில் விழிவைத்து
விழிப்புடனே பார்க்கின்றேன்.

க. உதயகுமார்-கொட்டகலை.

#### (மேல்) உலகத்தை நோக்கு

உனக்கேன் வம்படா...
நியூயோர்க் என்ன-நீ
நிற்குமிடத்திலா இருக்கிறது...?
வான் நோக்கிப் பாரடா
வாண்டுனைப் படைத்தவனாவது
நிம்மதியாய் வாழ்கிறானா என்று...!

அக்ஷியா அக்ரம்-குருணாகல்.

#### அவலம்

கையை கமராவாக்கி
கச்சிதமாய் படமெடுத்தாலும்
கண்ணா நீ காண்பதெல்லாம்
காலத்தின் அவலங்கள்தான்.
விதவையின் விசும்பலைதான்
மரணித்த எம் மானிடர்களின்
மண்டை ஓடுகளைத்தான்.

ப. ரவீந்திரகுமாரி-டிக்கோயா.

#### காத்திரு

பூதக்கண்ணாடி
கொண்டு-நீ
பார்க்காவிட்டாலும்,
பச்சமண்-உனக்காக
பாரினில் மழை
பெய்யுமடா.

செல்வி. க. பரமேஷ்வரி-தலவாக்கலை.

#### தப்பிக்க

அந்த வான்பறவை
முட்டையிடுகிறதா
என்று...
பார்த்தேன்...!

எஸ். பி. பாலமுருகன்-பதுளை.

#### தேடாதே கிடைக்காது

தொலைநோக்கியால்
பார்த்தாலும்
தென்படாது சமாதானம்,
முதலில் நீ பிழைக்கப்பார்.
உன் தலை
தொலைநோக்கிவழியாக
துப்பாக்கியின் குறியில்
இருக்கலாம்!

ஏ. ராசேந்திரன்-கீரியன்குடியிருப்பு.

#### எத்துனை கோடி

யுத்த முகத்திரைக்குள்
மறைந்திருக்கும்
சமாதானக் கண்கள்
இனியாவது திறக்க
இன்னும் எத்துனை கோடி
உயிர்கள் வேண்டும்?

எம். எச். எம். மௌஜுத்-ஹிஜ்ராபுரம்.

#### தொட்டாச்சுருங்கி

இயற்கையின் அலறல்
கேட்கும்வரை
சிறுதுரும்பும் தெரியாமலே
ஈன்றவளை மட்டும்
ரசிக்கிறான் இமைக்காமலே....

ஷர்மிலா ஏ. சலாம்-அனுராதபுரம்.

#### மனிதாபிமானத்தையா?

மனிதம்
மரித்துப்போன
மண்ணில் பிறந்தவனே!
நீ தேடுவது
மனிதாபிமானத்தையா?

கி. கிருஷ்ணவதனி-திருகோணமலை.

#### வாழ்க்கை பாடம்

வெற்றுக் கரம் வைத்துப்
பார்ப்பதென்ன?
போலியாய் வாழக்
கற்றுக்கொண்டோம்.
போலியாய் பார்ப்பது
எப்படி என்றா?

பி. விக்னேஸ்வரன்-ஹட்டன்.

# உங்கள் பக்கம்

## நாடுமுழுவதிலும் பரவியுள்ள போலி மருத்துவ நிலையங்கள்

போலியான டாக்டர்களால் நடத்தப்படும் மருத்துவமனைகள் நாடு முழுவதிலும் இருக்கின்றன. ஏதாவது ஒரு போலி சான்றிதழை சுவரில் தொங்கவிட்டுக் கொண்டு பட்டம் பெற்ற மருத்துவர்கள்போல பல ஏமாற்று ஆசாமிகள் இவற்றை நடத்தி வருகின்றார்கள்.

பொதுவாக காலம் கடந்த நோய்கள், பாலியல் பலவீனங்கள் மற்றும் இரகசிய நோய்களுக்காகவே இத்தகையவர்களை மக்கள் நாடிச் செல்கின்றனர். பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் அப்பாவி மக்களை வரவழைக்கும் இத்தகைய போலி மருத்துவர்கள் ஏராளமாக பணம் அறவிடுவது ஒருபுறமிருக்க சில நேரங்களில் உயிருக்கு உலை வைக்கக்கூடிய மருந்துகளை கொடுத்தனுப்பி விடுவதுமுண்டு. அதனால் இத்தகைய சிகிச்சை நிலையங்களை நாடும் மக்கள் இவை தொடர்பில் அதி கூடிய கவனம் செலுத்துவது அவசியமாகும். குறிப்பிட்ட தொரு மருத்துவ நிலையத்துக்குச் செல்லும் முன்னர் அங்குள்ள வைத்தியர், வைத்திய முறை மற்றும் கட்டணங்கள் குறித்தும் அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இத்தகைய சிகிச்சை நிலையங்கள் பின்தங்கிய பகுதிகளில் மாத்திரம்தான் இயங்குகின்றன என்றில்லை. தலைநகரில்கூட இவ்வாறான போலி ஆசாமிகளின் வலையில் சிக்கிய ஏராளமானவர்கள் இருக்கின்றனர்.

கொழும்பு மருதானையில் வெளிநாடொன்றின் பெயர் பலகையுடன் இயங்கும் சிகிச்சை நிலையம் ஒன்றுக்குப் போய் தனக்கு நேர்ந்த கதியை கூறுகிறார் புறக்கோட்டை வாசகர்:-

என் மனைவிக்கு மருந்து எடுக்கக் கூட்டிச்சென்ற வேலை அந்நிலையம் பார்ப்பதற்கு அழகாகவும், குளிரூட்டப்பட்டும் இருந்தது. இன்னும் பல பேர் மருந்து எடுக்க வந்திருந்தார்கள் எங்களிடமும் சோதனைக் கட்டணமாக 200 ரூபா அறவிடப்பட்டது. சிறிது நேரத்தில் எங்களையும் அழைக்கப்பட்டு மிக நீண்ட நேரம் சோதனையும் செய்யப்பட்டது. வைத்தியர் ஒரு தமிழ் பெண். அதன் பிறகு சில மருந்துகளைக் கொடுத்து பற்றுச் சீட்டையும் கையில் கொடுத்தார்கள். பற்றுச் சீட்டைப் பார்த்தவுடன் பெரும் அதிர்ச்சி. காரணம் எல்லாமாக 2500 ரூபா செலுத்தும் படிச் சொன்னார்கள். நல்ல வேலை என் கையில் பணம் இருந்தபடியால் பணத்தைச் செலுத்தி விட்டு வீடு திரும்பினோம்.

இருந்தும் எனக்கு இம்மருத்துவ நிலையம் மீது சந்தேகம் ஏற்பட்டது. வீடு வந்து மருந்துப் போத்தல்களில் லேபல்களை பரிசோதித்து பார்த்தவுடன் எல்லாம் இந்தியாவில் தயாரித்த மருந்து தான். வெறும் இந்திய விலை ஒரு போத்தலுக்கு 61 ரூபா. அதை மாற்றி 500 ரூபா என்றும், இன்னொரு மருந்து போத்தலின் விலை 41 ரூபாவை மாற்றி 800 ரூபாவென்றும் எல்லா மருந்துகளையும் விலை மாற்றி மோசடி செய்கிறார்கள்.

இவ்வாறு பலர் பல்வேறு இடங்களில் தாம் ஏமாற்றப்பட்ட கதைகளை எழுதியுள்ளார்கள்.

இத்தகைய மருத்துவ நிலையங்கள் தொடர்பாக சுகாதார அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த. பெ. இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

# வாசக[ர்] சாலை

இனிய முரசே!

வெளிநாடுகளில் உன் வரவுக்காக காத்திருக்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி. முரசே நீ வாரா வாரம் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுவையோ சுவை. நீ என் கரம் வருவது திங்கள். அந்த நாட்களுக்காக தவித்துக் கொண்டிருப்பேன். உன்னை வாங்கி வாசித்த பின் தான் எனக்கு சந்தோசம். என் முரசே, என் கவலைகளுக்கு நீயே என்னை மகிழ்வூட்டுகிறாய். இனிமையான அம்சங்களை சுமந்து வரும் என் முரசின் பணி தொடர வாழ்த்துக்கள்.

நாவலப்பிட்டி ராஜசுலோசனா-ஜோர்தான்.

என் இனிய தினமுரசே!

நீ வாரா வாரம் சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. இதுபோல் ஒவ்வொரு வாசகர்களுக்கும் அறிவொளி காட்டுவாய் என்பதில் சந்தேகமில்லை. நீ சுமந்துவரும் அம்சங்களில் 'பாப்பா முரசு', 'சிறுகதை', 'சிந்தியா பதில்கள்', ஆகியவை மிக மிக அருமை. முரசே, உன் சேவை உலகெங்கும் பரப்பி மென்மேலும் வளர வாழ்த்துகிறேன்.

எம். எப். பஸ்லியா பரீத், தம்புள்ள.

என்னினிய முரசே!

நீ சுமந்து வரும் ஒவ்வொரு ஆக்கங்களும் சூப்பரிலும் சூப்பர். 'கவிதைகள்', 'சிறுகதைகள்' என்று அனைத்து அம்சங்களுமே சூப்பர். சிறுவர்களுக்காக வழங்கும் 'பாப்பா முரசு' சிறுவரை மட்டும் அன்றி பெரியவர்களின் இதயத்தையும் ஈர்ந்துள்ளது. உன் பணி மேலும் சிறக்க என்னிதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

ப. ஆஷா, நெடுந்தீவு.

அன்பின் முரசே!

உன் ஆக்கங்கள் அத்தனையும் படுஜோர். சுவைக்க சுவைக்க தெவிட்டாத அமுதம். 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அலசுவது இராஜதந்திரி', 'அதிரடி அய்யாத்துரை', 'அண்டை மண்டலத்தில்', 'எஸ்.டி.எஸ்.' தொடர் ஆகியவையும், இலங்கை, இந்திய அரசியல் நிலமைகளை உடனுக்குடன் தெளிவாக அறியத்தருவதும், 'வாரம் ஒரு வார்த்தை', 'நில் கவனி முன்னேறு', 'இலக்கிய நயம்', 'சிறுகதை' இவைகள் அறிவையூட்டி சிந்திக்க வைத்து உள்ளத்தை தெளிவுபடவைப்பதாகவும் உள்ளன. பல உள்ளங்களை கொள்ளை கொண்டுள்ள உன் சேவை மென்மேலும் வளர என் இனிய வாழ்த்துக்கள்.

எஸ். பி. இரத்தினசிங்கம், டோகா கட்டார்.

அன்பிற்குறிய என் முரசே!

நீ வாரம் தோறும் வழங்கி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர் அதில் 'லேடிஸ் ஸ்பெஷல்' என்னை மிகவும் கவர்ந்தது அதேபோல் 'நில் கவனி முன்னேறு' மிகமிகச் சிறப்பாக அமைகின்றது. சுருங்கக் கூறின் நீ சுமந்துவரும் அத்தனை அம்சமும் வரவேற்கத்தக்கவையே.


கே. சுபாஜினி, யாழ்ப்பாணம்.

என் உயிர் முரசே!

எப்போது வியாழன் வரும். என் இனிய முரசை வாங்கிப் படிக்க என காத்திருக்கும் பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன் என்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். உன்னில் சங்கமிக்கும் அத்தனை அம்சங்களையும் படிக்க படிக்க அறிவு மேலோங்குகின்றது என்பதுடன் உன் இதழ்கள் அனைத்தும் படு சூப்பர்தான்.

கலைப்பிரியன் வேணு, பெரிய நீலாவணை-01.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு



நாட்டின் பல பாகங்களில் இருக்கும் தமிழ் நெஞ்சங்களை கவர்ந்து வரும் தினமுரசே! நீ சுமந்து வரும் அம்சங்கள் யாவும் அற்புதமே. குறிப்பாக 'ஆன்மீக'த்தை அலங்கரித்த ஆக்கங்கள் அனைத்தும் அறிவுக்கு விருந்தூட்டுவனவாக அமைந்திருந்தன. மேலும் நலம் தரும் நம்பிக்கை நல்ல படைப்பு 'சிறுகதை'கள உள்ளத்தை தொடும் வகையில் அருமையா அமைந்திருந்தன.

மங்களா வாமதேவன்-தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.

அகிலம் போற்றும் தினமுரசே!

வாரா வாரம் வரும் நீ உலகில் நடக்கும் பல விசித்திரமான விடயங்களை தரம்பிரித்து மிகவும் அற்புதமாக இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு வழங்கி வருகிறாய். உன் நேர்மையான பணி என்றும் தொடர என் மனமார்ந்த வாழ்த்துக்கள் அனைத்தும் உனக்கே உரித்தாகட்டும்.

இரா. பிரியதர்ஷனி, இரத்தினபுரி.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# ஐரோப்பிய நாடுகளுக்கு வள்ளங்களில் புறப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் சர்வதேச கடற்பரப்பில் நிர்க்கதி!

## மாபியா கும்பல்களுக்கு கப்பம் வழங்காததால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தகவல்

**தொ**ழில் வாய்ப்பின் நிமித்தம் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் முயற்சியில் தென்னிலங்கை கரையோரங்களில் இருந்து புறப்பட்ட 800 முதல் 1000 பேர் வரையிலான இலங்கையர்கள் எகிப்தின் சுயஸ் கால்வாய் பகுதியிலும் யெமன் நாட்டுக்கு அருகில் உள்ள அரேபிய கடற்பரப்பிலும் நிர்க்கதிக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாலி, பிரான்ஸ், எகிப்து ஆகிய நாடுகளை நோக்கிச் சென்ற இவர்கள் தாம் புறப்பட்ட ட்ரோலர் இயந்திரப் படகுகளிலேயே பலநாட்களை கடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட சில கடல் எல்லைகளை தாண்டிச் செல்ல வேண்டுமாயின் அப்பகுதிகளில் இயங்கும் மாபியா கும்பல்களுக்கு பெருந்தொகை கப்பம் வழங்க வேண்டியுள்ளது. இந்த கப்பப்பணத்தை செலுத்தத் தவறும் பல வள்ளங்கள் பலாத்காரமாக சர்வதேச கடல்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

இலங்கையின் வடமேற்கு, மேற்கு, தெற்கு கரையோரங்களில் இருந்தும் குறிப்பாக களுத்துறை, நீர்கொழும்பு சிலாபம் போன்ற இடங்களில் இருந்தும் புறப்பட்ட இவ்வாறான 35 வள்ளங்கள் இடை நடுவில் அகப்பட்டுக் கிடப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வள்ளங்களில் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் சட்ட விரோத குடியேற்றக்காரர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் 3 முதல் 4 இலட்சம் ரூபா வரை அறவிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான குடியேற்றக்காரர்களை ஏற்றிச்சென்ற 'சமிந்த கோமலி' என்ற வள்ளத்தில் ஏற்பட்ட தீயினால் கடந்த வாரம் 6 இலங்கையர்கள் படுகாயடைந்து கெய்ரோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த அனர்த்தத்தில் மேலும் 2 பேர் காணாமல் போயுள்ளதுடன் ஏனையவர்கள் சுயஸ் கால்வாய்க்கு அருகில் கப்பல் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து தினசரி இரண்டு அல்லது மூன்று வள்ளங்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் செல்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சட்ட விரோத குடியேற்றக்காரர்கள் முதலில் சிறிய படகுகள் மூலம் கரையிலிருந்து, கொண்டு செல்லப்பட்டு ஆழ்கடலில் வைத்து ட்ரோலர் படகுகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

இதற்கிடையில் டோவர் துறைமுகம் வழியாக பிரிட்டனுக்குள் உட்பிரவேசிக்க முற்பட்ட 26 இலங்கையர்களையும் இவர்களை ஏற்றி வந்த வாகனத்தையும் வாகனச் சாரதியையும் பிரிட்டிஷ் பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த 23 ஆண்களும் மூன்று பெண்களும் சனிக்கிழமை வாடகை வாகனமொன்றின் மூலம் டோவர் துறைமுகத்தை சென்றடைந்தனர்.

தென் இங்கிலாந்தின் துறைமுகமான டோவர் சட்ட விரோத குடியேற்றவாசிகள் இங்கிலாந்திற்குள் நுழைவதற்கு பிரசித்தி பெற்ற துறைமுகமாக விளங்குகின்றது.

ஜெர்மனியில் பதிவு செய்யப்பபட்ட வாடகை வாகனத்தில் 26 இலங்கையர்களும் பயணம் செய்து பின்னர் அதே வாகனத்துடன் பாதை மூலம் (FERRY) டோவர் துறைமுகத்தை வந்தடைந்தனர்.

வாகனத்தை ஓட்டி வந்தவர் 27 வயதான ஜெர்மன் பிரஜையான பெண்மணியாவார்.

இவரும் ஏனையோரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன. ■

## வன்னியிலும் 'அவசரகால நிலை'

## கொலையாளிகளை கண்டுபிடிக்க தீவிர தேடுதல்

**வ**ன்னி ஒட்டுசுட்டானில் கடந்த வாரம் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் சங்கர் (வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்-வயது 52) கொல்லப்பட்டதையடுத்து, வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவசரகால நிலைமை பிறப்பிக்கப்பட்டுத் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வன்னியில் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தங்களின் முக்கிய தளபதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைத் துடைத்தெறியும் நோக்கில் இந்த அவசரகால நிலையை புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பிரகடனப்படுத்தியுள்ளதுடன், இந்த நடவடிக்கைக்கான அனைத்து அதிகாரங்களையும் மூத்த தளபதி கேணல் பால்ராஜுக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியிலும், கிழக்கிலும் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள நீண்ட தூரம் ஊடுருவும் இராணுவத்தினரே இந்தத் தாக்குதல்களை நடத்தி வருவதாகப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளினுள் இராணுவத்தினர் ஊடுருவுவதைத் தடுக்கும், மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள்ளிருந்து தகவல்கள் வழங்குவோர் அல்லது தாக்குதல்களில் பங்குபற்றுவோரைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கைகளில் புலிகள் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கேணல் சங்கர் தனது வாகனத்தில் வேறு எவருமின்றி தானே செலுத்திச் சென்றபோதே கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் புலிகளின் சிறுத்தைப் படையினரும் எல்லைப் படையினரும் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு வருகின்றன.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள எல்லைப் பகுதிகளிலும் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புலிகளின் புலனாய்வுப் பிரிவினர், படையினருக்கு தகவல்களை வழங்குவோரைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளதுடன், சம்பவம் நடைபெற்ற பகுதியிலுள்ள வீடுகளில் பலத்த தேடுதல்களையும் மேற்கொண்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் பலரை விசாரணைக்கும் உட்படுத்தியுள்ளனர்.

தென்னிலங்கைபோன்று அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொலை நடவடிக்கைளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக புலிகள் தற்போது தேடுதல்களில் ஈடுபட்டுவருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை சங்கரின் கொலைக்கு பழிவாங்கும் முகமாக தென்னிலங்கையில் பாரிய தாக்குதல்களை புலிகள் மேற்கொள்ளலாம் என்று புலனாய்வுப் பிரிவுகள் பாதுகாப்புத் தரப்பினரை எச்சரித்துள்ளன.

## இப்படியும் ஒரு வேண்டுகோள்

**த**மிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற அந்தக் கட்சியை வழிநடத்த வெளிநாட்டில் இருக்கும் தந்தை செல்வாவின் மகன் சந்திரஹாசன், மற்றும் திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் இலங்கை வரவிருப்பதாக கூறப்படும் நிலையில் அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண ஐக்கிய ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம், திருகோணமலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை, வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கம், பூம்புகார் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கம் ஆகிய நான்கு அமைப்புக்கள் தனித்தனியே விடுத்திருக்கும் அறிக்கைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய பிரச்சனைகளுக்குத் தீர்வாக அதன் தலைமைப் பொறுப்பை அமைச்சர் டக்ளஸிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. ■

## அமைச்சு நடவடிக்கை

**சூ**டா நாட்டில் விநியோகிக்கப்படும் உலர் உணவு நிவாரணப் பொருட்களின் தரம் குறித்து மக்களின் கருத்துக்களை அறியும் முயற்சியில் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு வடபகுதி அபிவிருத்தி வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சு ஈடுபட்டுள்ளது.

மக்களின் கருத்துக்களை திரட்டும் பணியில் சமுர்த்தி ஊழியர்களும் அபிவிருத்தித் தொண்டர்களும் ஈடுபடுகிறார்கள்.

தமக்குக் கிடைக்கும் நிவாரணங்களின் குறை நிறைகள் குறித்து மக்கள் இவர்களிடம் தமது கருத்துக்களை தெரிவிக்கலாம். ■

## நாடு திரும்ப விருப்பம்

**போ**ர்ச் சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து தமிழகத்தில் வசிக்கும் 150க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான இவர்கள் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட பதற்ற நிலை மற்றும், பயம் காரணமாக தமிழ் நாட்டை நோக்கி இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தற்பொழுது வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்களை திருப்பியழைத்து மீளக் குடியமர்த்துவது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார். ■

## காணிகளை ஒதுக்கித்தர மறுக்கும் கம்பனிகளுக்கு

## ஆறுமுகம் தொண்டமான் எச்சரிக்கை

**பெ**ருந்தோட்டப் பகுதிகளில் வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கு அக்டோபர் 5ம் திகதிக்கு முன்னர் தோட்டக் கம்பனிகள் காணிகளை ஒதுக்கித் தரா விட்டால் அதனால் ஏற்படப்போகும் பின் விளைவுகளை அக்கம்பனிகள் பொறுத்திருந்து பார்க்கட்டுமென்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் 1600 வீடுகளை அமைப்பதற்கு அக்டோபர் 5ம் திகதிக்கு முன்னர் தோட்டக் கம்பனிகள் காணிகளை ஒதுக்கித் தராவிட்டால் வீடமைப்புக்காக ஒதுக்கப்பட்ட பணம் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்படும் நிலை தோன்றியுள்ளது.

காணிகளை பெற்றுக்கொடுக்குமாறு திறைசேரியிலிருந்து தோட்டக் கம்பனிகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் கம்பனிகள் இதுவரை எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாதிருக்கின்றன. வீடுகளை அமைப்பதற்கு பொறுப்பேற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் காணிகளை பரிசீலித்து தமது பணிகளை ஆரம்பிக்க இயலாத நிலையில் அவர்களும் பொறுப்பை கைவிட்டு விடுவார்கள். இந்த நிலையில் வீடமைப்புக்காக ஒதுக்கப்பட்ட பணம் மீளவும் திறைசேரிக்கே அனுப்பப்பட்டு விடும். எனவே 5ஆம் திகதிக்குள் கம்பனிகள் காணிகளை ஒதுக்கித் தராவிட்டால் அதனால் ஏற்படப்போகும் பின் விளைவுகளை தோட்டக் கம்பனிகள் பொறுத்திருந்து பார்க்கட்டும் என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

## "கிழக்கு முஸ்லிம்கள் ஈழப்போராட்டத்துக்கு தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும்" கரிகாலன் எச்சரிக்கை

**ம**ட்டக்களப்பிலுள்ள சகல பாதுகாப்பு நிலைகள் மீதும் தாக்குதல் நடத்தி நகரை முழுமையாகக் கைப்பற்றப் போவதாகவும் யுத்த நிலைமைக்குப் பொதுமக்கள் தயாராய் இருக்குமாறும் சமீப சில நாட்களுக்கு முன் புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். புலிகள் இயக்கத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையும் தீவிரமடைந்திருக்கிறது.

இதனிடையே முஸ்லிம்களும், அவர்களது வாகனங்கள், கால்நடைகள், தோணிகள், வள்ளங்கள், மாட்டுவண்டிகள், படகு இயந்திரங்கள் என்பன கடத்தப்படுவதும் கப்பம் பெறுவதுமான சம்பவங்கள் தொடர்கின்றன.

இந்நிலையில் மட்டக்களப்பு திருமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையிலான தமிழ்ப்பிரமுகர்களடங்கிய குழுவொன்று புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலனைச் சந்தித்து புலிகளின் எச்சரிக்கை மற்றும் போருக்கு ஆள் திரட்டும் நிலைமையால் நிகழும் இடம்பெயர்வுகள் பற்றியும் எடுத்துக் கூறியது.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கொக்கட்டிச் சோலையில் இச்சந்திப்பு இடம் பெற்றது. ஆயரின் தலைமையில் சென்ற குழுவில் மட்டக்களப்பு மனித நேய முகவர் நிலைய இணைப்பாளர் எம்.கமலநாதன், சமாதானக் குழுத்தலைவர் அன்ரன் மார்ட்டின், இராம கிருஷ்ண மிஷன் பிரதிநிதி ப்த்மநாதன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்தும் ஆயர் தலைமையிலான குழுவினர் கரிகாலனிடம் பிரஸ்தாபித்துள்ளனர். அப்போது கருத்துத் தெரிவித்த கரிகாலன், "கிழக்குமாகாண முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப் போருக்குத் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும். இது தொடர்பாக அவர்களது பிரதிநிதிகளைச் சந்திக்க நாம் தயாராக இருக்கின்றோம்," என்று கூறியுள்ளார். கட்டாயம் முஸ்லிம்கள் தமது "பங்களிப்பைச்" செய்ய வேண்டும் என்று புலிகள் குறிப்பிட்டது. கட்டாய நிதி சேகரிப்பு தொடர்பாகவே என்று கருதப் படுகிறது.

இதனிடையே கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை புடவைக்கட்டுத் தொடக்கம் மூதூர், கிண்ணியா, தோப்பூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில் வரை சமீப சில நாட்களாக அநேக முஸ்லிம்களும், அவர்களது உடமைகளும் கடத்தப்பட்டு புலிகளால் கப்பமாகப் பெருந்தொகைப் பணம் பெறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன வன்முறைக்குத் தூண்டு கோலாக அமையும் சமீபத்திய சம்பவங்களை கிழக்கிலுள்ள பல தமிழ், முஸ்லிம் அமைப்புக்கள் கண்டித்துள்ளதோடு கவலையும் வெளியிட்டுள்ளன. ■

## மாவீரர் குடும்ப முஸ்லிம்

## நிபந்தனையின்றி விடுதலை

**ஓ**ட்டமாவடியிலிருந்து கடந்த 24ம் திகதி கடத்தப்பட்ட நால்வரில் அஹமது உஸனார் செய்னுலாப்தீன் என்பவரும் ஒருவர். இவர் புலிகளின் உயிர் நீத்த தியாகிகளின் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அதனால் கடத்தப்பட்ட அவர் நிபந்தனைகளின்றி விடுவிக்கப்பட்டிருக்கிறார். தெருவில் நின்றிருந்தோரில் நால்வரையே புலிகள் அவசர அவசரமாகக் கடத்திச் சென்றனர். அச்சந்தர்ப்பத்திலேயே இவரும் அகப்பட்டார்.

இவரது சகோதரனான ஜுனைதீன் என்பவர் விடுதலைப் புலிகளின் மேஜராக இருந்தவர். இவரை ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த தியோப்பிளஸ் என்பவர் மட்டக்களப்பு-உறுகாமம் என்னுமிடத்தில் வைத்து மோட்டார் சைக்கிளில் வரும்போது கைது செய்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர் கொழும்பு-காக்கைதீவில் இருந்த இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது தப்பியோடினார். எனினும் பின் தொடர்ந்து துரத்திச் சென்று படையினர் அவரை ஒரு சிங்களவரின் வீட்டில் பதுங்கியிருக்கக் கண்டு சுட்டுக் கொன்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சேர்ந்து அவர் வீரச் சாவடைந்ததாகப் புலிகள் அறிவித்து அவரது குடும்பத்தினரை மாவீரர் பட்டியலில் சேர்த்தனர்.

## தற்கொலை அங்கி கண்டுபிடிப்பு

## சந்தேகத்தின் பேரில் பலர் கைது

**கொ**ழும்பு விகாரமகாதேவி பூங்காவில் தற்கொலைக் குண்டு அங்கியொன்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் இரண்டு பெண்கள் உட்பட ஆறுபேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண்ணும், கொழும்பைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண்ணும் இரு ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆண்களில் ஒருவர் முஸ்லிம். மற்றவர் சிங்களவர். கைது செய்யப்பட்ட மற்றைய இரு தமிழ் இளைஞர்களும் அப்புத்தளை, கண்டி ஆகிய இடங்களைச் சோந்தவர்களென கறுவாத் தோட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு விகார மகாதேவி பூங்காவில் சனிக்கிழமை அதி சக்தி வாய்ந்த தற்கொலைக் குண்டுக்குப் பயன்படுத்தும் அங்கி கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் அப்பகுதியில் தீவிரத் தேடுதல் மேற்கொண்டனர். வாகனப் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டு சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

இந்த தற்கொலைக் குண்டு அங்கியில் சீ-4 ரக அதிசக்தி வாய்ந்த வெடி பொருட்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன், நான்கு பற்றரிகளும் இணைக்கப்பட்டிருந்தன.

அன்றைய தினம் பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சென்பிரிஜட்ஸ் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. ■

## உதவி நிறுவனங்கள் இடமாற்றம்

**பா**ரிய பலத்துடன் மட்டக்களப்பு நகரைத்தாக்கி படையினரிடமிருந்து கைப்பற்றப் போவதாக சில நாட்களுக்கு முன்னர் புலிகள் எச்சரிக்கை விடுத்ததை தொடர்ந்து மட்டக்களப்பில் செயற்பட்டு வந்த சர்வதேச தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளும், சில நிறுவனங்களும் அங்கிருந்து வெளியேறியுள்ளன.

மட்டக்களப்பில் அகதிகளுக்காகச் செயற்பட்டு வந்த "ஸோ ஆ" (Z0A) நிறுவனம் தனது உள்ளூர் உத்தியோகத்தர்கள் அனைவரையும் வேறு மாவட்டங்களுக்கு மாற்றியுள்ளதோடு மட்டக்களப்பு அலுவலகத்தையும் மூடியுள்ளது. இவ்வாறு வேறுசில நிறுவனங்களும் தமது செயல் திட்டங்களை இடை நிறுத்தியுள்ளன.

## இடைத்தரகரின் வேலையால் வர்த்தகர் கடத்தல்

**கி**ழக்கு மாகாணத்தில் எலக்ரோனிக் பொருட்கள் உட்பட தமக்குத் தேவையான பொருட்களை குறித்த சில முஸ்லிம் பகுதிகளிலிருந்தே புலிகள் பெற்றுக் கொள்கின்றனர் என்பது பரவலாக அறியப்பட்ட விடயமாகும்.

தமக்கு தொடர்புள்ள சில முஸ்லிம் வர்த்தகர்களுக்கூடாகவே இந்த விற்பனைகள் நடைபெறுகின்றன என்று கூறப்படுகின்றது. இதற்கென குறிப்பிட்ட சில இடைத்தரகர்களையும் புலிகள் நியமித்துள்ளனர்.

சமீப சில தினங்களுக்கு முன்னர் புலிகள் மூதூர் பகுதி வர்த்தகர் ஒருவரிடமிருந்து தமது இடைத்தரகர் மூலமாக சக்தி வாய்ந்த வீடியோ கமரா ஒன்றைக் கொள்வனவு செய்தனராம். அதன் சந்தை விலை 70 ஆயிரம் ரூபாவாக இருந்த போதிலும் புலிகளிடம் இடைத்தரகர் கையளித்த பற்றுச் சீட்டில் 90 ஆயிரம் ரூபா என குறிப்பிடப்பட்டிருந்ததாம். எங்களிடமே கடைக்காரர் 20 ஆயிரம் ரூபாவை மேலதிகமாக மோசடி செய்து பெற்றுள்ளார் எனச் சீற்றம் கொண்ட புலிகள் சம்பந்தப்பட்ட வர்த்தகரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

எனினும் சம்பந்தப்பட்ட வர்த்தகர் சந்தை விலையான 70 ஆயிரம் ரூபாவுக்கே வீடியோ கமராவை விற்றதாகவும் இடைத்தரகரே 90 ஆயிரம் ரூபாவுக்கு பற்றுச் சீட்டு எழுதியதாகவும் பின்னர் அறியப்பட்டது. ■

# முரசம்

## பிரச்சனையை விடவும் ஆபத்தான தீர்வாக அமைந்துவிடக்கூடாது

***அன்புள்ள உங்களுக்கு,***
***வணக்கம்.***

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலுக்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் அமெரிக்காவும் அதன் நேச அணியும் பூர்த்தி செய்துள்ளது.

தனது நாடு மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு பழிதீர்க்கும் தாக்குதல்களை ஒரிரு நாட்களில் ஆரம்பிக்க புஷ் உத்தரவிடுவார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் போதிய ஏற்பாடுகளின்றி அத்தகையதொரு உத்தரவை பிறப்பிக்க உலகின் ஒரே வல்லரசு தயக்கம் காட்டியதை அவதானிக்க முடிந்தது.

அமெரிக்கர்களின் போரியல் சக்திக்கும் ஆப்கானிஸ்தானின் பலத்துக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை ஆராய்வது வீணான. காரியம் அவ்வாறிருந்தும் கூட தம்மிடமுள்ள முழுப்பலத்தையும் பிரயோகித்து அமெரிக்காவை எதிர்க்கப்போவதாக தலிபான்கள் சூழுரைத்துள்ளனர்.

இது முஸ்லிம்களுக்கு எதிரான போரல்ல என்பதை வலியுறுத்த வாஷிங்டன் பகீரதப்பிரயத்தனம் மேற்கொள்கிறது. மறுபறத்தில் இது. இஸ்லாத்துக்கு எதிரான யுத்தம் என்ற கருத்தை பரவச் செய்ய தலிபான் ஆட்சியாளர்கள் பெரும் பாடுபடுகிறார்கள்!

எவ்வாறிருந்தாலும் அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிரான அதன் போராட்டத்தை சமய ரீதியில் சர்வதேச பகைமைக்கான தூண்டுகோளாக ஆக்கிவிடாமல் இருக்க வேண்டும்.

பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான போராட்டத்தை இஸ்லாத்துக்கும், கிறிஸ்தவத்திற்கும் எதிரான யுத்தமாக காண்பிக்க தலிபான்கள் எடுக்கும் முயற்சி ஓரளவேனும் வெற்றிபெறுமாயின் மதத்தின் பெயரால் இரத்தக்களரிகளை தோற்றுவிக்க காத்திருப்பவர்களுக்கு அது வாய்ப்பாக அமைந்து விடும்.

ஆசியாவில் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் இந்த நிலையின் எதிரொலி பாரதூரமாக அமைய வாய்ப்புண்டு.

எனவே சர்வதேச பயங்கரவாதம் என்ற பிரச்சனைக்கான அமெரிக்காவின் தீர்வ பிரச்சனையை விடவும் ஆபத்தான தீர்வாக அமைந்து விடக்கூடாது.

இந்த ஆபத்தை தவிர்க்க பெரிதாக, எதனையும் செய்ய வேண்டியதில்லை. வளைகுடா யுத்தத்தின்போது ஈராக்கின் பொதுமக்கள் நிலைகள் மீது தாக்கியதுபோல கண்மூடித்தனமாக இல்லாமல் தலிபான்களின் இலக்குகள் மீது மாத்திரம் தாக்குதல் நடத்துவதில் கவனமாக இருந்தாலே இது இஸ்லாத்திற்கு எதிரான போர் என்ற தலிபான்களின் பிரசாரம் அடிபட்டுப்போகும்.

எனவே ஏனைய யுத்தங்களில் போலன்றி இதில் மிகக் கவனமாக அடியெடுத்து வைக்க வேண்டிய கட்டாயத்தில் புஷ் நிர்வாகம் இருக்கின்றது!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# ஜே.வி.பி. கற்றுக்கொடுத்த பாடம்

இலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்கதொரு மாற்றம் நிகழ்ந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இதுவரை காலமும் இந்த நாட்டில் உள்ள இடதுசாரிகளினதும் சிவில் அமைப்புக்களினதும் அரச எதிர்ப்பு கோஷங்களால் சூடு பிடிக்கும் அரசியல் நிலவரத்தின் இலாபத்தை ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிதான் பெற்று வந்தது. பதவியிழந்ததும் எதிர்க்கட்சிகள் நீண்ட நித்திரையில் ஈடுபட சிவில் அமைப்புக்களும் தொழிலாளர்கள் வர்க்கமும் தமது உரிமைகளை வென்றெடுக்க தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபடும். இறுதியில் இதன் பிரதிபலனை இவ்விரண்டு பிரதான கட்சிகளில் ஏதேனும் ஒன்று பெற்றுக் கொள்ளும்.

இப்போது புதியதொரு திருப்பத்துக்கு நாம் முகம் கொடுத்து வருகின்றோம். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஏனைய சிறிய கட்சிகள், பொது நல அமைப்புக்களினதும் கொள்கை ரீதியிலான அழுத்தத்தை ஜே.வி.பி. தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டுள்ளது.

நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தி தமது ஆதரவாளர்களையும் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு பலி கொடுத்து, நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளியது ஐக்கிய தேசியக் கட்சி. அரசாங்கத்தின் இந்த நெருக்கடி நிலையை பயன்படுத்தி ஆட்சி பீட பங்குதாரர்களாக மாறிய ஜே.வி.பி. சுயாதீன ஆணைக்குழுக்களை பெற்றுக்கொள்ளவும் அமைச்சரவையை 20 ஆக குறைக்கவும் வழி செய்தது.

இத்தனைக்கு இந்த சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பில் ஜே.வி.பி.யிடம் நீண்ட கால நிலைப்பாடுகள் எவையும் காணப்பட்டதில்லை 2000ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஜே.வி.பி. சமர்ப்பித்த ஐந்தாண்டு திட்டத்தில் கூட இது தொடர்பில் தெளிவான கருத்தெதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

"பொலிஸாரினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அழுத்தங்கள் குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்ய நீதித்துறை அதிகாரிகளை உள்ளடக்கிய விசாரணை சபையொன்று ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் அமைக்கப்படும். நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்கவும், நீதிபதிகளின் நியமனம், இடமாற்றம் என்பவற்றை கையாளவும் சுயாதீன நீதிபரிபாலன சபை ஒன்று நிறுவப்படும்." இவ்வாறு தெளிவற்ற பூரணமில்லாத சில ஏற்பாடுகள் குறித்து மாத்திரமே ஜே.வீ.பி.யின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எவ்வாறெனினும் பொதுத் தேர்தலின் பின்னர் இந்த ஆணைக்குழுக்கள் குறித்த விடயத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கையில் எடுத்துக் கொண்டது. 11 பேர் கொண்ட தமது பாராளுமன்றக் குழுவின் ஆதரவை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பெற்றுக்கொடுக்க 100 நாள் காலக்கெடு விதித்து அதற்குள் 5 ஆணைக்குழுக்களும் நிறுவப்பட வேண்டுமென ரவூப் ஹகீம் நிபந்தனை விதித்தார். ஆனால் ரவூப் ஹகீமினால் சுயாதீன ஆணைக்குழுக்கள் எப்படிப் போனாலும் குறைந்தபட்சம் பொ.ஐ.மு.யுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளக்கூட முடியவில்லை.

ஹகீமை விட ஒரு ஆசனம் குறைவாக இருக்கும் ஜே.வி.பி. 3 வாரங்களுக்குள் 4 ஆணைக்குழுக்களை சட்ட ரீதியாக்கியிருக்கிறது. இதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்ப்பது இந்த நாட்டு சிறுபான்மை அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் பிரயோசனமாக அமையும்.

ஜே.வி.பி. தமக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தால் உச்சகட்ட பயனை பெற்றுக்கொண்டதெனக் கூறமுடியும். தமது கட்சி உறுப்பினர்களின் தனிப்பட்ட நலன்களை மாத்திரம் கவனிக்கும் கோரிக்கைகளாக இல்லாமல் ஒட்டுமொத்தமானதொரு சமூக ஜனநாயக நிபந்தனையை ஜே.வி.பி. முன்வைத்தது மாத்திரமன்றி எவ்விதமான பொருளாதார ஆசை வார்த்தைகளுக்கும் விட்டுக்கொடுக்காமல் தமது நிபந்தனையை நிறைவேற்றும் வரை உறுதியாக இருந்தது.

ஆனால் ரவூப் ஹகீமின் நடவடிக்கை இதற்கு தலைகீழாக காணப்பட்டது. ஒப்புக்காக 100 நாள் காலக்கெடு விதித்து விட்டு, தமது ஆதரவாளர்களுக்கு வெளிநாட்டு தூதுவர் பதவிகளும், திணைக்கள, நிறுவன தலைவர் பதவிகளும் கேட்டுக் கொண்டிருந்தார். இவ்வாறான தள்ளாட்டத் தலைமைகளை எலும்புத் துண்டுகளால் ஆட்டுவிக்க முடியும் என்பதை புரிந்து கொண்ட சந்திரிக்கா அம்மையார் ரவூப் ஹகீமின் காலக்கெடுவையும் நிபந்தனையையும் ஒரு பொருட்டாகவே கருதாமல் விட்டுவிட்டார். ஆனால் ஜே.வி.பி.யிடம் அந்தப் 'பருப்பு' வேகவில்லை.

உண்மையில் இதில் ரவூப் ஹகீமுக்கு மாத்திரமன்றி பேரம் பேசும் அரசியலில் ஈடுபடும் சிறிய அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் ஒரு சிறந்த முன்மாதிரி காணப்படுகின்றது.

எவ்வாறெனினும் சுயாதீன ஆணைக்குழுக்கள் அனைத்தும் நாட்டிலுள்ள சகல பிரச்சனைகளையும் தீர்த்து விடும் என்பது அர்த்தமல்ல. இதனை ஜே.வி.பி. தலைவர்கள் முதல் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

நோக்கங்களைவிடவும் பிரதிபலன்களையே முக்கியமானதாகக் கருதும் அரசியலில் இந்த சுயாதீன ஆணைக்குழுக்களினால் உருவாகும் புதிய சூழ்நிலைகளையும் தமது குறுகிய அரசியல் அபிலாஷைகளுக்கு பயன்படுத்த விடாமல் தடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு சிவில் சமுகத்தின் மீது சாட்டப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் ஜே.வி.பி.யுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 20 ஆவது ஷரத்தின்படி ஒரு வருட காலத்துக்கு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்ற விடயம் பலதரப்பட்ட நெருக்கடிகளின் பால் அரசாங்கத்தை இட்டுச்செல்ல காரணமாகி விடலாம் என்ற அச்சம் அரச உயர் மட்டத்தில் இருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதிகாரப் பகிர்வுப் பேச்சுவார்த்தைகளை தடை செய்யும் ஷரத்தை ஜே.வி.பி. கடுமையாக கைக்கொள்ளாதெனக் காண்பிக்க அரசாங்கம் முயற்சி மேற்கொண்டபோதும் அது பெருமளவில் வெற்றியளிக்கவில்லை.

நோர்வேயின் சமாதான மத்தியஸ்தத்தை முழுப் பலத்தையும் பயன்படுத்தி முறியடிப்போம் என ஜே.வி.பி. தலைவர்கள் அடிக்கடி கூறி வருகின்றனர். அதனால் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க ஜே.வி.பி. தடையாக இருக்காது என்ற பிரசாரம் எடுபடாமல் போய்விடுகின்றது. தமது ஏனைய நிபந்தனைகளைப் போலவே இதிலும் மக்கள் விடுதலை முன்னணி உறுதியாகவே இருக்கிறது. ஆனால் யுத்தத்தை நிறுத்தும் பொருட்டு மாத்திரம் புலிகளுடன் பேசுவதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லையென ஜே.வி.பி. கூறுகின்றது. அதிகாரப் பகிர்வின்றிய வெறுமையான ஒரு பேச்சுவார்த்தையில் ஈடுபட புலிகள் விரும்பப்போவதில்லை.

**எம்.பீ.எம். பர்ஸான்**

இந்நிலையில் சமாதானத்துக்கான அழுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்துவருவதை அவதானிக்க முடிகிறது. பாரிய அளவிலான வர்த்தகர்கள் முதல் சிறிய பெட்டிக்கடைக்காரர் வரையிலும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் சூழ்நிலையில் தாமதிக்க முடியாத சமாதான அழுத்தத்தை அரசாங்கம் எதிர்நோக்குவதை அவதானிக்கலாம்.

அத்துடன் கடந்த மாதம் 11ம் திகதியன்று இடம் பெற்ற அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதல்களின் பின்னர் ஏற்பட்டுள்ள சர்வதேச சூழ்நிலை சமாதானத்தின் அவசியப்பாட்டை மேலும் அதிகரிக்கச் செய்வதாகவே அமைகின்றது.

அமெரிக்கா ஆரம்பித்திருக்கும் சர்வதேச பயங்கர வாதத்துக்கு எதிரான போராட்டத்தில் புலிகள் இயக்கம் உள்ளடக்கப்படவில்லை என அந்த நாடு கூறுகின்றது. சர்வதேச விஸ்தரிப்புக்கொண்ட பயங்கரவாத அமைப்புக்களுக்கு எதிராக மாத்திரமே தமது போராட்டம் அமையுமென புஷ் தெரிவித்திருந்தார். புலிகளைப் பொருத்தமட்டில் அவர்கள் இலங்கைக்கு வெளியில் நடத்திய குறிப்பிடத்தக்க தாக்குதல்களில் ராஜீவ் காந்தி கொலை மாத்திரமே முக்கியமானது. அத்துடன் புலிகள் மதசார்பான ஒரு அடிப்படைவாத இயக்கமன்று. அதேபோன்று உலகமயமாக்கலையும், திறந்த பொருளாதார முறையையும் புலிகள் ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்களின் போராட்டம் அமெரிக்காவுடனோ, மேற்கு நாடுகளுடனோ அல்ல இலங்கை அரசாங்கத்துடன்தான் நடைபெறுகின்றது. இதனாலேயே அமெரிக்கா புலிகளை பயங்கரவாத இயக்கம் என அறிவித்தபோதும் சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் அவர்களை உள்ளடக்க மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

இவ்வாறான ஒரு எடுகோளின் கீழ் அமெரிக்காவின் 'சர்வதேச பயங்கரவாத' ரேடாரில் இருந்து புலிகள் இப்போதைக்கு விடுதலை பெற்றாலும்கூட அதற்குள் அகப்படாமல் இருக்க சமாதான பேச்சுவார்த்தைகளின் பால் ஆர்வம் காட்டவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இப்போதைக்கு சர்வதேச சமூகத்தின் பயங்கரவாதப் பார்வையில் இருந்து தப்பித்தாலும் கூட அடுத்த கட்டத்தில் தாம் இலக்கு வைக்கப்படுவதை தவிர்க்க தமது கடும் போக்கை தளர்த்த வேண்டிய தேவை புலிகளுக்கு உள்ளது.

இவ்வாறு நோக்குமிடத்து இரண்டு பிரிவினரும் இருவேறு வகையான அழுத்தங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். நன்னடத்தையில் ஈடுபட்டு ஜே.வி.பி.யின் நிபந்தனைகளை நிறைவேற்றும் அதேவேளை உள்நாட்டு வெளிநாட்டு சமூக பொருளாதார அழுத்தங்களை சமாளிக்கும் பொருட்டு சமாதான முயற்சிகளை எந்தத் திசையிலிருந்து ஆரம்பிப்பது என்ற சவாலுக்கு இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி முகம் கொடுத்துள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணையின் மூலம் அரசாங்கத்தை கவிழ்த்து அரசியல் ஆட்டத்தை முற்றாக திசை திருப்பும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது.

சமாதான முயற்சிகளை ஆரம்பித்தால் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவை பெற முடியும் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. அரசாங்கத்தை வீழ்த்த முடியும் என்பதை உறுதிப்படுத்தினால் இந்த சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு நமக்குக் கிடைக்கும் என்று ரணில் சிந்திக்கிறார்.

இந்நிலையில் ஜே.வி.பி.யின் நன்னடத்தை நிபந்தனைக்குள் இருந்து கொண்டே சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவை திரட்டும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சி சாத்தியப்படுமானால் ஜே.வி.பி.யை கைவிட்டு ஏனைய கட்சிகளுடன் சமாதான பிரயத்தனத்தில் இறங்க வாய்ப்புண்டு. ஆனால் தமிழ் முஸ்லிம் கட்சிகள் சமாதான முயற்சியை அரசு கைவிட்டுள்ளதாக குற்றம் சாட்டுகின்றனவே தவிர அந்த இடைவெளியை நிரப்ப தங்களால் உதவ முடியும் என்ற கோணத்தில் சிந்திப்பதாகத் தெரியவில்லை.



# அரசாங்கத்தின் இருபக்க நகர்வு

எப்படியிருந்தாலும் சமாதானத்தை புறக்கணித்து விட்டு 'நன்னடத்தையில் ஈடுபடுவது' இன்றைய உலக நிலவரத்துக்கு சாத்தியமற்றது என்பதை பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். அதனாலேயே சமாதான அழுத்தம் உச்ச கட்டத்தை அடையும் போது மாற்றுத் திட்டங்களுக்கு தம்மை தயார்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஸ்ரீ லங்கா சுதந்தரக் கட்சிக் கிளைகளின் புனரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன. மாவட்ட பிரதேச அமைப்பாளர்களை அழைத்து ஆலோசனை கூறும் பணியை ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்திருக்கிறார் இவ்வாறு மாற்றுத் திட்டத்துடனான நகர்வுகளிலேயே சகல அரசியல் கட்சிகளும் ஈடுபட்டுள்ளன.

'நன்னடத்தை காவலர்களான' ஜே.வி.பி.யினர் கூட மாவட்டம் தோறும் பொதுக்கூட்டம் நடத்தி தமது வெற்றிகளை கூறி வருகிறார்கள். இன்னும் சில வருடங்களுக்கு பொதுத் தேர்தல் நடக்காது என்ற கூற்றை பொய்யாக்கும் வகையிலேயே இவை அனைத்தும் அமைந்துள்ளன.


இப்படியிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை கையளித்துள்ளது. இது எதிர்வரும் 9ஆம் திகதி அல்லது அதற்கு அடுத்து வரும் நாள் ஒன்றில் விவாதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இம்முறை நம்பிக்கையில்லா பிரேரணை முன்னர் போன்று பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பெரும் பிரச்சனையாக வரப்போவதில்லை. ஜே.வி.பியின் ஆதரவு கிடைக்கும் என்பது ஒரு புறமிருக்க மிகவும் ஆபத்தான நிலைமை தோன்றும் பட்சத்தில் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தையும் ஒக்டோபர் 10ம் திகதியோடு ஜனாதிபதி பெற்று விடுவார்' ஆனாலும் ஒருவகை தோல்வி மனப்பான்மையோடு தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு உருவாக்கவே ஐ.தே.க. முயற்சிக்கிறது.

# அண்டை மண்டலத்தில்....

**போ**யஸ் தோட்டத்தில் நடந்த பெரும்போராட்டத்திற்கு பின்னரே புதிய முதல்வரை தேர்ந்தெடுத்துள்ளார் ஜெயலலிதா. ஒரு காலத்தில் ஜெயலலிதா எதிர்ப்பாளராக இருந்த பன்னீர் செல்வம் முதல்வராக முடி சூடுவதற்கு சசிகலா குடும்பமே முழு முதற் காரணம் என்று கட்சி வட்டாரங்கள்



## ஜெயலலிதா எதிர்ப்பாளரான பன்னீர்செல்வம் முதலமைச்சராக சசிகலாவே காரணம்



கூறுகின்றன. சசிகலா குடும் பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரை முதல்வராக தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை நிராகரித்த ஜெயலலிதா, கடைசியில் அக்குடும்பம் கை காட்டியவருக்கே ஆட்சி அதிகாரத்தை தாரை வார்த்துத் தந்துள்ளார் என்கின்றனர்.

அடுத்த முதல்வராக யாரை தேர்ந்தெடுக்கலாம் என்ற ஆலோசனை மட்டும் போயஸ் தோட்டத்தில் ஐந்து மணி நேரம் இடைவிடாமல் நடந்துள்ளது. சசிகலா குடும்பத்தினருடன் ஜெயலலிதா நடத்திய இந்த தொடர் ஆலோசனையின் போது, நம்பிக்கைக்குரிய விசுவாசி என்ற அடிப்படையில் சசிகலா குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரையே முதல்வர் நாற்காலியில் அமர்த்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்காக அக்குடும்பத்தைச் சேர்ந்த இளவரசி, அனுராதா, பிரபா, சுந்தரவதனம் ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. இதில் இளவரசிக்கு தான் அதிக வாய்ப்பு இருப்பதாக ஆரம்பத்தில் பேசப்பட்டது. ஆனால், அவருக்கு ஜாதகப்பலன்கள் சரியில்லை என்பதால் பட்டியலில் இருந்து அவரது பெயர் நீக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் சுந்தரவதனம், அனுராதா, பிரபா, பாஸ்கரன் ஆகியோரில் ஒருவரே தேர்ந்தெடுக்கப்படுவார் என்று நம்பத்தகுந்த தகவல்கள் வெளிவரத் துவங்கின. பகல் 3 மணிவரையில் இந்த தகவல் நீடித்தது. ஆனால், அதற்கு பிறகு தான் அந்த முடிவை ஏற்க மறுத்துள்ளார் ஜெயலலிதா. வெளியில் இருந்து ஒருவரை அதாவது சட்டமன்ற உறுப்பினராக இல்லாத ஒருவரை தேர்ந்தெடுத்தால், கவர்னர் பதவி பிரமாணம் செய்து வைப்பதில் சிக்கல்கள் வரலாம். அதிலும் சசிகலா குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் வழக்கு, விசாரணை ஏதாவது இருக்கிறதா என்று விசாரணையில் கவர்னர் இறங்கக் கூடும் என்ற பிரச்சனை எழுப்பப்பட்டுள்ளது.

அதற்கு பிறகு தான் எம்.எல்.ஏ.க்களாக இருப்பவர்களில் ஒருவரை தேர்ந்தெடுக்கும் முடிவுக்கு ஜெயலலிதாவும், சசிகலா குடும்பத்தினரும் வந்துள்ளனர். தற்போது எம்.எல்.ஏ.,வாக இருப்பவர்களில் யார் சிறந்த விசுவாசி என்பதை அடையாளம் காணும் முயற்சியில் சசிகலா குடும்பத்தினர் இறங்கியபோது கிடைத்தவர் தான் இந்த பன்னீர் செல்வம்.

பெரியகுளத்தில் சாதாரண நகரச் செயலாளராக அரசியல் வாழ்க்கையை துவங்கிய இவர் அப்படியொன்றும் தீவிரமான ஜெயலலிதா விசுவாசி அல்ல என்று கூறப்படுகிறது. எம்.ஜி.ஆர்., காலத்தில் மந்திரியாக இருந்தவர் ராஜா முகமது. பெரியகுளத்தைச் சேர்ந்த ராஜா முகமதுவின் அரசியல் ஆதரவாளராக அந்த காலத்தில் இருந்தவர் பன்னீர் செல்வம்.

எம்.ஜி.ஆர்., மறைவுக்கு பிறகு 88ம் ஆண்டு கட்சி உடைந்த போது, ஜானகி தலைமையிலான அ.தி.மு.க.வில் சேர்ந்தார் ராஜா முகமது. அவரைப் பின்பற்றி பன்னீர் செல்வமும் ஜானகி அணியில் சேர்ந்தார். ஜானகி அணியில் இருந்த போது தான் பன்னீர் செல்வத்திற்கு நகரச் செயலாளர் பதவியே கிடைத்தது. அந்த கால கட்டத்தில் ஜெயலலிதாவின் தீவிர விசுவாசிகளாக இருந்தவர்கள் மட்டுமே அ.தி.மு.க., ஜெ., அணியில் சேர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்கு பிறகு 89ம் ஆண்டு இரு அணிகளும் இணைந்து ஜெயலலிதா தலைமையில் ஒரே கட்சியான போது தான் ஜெயலலிதா தலைமையை ஏற்கத் துவங்கினார் பன்னீர் செல்வம். அப்போது மிகவும் பிரபலமாக இருந்த சேடபட்டி முத்தையாவின் ஆதரவாளர் கூட்டத்தில் ஒருவராக பன்னீர் செல்வம் சேர்ந்தார்.

அதன் காரணமாக மாவட்டச் செயலாளராக இருந்த ராமசாமிக்கு மிகவும் நெருக்கமானார். ஆனாலும், கட்சி தலைமையிடம் நேரடி தொடர்போ, பழக்கமோ எதுவும் இல்லாதவராக தான் இருந்தார்.

இந்நிலையில் 96ம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் வந்த போது, பெரியகுளம் நகராட்சித் தலைவர் பதவிக்கு அ.தி.மு.க., சார்பில் போட்டியிட சீட் கேட்டார் பன்னீர். அப்போது மாவட்டச் செயலாளர்களே முடிவு செய்யலாம் என்ற நிலை இருந்ததை அடுத்து, ராமசாமியின் தீவிர ஆதரவாளரான பன்னீர் செல்வத்திற்கு வாய்ப்பு கிடைத்தது. நகராட்சி சேர்மன் ஆனார்.

பின்னர் 1999ம் ஆண்டு லோக்சபா தேர்தல் வந்தபோது தான் தினகரனின் நட்பு இவருக்கு கிடைத்தது.

பெரியகுளம் எம்.பி., தேர்தலில் போட்டியிட்ட தினகரனுக்கு, தனக்கு சொந்தமான வீட்டை கொடுத்தார் பன்னீர் செல்வம். அந்த வீட்டில் தங்கியிருந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் தினகரன். அப்போது ஜெயலலிதாவின் அரசியல் வாரிசாக தினகரன் சித்தரிக்கப்பட்டார்.

அதன் காரணமாக, கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, நகராட்சித் தலைவர் என்ற முறையில் தேர்தல் செலவுக்காக நிறைய வசூல் செய்து தினகரனுக்காக செலவழித்தார். இதனால் தினகரனுக்கு நெருக்கமானவர்களில் ஒருவராக மாறினார்.

அந்த விசுவாசத்தை அப்படியே தக்க வைத்துக் கொண்டார். அதன் பலன் அடுத்த ஆண்டில் மாவட்டச் செயலாளர் பதவியாக தேடி வந்தது. அதுவரை மாவட்டச் செயலாளராக இருந்த சையத்கானுக்கு எதிராக காய்களை நகர்த்தி, தினகரன் ஆசி மூலம் அந்த பதவியை கைப்பற்றிக் கொண்ட பன்னீர் செல்வம் இன்று வரை அதையும் கைக்குள் வைத்திருக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது.

அதோடு நிற்கவில்லை தினகரன் உதவி. 2001ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் பன்னீர் செல்வத்தை பெரியகுளம் வேட்பாளராக்கினார் தினகரன்.வெற்றி பெற்று எம்.எல்.ஏ.வான பன்னீர்செல்வத்திற்கு அமைச்சர் பதவியும் கிடைத்தது. பெரியகுளம் எம்.பி.,யாக இருக்கும் தினகரன், அந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலும், தனது ஆதரவாளர்கள் என்ற முறையிலும் பன்னீர் செல்வத்தையும், சேடபட்டி துரைராஜையும் அமைச்சராக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார்.

அவரது சிபாரிசு ஜெயலலிதாவால் ஏற்கப்பட்டது. முதல் முறையாக சட்டமன்றத்துக்குள் நுழைந்த பன்னீர் செல்வத்திற்கு மிகவும் முக்கியமான வருவாய்த்துறை அமைச்சர் பதவி தரப்பட்டது.

இப்போது ஜெயலலிதா தலைமைக்கு ஏற்பட்ட சிக்கலை பயன்படுத்திக் கொண்டு, தனது நெருங்கிய ஆதரவாளரான பன்னீர் செல்வத்தை முதல்வர் பதவிக்கு உயர்த்தியுள்ளார் தினகரன்.

இரண்டாயிரத்தில் மாவட்டச் செயலாளர் பதவி, 2001ல் எம்.எல்.ஏ., அமைச்சர் பதவி, அதைத் தொடர்ந்து இப்போது முதல்வர் பதவி. புதிய முதல்வர் பன்னீர் செல்வத்திற்கு அடுத்தடுத்து கிடைத்த இந்த பதவிகள் அனைத்திற்கும், அவரது தினகரன் விசுவாசமே முக்கிய காரணம் என்கிறது கட்சி வட்டாரம். ▭

### தமிழக முதலமைச்சர்கள் இதுவரை...

| | |
|---|---|
| அ.சுப்பராயலு ரெட்டியார் | 1920–21 |
| பனகல் ராஜா | 1921–23;1923–26 |
| பி.சுப்பராயன் | 1926–30 |
| பி.முனுசாமி நாயுடு | 1930–32 |
| பொப்பிலி ராஜா | 1932–37 |
| பி.டி.இராசன் | 1936 (ஏப்ரல்–ஆகஸ்ட்) |
| கே.வி.ரெட்டிநாயுடு | 1937 (ஏப்ரல்–ஜூலை) |
| சி.இராஜகோபாலாச்சாரியார் | 1937–39 |
| டி.பிரகாசம் | 1946–47 |
| ஓ.பி.இராமசாமி ரெட்டியார் | 1947–49 |
| பி.எஸ்.குமாரசாமி ராஜா | 1949–52 |
| சி.இராஜகோபாலாச்சாரியார் | 1952–54 |
| கு.காமராஜ் | 1954–57;1957–63 |
| எம்.பக்தவத்சலம் . | 1963–67 |
| சி.என்.அண்ணாதுரை | 1967–69 |
| மு.கருணாநிதி | 1969–71 |
| | (1971–76;1989–91 |
| எம்.ஜி.இராமச்சந்திரன் | 1977–80; |
| | 1980–84;1985–87 |
| ஜானகி இராமச்சந்திரன் | 1988 (ஜனவரி 7–30) |
| ஜெ.ஜெயலலிதா | 1991–1996 |
| மு.கருணாநிதி | 13.5.1996–13.5.2001 |
| ஜெ.ஜெயலலிதா | 14.5.2001–21.9.2001 |
| ஓ.பன்னீர்செல்வம் | 21.9.2001 |

## புலிகளின் பகுதிகளில் வெடிக்கும் 'மர்ம'க் குண்டுகள்

**பு**லிகள் இயக்கத்தில் கேணல் தரத்திலான முக்கியஸ்தர் சங்கர் (வைத்திய லிங்கம் சொர்ணலிங்கம்–வயது 52) கடந்த வாரம் ஒட்டி சுட்டானில் வைத்து கண்ணி வெடித்தாக்குதலில் கொல்லப்பட்டதை யடுத்து புலிகளின் உள்வீட்டுப் பிரச்சனை தீவிரமடைந்திருப்பதாக அரச தரப்பு பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ளது.

அண்மைக்காலமாக புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அந்த இயக்க முக்கியஸ்தர்களை குறிவைத்து பல தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அவற்றில் சில இலக்குத்தவறாத குண்டுகளாக வெடித்தபோதிலும் பல தாக்குதல்கள் தோல்வியில் முடிந்தன.

புலிகள் இயக்கத்தின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனை குறிவைத்து கடந்த மே மாதம் 15ம் திகதி மாங்குளத்திற்கு வடக்கே உள்ள கொக்காவில் என்ற இடத்தில் புதைக்கப் பட்டிருந்த கண்ணிவெடியில் இருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

எரிக்சொல்ஹெய்மை சந்திப்பதற்காக சென்ற வேளையிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றது. சமாதான முயற்சியை குழப்ப அரச படையினரே இந்த தாக்குதலை நடத்தியதாக புலிகள் குற்றஞ் சாட்டியிருந்தனர். புலிகள் இயக்கத்துக்குள் இருக்கும் சமாதானத்தை விரும்பாத ஒரு பிரிவினரின் வேலையே இதுவென பதிலுக்கு அரசாங்கம் கூறியது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பத்துக்கும் மேற்பட்ட தாக்குதல்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கடந்த நான்கு மாத காலத்துள் நடந்துள்ளன. இவற்றுள் நெடுங்கேணியில் நடந்த தாக்குதல் ஒன்றில் இருந்து புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் பால்ராஜ் உயிர் தப்பினார். மன்னார் நாச்சிக் குடாவில் பஜிரோ வாகனம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் லெப்டினன்ட் கேணல் கங்கை அமரனும் அவரது குடும்பத்தினரும் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவங்களைத் தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுடனான போக்குவரத்து மார்க்கங்கள் பல துண்டிக்கப்பட்டன. கண்ணி வெடிகளுடன் பிடிபட்ட பொது மக்கள் பலர் அவற்றை வெடிக்கவைத்தே கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் இவ்வளவுக்குப் பின்னரும் கடந்த வாரம் சங்கர் பயணம் செய்த வாகனம் கிளைமோர் வெடியில் சிக்கியது.

இம்முறை சங்கரின் கொலைக்கு அரச தரப்பில் இருந்து வித்தியாசமானதொரு காரணம் கூறப்பட்டுள்ளது. அதாவது ஒசாமா பின்லேடனின் அல்குவாதா அமைப்புடன் புலிகளுக்கு இருக்கும் தொடர்பை மறைப்பதற்காகவே இவர் புலிகளால் கொல்லப்பட்டிருக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

சங்கர் கனேடிய தொழிநுட்ப நிறுவனம் ஒன்றில் விமானம் ஓட்டும் பயிற்சி பெற்றவர். ஆகாய விமானம் சார்ந்த துறையில் பொறியியல் பட்டம் பெற்றவர் இவர் பயிற்சி பெற்ற நிறுவனத்தில் அல்குவாதா உறுப்பினர்களும் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அமெரிக்கா மீதான தாக்குதலை நடத்தியவர்களுக்கும் சங்கருக்கும் தொடர்பிருந்ததாகவும் சி.ஐ.ஏ.விசாரணைகளில் இந்த விஷயம் வெளியில் வருவதை தடுப்பதற்காகவே சங்கர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் அரசாங்க ஊடகங்கள் பிரசாரமொன்றை முன்னெடுத்துச் செல்கின்றன.

மறுபுறத்தில் புலிகள் இயக்கத்துக்குள் தீவிரமடைந்திருக்கும் தலைமைத்துவ போட்டி காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகவும் கூறுகிறார்கள். இதனையும் அரச சார்பு ஊடகங்களே தெரிவித்து வருகின்றன. இவ்வாறு நோக்குமிடத்து புலிகளின் முக்கிய பிரமுகர்கள் மீதான தாக்குதல்களுக்கு அரசாங்கமே முரண்பாடான காரணங்களை கூறிக்கொண்டிருக்கிறது.

படையினரின் ஊடுருவல் அணிகளே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சங்கர் மீதான தாக்குதலுக்கும் படையினருக்கும் சம்பந்தமில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாதிலக ஏ.எ.ப்.பி. செய்திச் சேவைக்கு கூறியிருந்தார். இதனை யார் செய்திருந்தாலும் இது இராணுவ தரப்புக்கு கிடைத்த வெற்றியே என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலி உறுப்பினர் ஒருவரை கொலை செய்ததை இராணுவம் ஏன் மறுக்க வேண்டும் என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. உயிருடனிருப்பவர்களையே கொன்று புதைத்து விட்டதாக கதை விடும் இராணுவ செய்திப் பிரிவு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி இத்தகைய முக்கிய பிரமுகர்களை கொன்றால் அதை பெருமளவில் விளம்பரம் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

'எமது இராணுவத்துக்கு இவ்வாறான தாக்குதல்களை நடத்தும் கெட்டித்தனம் இருக்குமாயின் புலிகள் எப்போதோ அழிக்கப்பட்டிருப்பார்கள்' என்று தமிழ்ச் செல்வன் மீதான தாக்குதலின் போது சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் கூறியிருந்தார். இந்தக் கூற்றில் உண்மையில்லை எனக்கூற முடியாது.

அவ்வாறாயின் இந்தக் கொலைகளுக்கு யார் காரணம் என்ற கேள்விக்கான விடை புதிராகவே இருக்கின்றது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு பணம் கொடுத்து இவ்வாறான தாக்குதல்களை படைத்தரப்பு மேற்கொள்ளலாம் என்று ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றது.

கைக்குண்டுகளை வைத்திருந்த 9 பேர் கடந்த மூன்று மாதங்களுக்குள் புலிகளின் மரண தண்டனைக்கு இலக்கானார்கள். இத்தகைய மரண தண்டனைகள் ஏனையவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கும்விதத்தில் மின்கம்பங்களில் கட்டப்பட்டு பகிரங்கமாகவே வழங்கப்படுகின்றன. அதுவும் குண்டுடன் கைது செய்யப்பட்டால் எவ்வித விசாரணையுமின்றி அதே குண்டு அவரது உடலில் கட்டி வெடிக்க வைக்கப்படுகின்றது. இதனை கண்முன்னால் பார்த்துக் கொண்டு மேலும் மேலும் இத்தகைய நடவடிக்கைகளில் பணத்துக்காக இறங்க சாதாரண பொதுமக்கள் முன்வருவார்களா என்ற சந்தேகமும் எழுப்பப்படுகின்றது.

மறு புறத்தில் மாத்தையாவுக்கு விசுவாசமானவர்களில் உயிர் தப்பிய சிலர் பிரபாகரனின் தீவிர ஆதரவாளர்களை குறி வைப்பதாக ஒரு கதை உலாவருகின்றது. இது எந்தளவுக்கு உண்மையானது என்பதை உறுதிப்படுத்த முடியாது.

எவ்வாறிருந்தாலும் கிளைமோர் குண்டுகளையோ கண்ணி வெடிகளையோ குறிப்பிட்ட நபரை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த ஒரு சாதாரண பால்காரனாலோ சலவைக்காரனாலோ முடியாது. ஓரளவுக்கேனும் குண்டுகளை கையாள்வது குறித்த அறிவை பெற்றிருப்பது அவசியம். அத்துடன் இந்த குண்டுகளை இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வன்னிக்குள் கொண்டு செல்வதுகூட இலகுவான காரியமல்ல. அதனால் அவை உள்ளேயிருந்துதான் பெறப்படவேண்டும்.

கேணல் சங்கர் 1980ம் ஆண்டுகளில் கனேடிய எயார் லைன்ஸில் கடமையாற்றியவர் 1983 ஜூலை கலவரத்தின் பின்னர் புலிகள் இயக்கத்தில் இணைந்த இவர் அந்த இயக்கத்திற்காக பல முக்கிய பணிகளை ஆற்றியவர். பிரபாகரனின் நெருங்கிய சகாவாக இருந்த சங்கர் எரிக்சொல்ஹெய்ம் வன்னி சென்றபோது மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.

புலிகளின் முக்கிய படையணிகள் பலவற்றின் உருவாக்கத்துக்கு காரணமாக இருந்த சங்கர் கடற்புலிகளின் தளபதியாகவும் ஆயுதக் கொள்வனவுக்கான பொறுப்பாளராகவும் கடமையாற்றியவர்.

கேணல் சங்கர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். இவருடைய ஐந்து சகோதரர்களில் மூத்த சகோதரரான வை.ஜீவானந்தன் (டாக்டர்) தற்போது பிரிட்டனில் இருக்கிறார். சங்கர் (சொர்ணலிங்கம்) 2ஆவது. 3ஆவது சகோதரனான மனோகரன் (கப்டன் கரன்) 1986ல் குமரப்பா புலேந்திரன் மற்றும் 11 பேருடன் பலாலி படைத்தளத்தில் சயனைட் அருந்தி உயிரிழந்தவர். நான்காவது சகோதரனான சிறிதரன் பொறியில் பீட மாணவனாக இருந்த போது 1980 களில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சில் உயிரிழந்தார். ஐந்தாவது சகோதரன் விசாகரன் (லெப்.சித்தத்) 1987 இல் கைதடியில் இடம்பெற்ற பவுசர் குண்டு வெடிப்பில் பொன்னம்மான், கேடில்ஸ் ஆகியோருடன் உயிரிழந்தார். ஆறாவது சகோதரனான உதயகுமார் அல்லது சுதன், மன்னார் அடம்பனில் இடம் பெற்ற மோதலில் உயிரிழந்தார். ■

## மூன்றாமாண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 03 - 1936



மறைவு 05 - 10 - 1998

### கந்தசாமி இரத்தினம்

அம்மா நீ மறைந்தாலும்
எம் மனதை விட்டு மறையவில்லை!
பார்க்குமிடமெல்லாம் உன்னுருவம் தாயே
நீக்கமற நிறைந்திருக்கும்!
பிரிந்து சென்று மூவருடங்கள் ஆனாலும் தாயே!
பரம் பொருளாய் ஆன உன்னை
சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்!

***உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்***

பாசமிகு மகன்மார், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர்கள்.

தகவல்: அப்பன்

---

## சுவிஸ் வாழ் யாழ் மக்களுக்கு மீண்டும் ஓர் வாய்ப்பு!

### ஜோதிட மேரு சுவிஸ் விஜயம்

பிரபல வெற்றிலை ஜோதிடரும், ஜோதிட கலாநிதியுமான இணுவையூர் R.சத்தியமூர்த்தி குருக்களும் அவரது புதல்வர் சிவகுமாரசர்மாவும் சுவிற்சர்லாந்திற்கு விஜயம் செய்துள்ளனர். இச்சந்தர்ப்பத்தினை வெற்றிலை ஜோதிடம் பார்க்க, திருமணப்பொருத்தம் மற்றும் ஜாதகக் குறிப்புகளை கணித்துப் பெற்றுக்கொள்ளவும், கிரகதோஷ நிவர்த்திகள், சாந்தி பூஜைகளை செய்து கொள்ள மற்றும் தெய்வீக யந்திரங்கள், மூலிகைகளை பெற்றுக்கொள்ளவும் பயன்படுத்தலாம்.

முன்கூட்டிய பதிவுகளுக்கு.

Sri Maha Vishnu Jothidalaya
Main street,
Vishnupuram
Kotagala. T.P: 051-23530

No. 24A,6/2 Initium Road,
Dehiwala.
T.P : 01-733739,
Cell: 077-796504

Calling Bell No - 18
No - 40
Luisen Strassa
Zurich
Switzerland
Tel: 795798651
31-9716793

---

சுவிஸ் பேர்ண் மாநகரில்.

## Suji Jewellery Works

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

K. Thurai
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.

T.P. 0041-31-8191837

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*

---

சுவிஸ். பேர்ண் மாநகரில் புதிய உதயம்.

## விதுஜா ஏசியன் சொப் வாக் ஹவுஸ்

காசே பசாஜ் .8-3011. பேர்ண். சுவிற்சர்லாந்து.

மைக் டொனால்ட். மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்திருக்கும் கட்டிட 1ம் மாடியில்.

எம்மிடம் இந்தியா, சிங்கப்பூர் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகளுக்குரிய கோட், சூட், குருத்தா, ரீசேட், சோட்ஸ், கவுன், பஞ்சாபி, வெல்வெட் பஞ்சாபி, பெண்களுக்கான பஞ்சாபி, சுரிதார், சோலி, வெல்வெட் பஞ்சாபி, மற்றும் புடவைகள், பனாரஸ், கோலம், அபூர்வா, காஞ்சிபுரம், மைசூர்சில்க், ரூபிகுமின், சமர்குல்ட், ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, என பல்வேறுபட்ட தெரிவுகளை பெற்றுக் கொள்ளவும் மற்றும் பழைய புதிய திரைப்பட பிரதிகளையும் நாடகப்பிரதிகளையும் 2 str வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும். மற்றும் அனைத்து மளிகைச் சாமான்களையும் அன்பளிப்பு பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் எம்மை நாடுங்கள். தொலைபேசி அட்டைகள் யாவும் 26 str மட்டுமே. மற்றும் சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22 கரட். தங்கநகைகள் எங்கள் விற்பனையில்.

தொடர்புகளுக்கு ஆனந்தன் சுவிஸ் T.P 031 311 35 10 or 076 530 67 55 or 031 992 82 67.

---

## மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன் - எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

T.P: 00941 342463 , 00941 470615, தேவைகளுக்கு:-

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கெளரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

---

## தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்

P.T.C 14, Covington Road, Batticaloa.

---

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஒக்டோபர் 20-25 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் ஒக்டோபர் 27,28 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் ஒக்டோபர். 06, 07 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஒக்டோபர் 13, 14 திகதிகள்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

---

## அற்புத சித்தர் மாந்திரீகம்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் அதில் உடன் வெற்றிகாண மட்டக்களப்பு-மலையாள-சோதிட மாந்திரீகச் சித்தர். பேராசிரியர்-கலாநிதி. "சக்திசரவணா" வுடன் தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம், குடும்பப் பிணக்கு, தொழில் விருத்தி, திருமணத் தடங்கல், பிரயாணத்தடை, சத்துரு ஜெயம் முதலான சகல விடயங்களிலும் நிச்சயம் வெற்றி பெறலாம். ஏழு தலைமுறை பாரம்பரியமும், 30 வருட சுய அனுபவ ஆற்றலும் கொண்ட "சக்தி சரவணா"வினால் நினைத்த காரியம், ஜாதகபலன், சோதிட அருள்வாக்கு, எண்சோதிடம் முதலான பிற சோதிட சேவைகளும் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரிதசேவை மேற்கொள்ளப்படுகிறது. தபால் மூலம் தொடர்பு கொள்ளும் உள்ளூர் அன்பர்கள் 20 ரூபா முத்திரையுடன் தொடர்பு கொண்டு பதில் பெறலாம். இரகசியங்கள் அந்தரங்க மாகப் பேணப்படும். காலதாமதம்-பணவிரயம் இன்றி உடன் பரிபூரண வெற்றி பெற தொடர்பு கொள்ளுங்கள். நேரில் சந்திக்க- காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை. **தொடர்பு** (வியாழன் விடுமுறை)

HON.PROF.DR.SHAKTHY SARAVANA;
Majestic Inn, Room-203
49, Galle Road, Colombo-04.
556322, 556323

தொலைபேசி தொடர்பு காலை 9முதல் இரவு 9 வரை வெளிநாட்டினர் தொடர்பு கொள்ள
*0094-1 556322, 0094-1 556323*

---

## உங்கள் பலன் எப்படி?

### ஏ.சுலேமான் - A. Suleman

உங்கள் சொந்தப் பலன் எப்படி? கைரேகை, நட்சத்திரம், பிறந்த நேரக் குறிப்பு பார்த்து, பலன்கள் சொல்வோம். காதல் கைகூட வைப்பது, வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குவது, விரும்பியவரை மணமுடித்து வைப்பது, கணவன்-மனைவி பிரச்சனைகளைத் தீர்ப்பது.

- ⋆ நீண்ட காலமாக நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்
- ⋆ பரீட்சை பற்றிய பதட்டமா?
- ⋆ பிசாசு, சூனியம், சாபக்கேடு துர் அதிஷ்டங்களால் இடர்பட்டு அழுந்துகிறவர்களுக்கு ஒரே பார்வையில் ஆறுதல் கிடைக்கும்.

பிறந்த திகதி, பெயர்-மொழி-தமிழர்-சிங்களவர் எவராயினும் எல்லோர் பிரச்சனையையும் தீர்த்து வைப்பார். முன்னதாக (காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை) நேரம் நிர்ணயிக்க வேண்டும். அல்லது எழுதலாம்.

A. SULEMAN ,
78 PLASHET GROVE
EAST HAM LONDON.
T.P. 02085860922

---




## மூன்றாமாண்டு திருமண வாழ்த்து

05.10.2001

### நித்தி- ஜீவா

திருகோணமலை உவர்மலையைச் சேர்ந்த நித்தியானந்தன் ஜீவந்தினி தம்பதியினர் இன்று 05.10.2001 தமது மூன்றாவது திருமண நாளை நினைவு கூறுகின்றனர்.





யுகவிளக்குக் கோர் ஒளியாய்
மணவிளக்கேற்றிய ஜீவ நித்தியே...!

ஒரு நல்ல திருமணத்தின் புனிதம்
இருவரின் ஒன்றிணைந்த மனமும்
புரிந்துணர்வும், விட்டுக்கொடுக்கும்
மனப்பான்மையும் மட்டுமே.

இவற்றை மறந்திடாது உங்கள் காதல் பூஞ்சோலையை
அன்புடனும் இன்பமாகவும் கடந்த வருடங்கள் போன்றே
வரும் வருடங்களிலும் இனிமையாகவும் சந்தோஷமாகவும்
பல்லாண்டு காலம் வாழ்க வளர்க என வாழ்த்தும்

திருமதி நவரட்ணம், திரு -திருமதி பவானந்தன், கஜேந்தினி (கொழும்பு), திருமதி குமாரலிங்கம் (சுவிஸ்), ராஜீவன் (ஜேர்மனி), திரு -திருமதி குழந்தைவேலு, திரு -திருமதி சண்முகநாதன்(திருகோணமலை), சிவானந்தன், தயானந்தன் (கனடா), தயா மாமா, மாமி (சுவிஸ்), மாலா சித்தி-சித்தப்பா (ஜேர்மன்) மற்றும் உறவினர், நண்பர்கள்.

தகவல்: கணவன்- ந.நித்தியானந்தன்(கனடா) T.p. 514 9710027

# வடக்கு-கிழக்கின் அரசியல் அபிலாஷைகளை உறுதி செய்ய வேண்டிய தமிழ் கட்சிகள்

அலசுவது - இராஜதந்திரி

இலங்கையின் அரசியலமைப்பில் பதினேழாவது திருத்தச்சட்டம் நிறைவேறியதையடுத்து, அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பவை பற்றியே பெரிதும் ஆராயப்பட்டுவருகின்றது.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தபோது கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு, பிரிட்டிஷ் வெஸ்ட் மின்ஸ்டர் **(West Minster)** பாராளுமன்ற நடைமுறைகளைப் பெரிதும் ஒத்ததாக இருந்தது. சர்வாதிகாரப் போக்குடைய ஆட்சிமுறைக்கு அது இடந்தந்திருக்கவில்லை.

பாராளுமன்ற ஆட்சியையே பெரிதும் உறுதிசெய்ததுடன், இலங்கையின் ஏனைய நிர்வாகவிடயங்களையும் சுமுகமாகப் பரிபாலனஞ்செய்வதை அனுமதிப்பதாகவும் அந்த அரசியலமைப்புக் காணப்பட்டது.

ஆயினும் சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியலமைப்புக்கு 1971ம் ஆண்டு முதல்தடவையாக வேட்டுவைக்கப்பட்டது. இந்த அரசியலமைப்பின் அறிமுகத்தோடு இலங்கையில் ஜனநாயக நிறுவனங்கள் பலவற்றின் செயற்பாடுகளில் அரசியலின் அசுத்தமான கரங்கள் பதியலாயின.

தெளிந்த நீரோடைபோன்றிருந்த பத்திரிகைச் சுதந்திரமும் களங்கமடையலாயிற்று. ஏரிக்கரை **(Lake House)** பத்திரிகை நிறுவனம் அரசமயமாகியது. இதுதவிர ஏனைய துறைகள் பலவற்றிலும் அரசியல் தலையீடுகள் தோன்றலாயின.

இந்த நிலைமையை மேலும் மோசமாக்குவதாகவே 1978ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட ஜே. ஆர். ஜயவர்த்தனவின் அரசியலமைப்புக் காணப்பட்டது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை என்ற ரீதியில் தனிநபர் ஆட்சி வலுப்பெற்றதோடு, பாராளுமன்றம் ஒரு 'பகடைக்காயாக' மாற்றம் பெற்றது.

நீதிச்சேவை, பொலிஸ் சேவை, நிர்வாகச்சேவை உட்பட அனைத்து முக்கிய துறைகளுமே நிறைவேற்று அதிகாரமுறைமையின் பிடிக்குள் சிக்கலாயின. இதன்மூலம் மக்கள் ஒரு சுதந்திரமான அப்பழுக்கற்ற நிர்வாக நடைமுறைகளுக்குட்படுவதிலிருந்து வெகுதூரம் விலகிச்சென்றிருந்தனர்.

இலங்கையில் நாடுதழுவிய ரீதியில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை, நிர்வாகச் சீர்கேடுகளை உருவாக்கிய அதேசமயம், வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் எதிர்நோக்கிய அரசியல் நெருக்கடிகளை மேலும் பூதாகரமாக்கி விடுவதாகவும் அமைந்திருந்தது.

கண்மூடித்தனமான கைதுகள், அடிப்படை மனித உரிமை மீறல்கள், இராணுவ ரீதியான நிர்வாக நடைமுறைகள் என்பவை வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் விரிவடைவதற்கும் ஜே. ஆர். ஜயவர்த்தனவினால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பே மூலகாரணமாக அமைந்திருந்தது.

இத்தகைய அரசியலமைப்பைத் தூக்கி எறிந்து முற்றுமுழுதான பாராளுமன்ற ஆட்சிமுறை கொண்டுவரப்பட வேண்டியதன் தேவை அனைத்துத் தரப்பினராலும் உணரப்பட்டிருந்தது. இருப்பினும் நடைமுறைச் சாத்தியமான முறையில் எதுவுமே கைகூடாமலேயே இருந்துவந்தது.

ஆனால் தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கு(ஜே.வி.பி.)மிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம், அதனூடாக ஏற்பட்டுள்ள பதினேழாவது திருத்தச்சட்டம் ஆகியவை புதிய நிர்வாக நடைமுறைகளுக்கு இடமளிக்கும் அறிகுறிகளைக் காண்பிக்கின்றன.

இருப்பினும் முழு அளவிலான அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு தற்போது இருந்துவருகின்ற நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை நீக்கப்பட வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை இன்று இருவேறு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாக இருக்கின்றன.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஒரு விடயம்; மற்றையது வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வாகும்.

கடந்தகால அரசியலமைப்புக்கள் இனரீதியான பிரச்சனைகளை தகுந்தவகையில் அணுகத்தவறிய காரணத்தினாலேயே இன்று நாட்டு நிலைமை மிக மோசமான கட்டத்தை எட்டியிருக்கின்றது.

அரசியலமைப்பில் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதன் மூலம், நாட்டில் நிலவும் பிரச்சனைகளுக்குப் பரிகாரங்களைக் காண எத்தனிக்கலாம்.

ஆனால் மிகமுக்கிய பிரச்சனையாக இருந்துவருகின்ற இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் அரசியல் தரப்புக்கள் அனைத்துடனும் பேச்சு வார்த்தைகளை நடத்தவேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.

அண்மையில் நீதியமைச்சரும், நாட்டின் முக்கிய இடது சாரித்தலைவர்களில் ஒருவருமான திரு.பட்டி வீரக்கோன் தமிழர் விடுதலைக் கூட்டணியினரைச் சந்தித்திருந்தார்.

அச்சந்திப்பின்போது இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்று விரைந்து காணப்படவேண்டியதன் அவசியத்தை திரு.பட்டி வீரக்கோன் தெரிவித்திருந்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை அரசாங்கத்துடன் இணைந்து வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு ஒத்துழைக்குமாறு கேட்கும்படி த.வி.கூட்டணியினரிடம் அமைச்சர் பட்டி வீரக்கோன் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதே சமயம் பாராளுமன்றில் அங்கம் பெறும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அண்மையில் வழங்கியிருந்த பேட்டியொன்றில் தமது தரப்பு வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை, பாராளுமன்ற அங்கத்துவத்தைக் கொண்டவையாக இருந்தாலென்ன அல்லது பாராளுமன்ற அங்கத்துவமில்லாதவையாக இருந்தாலென்ன தற்போதைய சூழலில் ஒற்றுமை பேணவேண்டியதே அவசியமானதாகின்றது.

ஆனால் ஒற்றுமையென்பது தமிழ் அரசியல் கட்சிகளிடையே வேப்பங்காயாகவே கசக்கின்றது.

தென்னிலங்கை அரசியல் கோதாவைப் பொறுத்தவரை இனப்பிரச்சனைத் தீர்வு பற்றிப் பேசுவதைவிட சொந்த அரசியல் லாபங்களுக்கே முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆனால் தமிழ் அரசியல் கோதாவைப் பொறுத்தவரை சாதிக்க வேண்டிய விடயங்கள் ஏராளமானவையாகவே இருக்கின்றன. இருப்பினும் இது விடயத்தில் தென்னிலங்கை அரசியல் வாதிகளையே தமிழரசியலாளர்கள் நிறையவே எதிர்பார்த்தவர்களாக இருக்கின்றனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனை நாளாந்தம் சிக்களாகிச் செல்கின்றதே தவிர, அப்பிரச்சனை ஒரு முடிவுக்கு வரும் அறிகுறிகள் தென்படுவதாக இல்லை.

தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டிய அதேசமயம், அந்த ஒற்றுமையின் மூலம் தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளுக்கு கூடுதல் அழுத்தங்களையும் கொடுக்க வேண்டியதாகவே இருக்கின்றது.

அரசியல் நெருக்கடிகளை மட்டுமல்ல. பாரியளவிலான மனிதாபிமானப் பிரச்சனைகளையும் உள்ளடக்கியதாகவே வடக்கு-கிழக்கு விவகாரம் காணப்படுகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் இருபாலையில் உள்ள கட்டப்பிராய் என்னுமிடத்தில் நிகழ்ந்த அனர்த்தம், மயிர்கூச்செறிய வைப்பதாக அமைந்திருந்தது.

கனடாவுக்குப் புலம்பெயர்ந்து செல்லவிருந்த ஏழுபேரடங்கிய குடும்பமொன்றே கொழும்பு வருவதற்காக விமானமேறுவதற்கு ஆட்டோ ரிக்ஷா வண்டியொன்றில் சென்ற வேளை அமுக்க வெடியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

இக்கொடூர சம்பவமொன்றே தற்சமயம் வடக்கு-கிழக்கு மக்கள் அனுபவித்து வருகின்ற அபாயகரமான வாழ்க்கைக்குச் சான்றுபகருவதாக இருக்கின்றது.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் யுத்த நெருக்கடிக்குள்ளாகியுள்ள பிரதேசங்கள் காணப்படுகின்றன. அப்பிரதேசங்களை யொத்தநிலைக்கே மக்களின் வாழ்க்கைத்தரம் வெகுவாகவே பின்தள்ளப்பட்டதாக வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் விளங்குகின்றன.

இத்தகைய பாரதூரமான நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதில் உத்வேகம் பெற வேண்டியது அவசியமானதாகின்றது.

தென்னிலங்கைக் கட்சிகளை எதிர்பார்த்திராது தமது அரசியல் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியவையாகவே இருக்கின்றன.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையை எடுத்து நோக்கும் பட்சத்தில் இராணுவ ரீதியான அணுகு முறைகளை எதிர் காலத்தில் அரசதரப்பினாலோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளினாலோ தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலையே ஏற்படும் என எதிர்பார்க்க முடிகின்றது.

அமெரிக்காவில் நியூயோர்க் மற்றும் வாஷிங்டன் நகரங்களின் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல்கள் சர்வதேச ரீதியாக நெருக்கடிகள் பலவற்றை ஏற்படுத்தும் அறிகுறிகளே காணப்படுகின்றன.

பயங்கரவாதத்துக்கும், விடுதலைப் போராட்டங்களுக்குமிடையிலான வேறுபாடுகளைக் கூட பிரித்தறிய முடியாத ஒரு சூழ்நிலை சர்வதேச ரீதியாக உருவாகியும் வருகின்றது.

அமெரிக்காவில் இடம்பெற்ற மோசமான தாக்குதலையடுத்து, சிவிலியன் இலக்குகள் தாக்கப்படுவது மற்றும் பொதுமக்களது பாதுகாப்பை உறுதி செய்யாது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது போன்ற நடவடிக்கைகள் எதிர்காலத்தில் சர்வதேச ரீதியாக பலத்த கண்டனங்களை எதிர் நோக்க நேரிடும்.

இந்நிலையில் அரசியல் பிரச்சனைகள் சார்ந்த விடுதலைப் போராட்டங்கள் கூடுமானவரை இராணுவ ரீதியாகவன்றி அரசியல் ரீதியாகவே முக்கியம் பெற வேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.

அமெரிக்காவில் இடம்பெற்ற அனர்த்தத்துடன் இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்களையும் ஒப்பிட்டு இலங்கையின் சில ஊடகங்கள் வாயிலாக பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இலங்கைப் பிரச்சனையிலும் தென்னிலங்கையில் மட்டுமல்லாது, வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலும் சிவிலியன் இலக்குகள் தாக்குதல்களுக்குள்ளாகி கடந்த பதினெட்டு வருடகால உள்நாட்டு யுத்தத்தில் மோசமான பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவின் யுத்த சன்னதம் வலுவடைந்த நிலையில் மத்திய ஆசிய நாடான ஆப்கானிஸ்தானில் யுத்தமொன்று வெடிக்கும் பட்சத்தில் அதன் பக்க விளைவுகள் ஆசியாவில் உள்ள அனைத்து நாடுகளையும் பாதிப்பவையாக இருக்கும்.

குறிப்பாக ஏற்கனவே உள்நாட்டு யுத்தத்துக்குள்ளாகியுள்ள நாடுகள் இராணுவ மற்றும் பொருளாதார ரீதியான நெருக்கடிகளை மேலும் எதிர்நோக்க வேண்டியவையாகவே இருக்கும்.

எனவே இலங்கைப் பிரச்சனையைப் பொறுத்தவரைகூட சர்வதேச மற்றும் பிராந்திய ரீதியான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அப்பிரச்சனையை அணுக வேண்டிய அவசியம் தற்சமயம் ஏற்பட்டுள்ளது.

இது விடயத்தில் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் எவ்வாறு நடந்து கொள்ளுமென்பதனை அனுமானிப்பது சிரமம்.

ஆனால் மாறிவரும் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசியல் சூழ்நிலைகளில் இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்களது நேர்மையான, நியாயமான அரசியல் அபிலாஷைகள் சிதைந்து போகாமலிருப்பதையே அனைத்து தமிழ் அரசியல் சக்திகளும் உறுதி செய்ய வேண்டியவையாகின்றன. ■



ஆப்கானில் சூழும் யுத்த மேகம்

## அதிரடி அய்யாத்துரை



**எம்.ஓ.டி.** கிளியரனசை நீக்கப் போறதா அதிகார அம்மணி வாக்களிச்சதா செய்தி வெளியானதல்லே... உடனே யாழ். பிஸினஸ்கார எம்.பி. காரியத்துல இறங்கிட்டார் பார்த்தியளே... உந்த கிளியரன்ஸ் முறையை நீக்க வேண்டுமெண்டு வழக்குத் தொடரபோறாராம். இனிமேல் உதை நீக்கினால் தான் வழக்குப் போட்டதாலதான் நீக்கினவையள் என்று கதை விட முடியுமல்லோ. அதை விடுங்கோ உந்த மகேஸ்வரர் சீமெந்து யாவாரத்தப் பற்றி சபையில பொறிபறக்கப் பேசிப் போட்டார். குடாநாட்டில் 150 ரூபா சீமெந்தை 500 ரூபாவுக்கு மேல் விற்கினமாம். 150 ரூபாவுக்கு எங்காவது சீமெந்து கிடைக்குமோ? உவர் பிஸ்னஸ்காரர்தானே 150 ரூபா விலையில் சீமெந்து தர முடியுமோ என்று சனம் கேட்குது? ஆனால் பாருங்கோ சனம் பட்டினி கிடக்கேக்கே கொழும்பில இருந்து அவிஞ்ச அப்பிளக் கொண்டு போய் குடாநாட்டில பத்துமடங்கு விலைக்கு விற்ற மகான் உவர் அதை மறக்குமோ? சட்டலைட் அன்டனா, மணிக்கூடு மாதிரி சீமெந்தை கடத்திக்கொண்டு வர முடியாதல்லே அதனால அந்த யாவாரத்தில ஆசைவைக்க மாட்டார் ஆசாமி...!

**கிழக்கில பிள்ளை பிடிக்கிற** காரியத்துக்கு விழுந்தடிச்சு வக்காலத்து வாங்கிற 'பத்திரிகையாளர்கள்' மீது சனம் கடுப்புல இருக்கு. கவலையில பெற்றவர்கள் நஞ்சருந்தி இரத்தம் சிந்திக் கிடக்கேக்க 'வீரத்திலகமிட்டு அனுப்பி வைக்கிறதா' விடுற கதைக்கு சனத்துக்கு கோபம் வராதோ பின்ன? முன்னர் மாகாண சபை காலத்துலயும் உந்தாக்கள் மற்றத்தரப்பின் பிள்ளை பிடிப்பை ஆதரிச்சவையள். உதையாவது 'மீடியா டிரக்டர்' பதவிக்கான நன்றிக்கடனா சொல்லலாம்! இத்தனையும் செய்து போட்டு அதே மாகாண சபைக்குள்ள இருந்து ஆளுநர் விருது வாங்கவும் ஏற்பாடு செய்திருக்கின மென்றால் புத்திசாலிகளெல்லே சொல்லுங்கோ...? வாழ்க பத்திரிகா தர்மம்!

**அரசியலமைப்பு பேரவைக்கு** சிறிய கட்சிகள் சார்பில தெரிவாகப்போற உறுப்பினரையும் சிறுபான்மைக் கட்சிகளில இருந்து நியமிக்க முயற்சிப்பமெண்டு ஆறுமுகத்தார் யோசனை கொண்டு வந்தவர். உதை கேட்ட அழுக்கு சங்கரிக்கு வந்த கோபத்தை கண்டியலெண்டால்... 'உந்த மாதிரி விஷயம் பேசத்தான் கூப்பிட்டியள் என்று தெரிஞ்சிருந்தால் வந்திருக்கவே மாட்டன்' என்று கடுப்பாகி எழுந்து போயிட்டார். உந்த உறுப்பினரை ஜே.வி.பி. மேல அழுக்கருக்கு என்ன இத்தனை அக்கறை? கிழக்கு தனித்துவக்காரரும் அழுக்கர் பக்கம்தான் 'ஆமா' போட்டவர், சிறுபான்மை மக்களின்ர உரிமையை வென்றெடுக்கோணமெண்டு மேடை வழிய முழங்கித்திரியினம். உள்ள போய் சிஹல உருமயவுக்கு வக்காலத்து வாங்கினம் எண்டால்... எங்கோ உதைக்குதெல்லே...?

**மழையில்லை** எல்லாம் வற்றி வரண்டு போயிட்டுதெண்டு ஆரம்பமான மின்வெட்டு வாரக்கணக்குல கொட்டோ கொட்டென்று கொட்டினாலும் தொடருவதன் மர்மம் பற்றி ஆளாளுக்கு ஒவ்வொரு காரணம் சொல்லுகினம் அதிகார தரப்புக்கு வேண்டிய சிலர் கொண்டுவந்து குவிச்சிருக்கும் ஜெனரேட்டர்கள் விற்றுத் தீரும் வரை வெள்ளப்பெருக்கு வந்தாலும் முழுதாக மின்சாரம் வராதென்று பேசிக் கொள்கினம். சில நீர்த்தேக்கங்களில தண்ணீரை திறந்து விடுகினமாம். விவசாயத்துக்கு நீர் வழங்குகிறோம் என்று மின்சார சபை சொல்லியிருக்கு ஏதோதோ சொல்லி சனத்துக்கு தண்ணி காட்டுகினம் என்றது மட்டும் புரியுது.

**ஆப்கானிஸ்தான் மீதான** அமெரிக்கத்தாக்குதலை எதிர்த்து நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் சமாதான ஆர்வலர் ஒருவரது கையில் இருந்த சுலோகத்தின் வாசகம் இது.

**"கண்ணுக்கு கண் என்ற ரீதியில் பழிவாங்கத் தொடங்கினால் உலகம் குருடர்களால் நிரம்பியிருக்கும்"**

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

## உண்மைத் தொடர் 26

ஹிட்லர் நிருவாகத்தின் கீழ் எஸ்.எஸ். அமைப்பினால் நடத்தப்பட்ட சித்திரவதைக் கூடங்களில் வெவ்வேறு விதமான சோதனை நடவடிக்கைகளுக்காக அப்பாவிப் பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இவற்றுள் அவுட்ஸ்விக் என்ற நாஸி சித்திரவதைக் கூடத்தில் பலாத்காரமாக அடைத்துவைக்கப்பட்ட மிக்லோஸ் நயிஸ்லி என்ற மருத்துவர் அங்கு தான் கண்ட காட்சிகளை 'A Doctor's Gye witness Account என்ற பெயரில் நூலாக எழுதியிருக்கிறார்.

நாஸி சித்திரவதைக் கூடங்களுள் அவுட்ஸ்விக் மிகவும் பிரபலமானது. இங்கு பெரும்பாலும் மருத்துவ ஆராய்ச்சிகளுக்காகவே கொலைகள் செய்யப்பட்டன. முகாமில் செய்யப்படும் சித்திரவதைகளின் கொடுமை தாங்காது தற்கொலை செய்து கொண்டவர்களின் உடல்கள் மரபணு மற்றும், இனப்பகுப்பாய்வுப் பரிசோதனைகளுக்கு பயன்படுத்தப்பட்டன.



அவுட்ஸ்விக் சிறைக்கூடத்தில் டாக்டர் மிக்லோஸ் கண்டதாகக் கூறும் நிகழ்வுகளின் சிலவற்றை இங்கே தருகிறோம்:

"மனித உடல்களை கிழித்து மரபணு சார்ந்த பரிசோதனைகளை செய்யக்கூடிய சகல வசதிகளும் அவுட்ஸ்விக்கில் தாராளமாக இருந்தது. அத்துடன் அங்கே தினசரி அதிக அளவிலான மக்கள் தற்கொலை செய்து கொண்டதால் பரிசோதனைக்குத் தேவையான உடல்கள் அளவுக்கதிகமாகவே கிடைத்துக் கொண்டிருந்தன.

உடற்கூறு பரிசோதனைகளுக்காக மருத்துவ நிறுவனங்களுக்கு 100 முதல் 150 வரையிலான உடல்களுக்கு மேல் கிடைப்பதில்லை. ஆனால் எமக்கு இலட்சக்கணக்கான உடல்களை வேண்டுமானாலும் பெற முடிந்தது.

இந்த முகாமுக்கு கொண்டு வரப்படுபவர்கள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறார்கள். அதில் வலது பக்கமாக செல்பவர்கள் ஒரு மணித்தியாலயத்துக்குள்ளேயே சாம்பலாக்கப்பட்டு விடுவார்கள். இடது பக்கமாக தெரிவு செய்யப்பட்டால் அந்த நபரின் நிலைமை அதை விடவும் துரதிஷ்டவசமானதாக இருக்கும்.

முகாமுக்கு கொண்டு வரப்பட்டவர்களுள் உடல் வளர்ச்சி குறைந்தவர்கள் அல்லது இரட்டையர்கள் இருக்கிறார்களா என்று எஸ்.எஸ். படையினர் தேடும்போது தமது பிள்ளைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப்படப் போகிறது என்று கருதி பெற்றோர்களே முன்வந்து பிள்ளைகளை படையினரிடம் ஒப்படைப்பார்கள். வயது வந்த இரட்டையர்கள் தமக்கு சிறந்த மருத்துவ ஆலோசனை கிடைக்கப் போவதாக நினைத்து தாமாகவே படையினரிடம் சென்றனர்.

இரட்டையர்கள், வளர்ச்சி குறைந்தோருக்காக விசேடமாக அமைக்கப்பட்டிருந்த கூண்டிற்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். சிவில் உடையில் இருக்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. போதியளவு உணவு, குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. அங்கிருந்து தினசரி வெவ்வேறு விதமான பரிசோதனைகளுக்காக இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஒருவருடைய இரத்தத்தை வேறொருவருக்கு மாற்றியும், பிறப்புறுப்பின் அணுமூலக்கூறை அவதானிக்க அவற்றை திரவங்களில் இட்டும் சோதனைகள் செய்யப்பட்டன.

செக்கோஸ்லாவிய நாட்டின் பிராக் நகரில் இருந்து சிறைக்கைதியாக கொண்டுவரப்பட்ட டீனா என்ற பெண் ஓவியர் தலை வெட்டப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டவர்களின் மண்டை ஓடுகளை ஓவியமாக கீறி குறிப்பிட்ட பரிசோதனை அறிக்கையுடன் அந்த படத்தை இணைத்து வைப்பார்.

மருத்துவத்துறையில் in vivo என்ற சோதனை முறையொன்று உள்ளது. இது உயிருடன் இருப்பவர்களை வைத்தே செய்யப்படுவது வழக்கம். அவுட்ஸ்விக்கில் இந்த சோதனை செயல்முறைக்கு மெக்கல் என்ற கொலைகார டாக்டர் பொறுப்பாளியாக நியமிக்கப்பட்டிருந்தான். அவனுக்கு வழங்கப்பட்டிருந்த மித மிஞ்சிய அதிகாரங்கள் காரணமாக அவன் ஏனைய குற்றவாளிகளை விடவும் கொடுமையானவானாக செயற்பட்டான்.

இந்த மெக்கல் என்பவர் யூதர்களை மனித வர்க்கத்தில் சேர்க்க முடியாது எனற நிலைப்பாட்டைக் கொண்டவன். இந்த வெறுப்புணர்ச்சி காரணமாகவே அவுட்ஸ்விக்கில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அவனது கையால் பலியானார்கள்.

நாஸிகளின் இந்த உடல் மூலக் கூறு சோதனைகளின் பிரதான நோக்கம் ஜெர்மனிய இனத்தை எவ்வாறு உலகம் பூராவும் பரப்பலாம் என்ற விஞ்ஞான விதிமுறையை கண்டறிவதுதான்."

★★★

ஃபிரான்ஸ் நாட்டுக்காக உளவு பார்க்கும் ஒருவன் பெர்லினில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் இருப்பதாக எஸ்.எஸ். அமைப்பிற்கு தகவல் கிடைத்தது. அந்த பொலிஸ் நிலையத்தில் 140 பேர்வரை கடமையாற்றினார்கள். இவர்களில் குறிப்பிட்ட உளவாளி யார் என்பதை கண்டறியும் பொறுப்பு எஸ்.எஸ். அமைப்பின் தலைமை அதிகாரி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இரண்டு வாரங்களாகியும் அவனை கண்டறிய முடியவில்லை. பல்வேறு விதத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டாலும் ஜெர்மன் பொலிஸுக்குள்ளேயே இருந்து கொண்டு ஃபிரான்சுக்கு உளவு பார்க்கும் நபர் யார் என்று அறிவதில் வெற்றி பெறவில்லை.

அந்த உளவாளியை இன்னமும் கைது செய்யவில்லை என்ற தகவல் ஹிட்லருக்கு சொல்லப்பட்டது. ஈவா பிரவுன் மடியில் இருந்தாலும் ஹிட்லர் கடும் கோபமாக இருந்தான்.

இந்தப் பணிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட எஸ்.எஸ். அதிகாரியை அழைத்து வருமாறு உத்தரவிட்ட ஹிட்லர் "பிரச்சனையை இன்றோடு முடித்து விடலாம்" எனக்கூறி ஈவாவை இறுக்கி அணைத்தான். ஏறி இறங்கும் மார்புகளை பார்த்துக் கொண்டே அவளது கழுத்தில் முத்தமிட்ட அவன், அவளது தோள்களை மெதுவாக அழுத்தினான். தன்னை மறந்து அவனது பிடியில் சிக்குண்டு கிடந்த அவள் சொல்லாமலே ஆடைகளுக்கு விடைகொடுத்தாள். சகலதையும் மறந்த ஹிட்லர் ஈவா பிரவுனின் ஆக்கிரமிப்புக்குள் தன்னை விருப்பத்துடனேயே உட்படுத்தினான். நேரம் செல்லச் செல்ல அவனே அதிர்ந்து போகும் வேகம் அவளுக்குள் இருந்து வெளிப்பட்டது.

கலவி மயக்கம் முடிந்த களைப்போடு அமர்ந்திருந்த ஹிட்லரை எஸ்.எஸ். அதிகாரி வந்து சந்தித்தான். குறிப்பிட்ட உளவாளியை கண்டறிய முடியவில்லை

## ஷானு

என்று பயம் கலந்த குரலில் கூறினான் அந்த அதிகாரி.

பொலிஸ் நிலையத்தில் உள்ள அனைவரையும் அழைத்து ஒரு கூட்டம் வைக்குமாறும், அதில் வைத்து அவர்களுக்கு சில விஷயங்களை சொல்லுமாறும், ஆலோசனை கூறி அனுப்பினான் ஹிட்லர்.

அதன் படியே கூட்டம் ஆரம்பமானது. எஸ்.எஸ். அதிகாரி உரையாற்ற எழுந்து நின்ற போது பொலிஸ் நிலையம் வெடித்துச் சிதறியது உள்ளேயிருந்த அனைவரும் உடல் சிதறிச் செத்து மடிந்தார்கள்.

பொலிஸாருக்கு கூட்டம் நடத்துமாறு அதிகாரியை அனுப்பி விட்டு அங்கு கூட்டம் நடக்கும் போது குண்டொன்றை வெடிக்கச் செய்து அனைவரையும் கொன்று குவிக்குமாறு தனது பாதுகாப்பு உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டான்.

பெர்லினில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் குண்டொன்று தவறுதலாக வெடித்ததில் 141 பேர் கொல்லப்பட்டதாக வானொலி செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

**வருவான்...**

# கசப்பான காதல் கதற வைக்கும் உண்மை

ஷபானாவுக்கு 13 வயது திடீரென்று காணாமல் போனாள். அவளது தந்தை பாபுகான், மகளைக் காணவில்லை என்று புகார் கொடுக்க பொலிஸ் நிலையம் சென்றார்.

அங்கிருந்த பொலிஸ்காரர்கள் அவரை கிண்டல் செய்தார்கள்.

"எங்களுக்கு வேறு வேலை இல்லையா? உன் பொண்ணு யார் கூடாவாவது ஓடி இருக்கும். எவன் கூட ஓடினாள்னு நாங்க போய் தேடிக்கிட்டு இருக்க முடியுமா? வயசுக்கு வந்த பொண்ணு ஒரு மாதிரியா அலைந்தால், உடனே கல்யாணம் செய்து வைத்து விட வேண்டியதுதானே... எங்க உயிரை ஏன் வாங்கிறே..." என்று கேலியும் கிண்டலுமாகப் பேசினார்கள்.

இளம் வயது மகளை காணாமல் பரிதவித்த பாபுகானின் மனம் பொலிஸ்காரர்களின் வார்த்தைகளால் மேலும் படுகாயப்படுத்தப்பட்டது.

பாபுகான் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் உள்ள ஆக்ராவைச் சேர்ந்தவர். இவருக்கு 5 மகன்கள். 2 மகள்கள். மகள்களில் மூத்தவள் ஷபானா. இவர்கள் குடும்பத்தோடு மஞ்சு என்பவரின் வீட்டில் வாடகைக்கு குடி இருந்தார்கள். ஷபானா காணாமல் போய் நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. எங்கெங்கோ தேடிப் பார்த்தார்கள். அவளை கண்டு பிடிக்க முடியவே இல்லை.



ஒருநாள், ஷபானாவின் தாயார் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருக்க திடீரென்று ஒரு குரல்,

"அம்மா நான் ஷபானா. என் பின்னால் நீ வர வேண்டாம். நான் சில சமூக விரோதிகளிடம் சிக்கி இருக்கிறேன்" என்று கூறிவிட்டு, ஒரு நாளை குறிப்பிட்டு அந்த நாளில் சாதாரண உடை அணிந்து பொலிஸ்காரர்களோடு அதே இடத்தில் நிற்கும்படி கூறினாள்.

உடனடியாக வீடு திரும்பிய தாயார், கணவரிடம் சொல்ல, அவர் அந்தப் பகுதி பாரதீய ஜனதா இளைஞர் அணி தலைவர் ஹேமேந்திர சர்மாவிடம் போய் சொன்னார்.

குறிப்பிட்ட நாள் வந்தது. சாதாரண உடையில் பொலிசார் அந்தப் பகுதியில் ஆங்காங்கே நின்றிருந்தனர்.

ஹேமேந்திர சர்மா 25 தொண்டர்களோடு அந்தப் பகுதி முழுவதையும் கண்காணித்தார்.

திடீரென்று எங்கிருந்தோ ஷபானா நடந்து வந்தாள். அவள் பின்னால் பரத் என்ற இளைஞன் நடந்து வந்தான். ஷபானா, தாய் அருகில் வந்ததும் அவள் பரத்தை நோக்கி சுட்டிக் காட்ட பொலிசும் பா.ஜ.க. தொண்டர்களும் அவனை நோக்கி பாய்ந்தனர். அவன் தப்பி ஓடினான்.

எப்படியே அவனை வளைத்து பிடித்து விட்டனர். பரத்தை பொலிசில் ஒப்படைத்தனர். பொலிசாரிடம் ஷபானா தனக்கு நேர்ந்த கொடுமையை விவரித்தாள். அது, கல்நெஞ்சையும் கரைய வைக்கும் சம்பவம் ஆகும்.

ஷபானா குடியிருந்த வீட்டின் உரிமையாளர் பெயர் மஞ்சு. அவள் ஆக்ரா மாவட்ட மருத்துவனையில் தாதியாக வேலை பார்த்தாள். செக்ஸ் விருப்பத்தில் திருப்தி அடையாத அவள் முதல் கணவர் மூலம் 3 குழந்தைகளுக்கு தாய் ஆனாள்.

பின்பு இன்னொருவனோடு வாழ்ந்து வந்தாள். அதைத் தவிர ரியாசுதீன் என்ற ராஜு மற்றும் பரத் என்ற இரு இளைஞர்களும் அவளோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள்.

மஞ்சுவின் வீட்டில் பரத் அமர்ந்திருந்த போது அவன் ஷபானாவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பான். அவள் அழகில் கிறங்கிப் போன அவன் எப்படியாவது அவளை காதலித்து தன் வலையில் வீழ்த்தியே ஆக வேண்டும் என நினைத்தான். ஆனால் ஷபானா அவனைத் திரும்பிப் பார்க்கவே இல்லை.

ஒருநாள் மஞ்சுவோடு சேர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தபோது தன் ஆசையை அவளிடம் வெளிப்படுத்தினான். அவளும், ஷபானாவை எப்படியாவது ஏமாற்றி உன்னுடன் சேர்த்து விடுகிறேன். அதன் பிறகு அவளை நீ எங்கேயாவது கொண்டு சென்று விடு என்றாள். அவன் மகிழ்ச்சியுடன் தலை அசைக்க ஷபானாவை கடத்துவது பற்றி திட்டம் போட்டார்கள்.

அன்று மஞ்சு தன் மகளோடு ஷபானாவை அனுப்பிவைத்தாள். அப்போது ராஜு அவள் முகத்தின் அருகில் மயக்க மருந்தைக் காட்டி நினைவிழக்க வைத்தான்.

ஷபானா நினைவு திரும்பிய போது இருட்டு அறைக்குள் ஒரு கட்டிலில், கயிற்றால் இறுக்கி கட்டப்பட்டிருந்தாள். அவள் உடலில் ஒரு துண்டு துணி கூட இல்லை. நிர்வாணமாக இருந்தாள். சிறிது நேரத்தில் லைட் எரிய, ராஜுவும் பரத்தும் நின்றிருந்தனர். உடல் பலமாக வலிக்க, தனக்கு ஏற்பட்ட கொடுமையால் அவள் மனம் வெதும்பி அழுதாள்.

கத்தியை காட்டி "அழுதால் கொன்று விடுவோம்" என மிரட்டினார்கள். பின்பு அவளுக்கு உடுக்க உடை கொடுத்தார்கள். அவளை அங்கேயே அடைத்து வைத்து பலமுறை இருவரும் மானபங்கம் செய்தார்கள். இங்கு நடப்பதை எல்லாம் மஞ்சு தன் வீட்டில் இருந்தபடியே அறிந்து கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் ஒரு சில மாதங்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தில் வசித்து விட்டு பின்பு அடுத்த இடத்திற்கு சென்று விடுவார்கள். மூன்று பேரும் ஒன்றாக வசித்தாலும் ஷபானாவோடு ராஜு அல்லது பரத்யாராவது ஒருவர் உடனிருந்து கொண்டே இருப்பார்கள். இந்த நிலையில் ஷபானா கர்ப்பிணி ஆனாள். இந்த தகவலும் மஞ்சுக்கு தெரிவிக்கப்பட்டது. மஞ்சுவின் திட்டப்படி அவள் கர்ப்பம் கலைக்கப்படவில்லை. பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்தாள்.

இந்த நிலையில் ஒருநாள், ராஜு என்ற ரியாசுதீனிடம் ஷபானா மனம் விட்டு பேசினாள்.

"பரத்தோடு வாழ்வது எனக்கு கொடுமையான அனுபவமாக இருக்கிறது. நானும் நீயும் முஸ்லிம் சமுதாயத்தை சேர்ந்தவர்கள். நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டு தனியாக வாழலாம்..." என்றாள்.

அவனும் அதற்கு சம்மதித்தான். இருவரும் மனம் விட்டு பேசிக் கொண்டிருந்தபோது கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்தனர்.

அங்கே பரத்தின் தந்தை ரமேஸ்வரும், மஞ்சுவும் நின்று கொண்டிருந்தனர். அன்று இரவு ராஜு, பரத் இருவரும் வெளியே சென்று விட மஞ்சுவின் அனுமதியோடு ரமேஸ்வர், ஷபானாவை கெடுத்து விட்டான். இப்படி தொடர்ந்து மானபங்கப்படுத்தப்பட்டு வந்த ஷபானா, எப்படியாவது அந்த கூட்டத்தில் இருந்து தப்ப வேண்டும் என்று முடிவு செய்தாள்.

ஒருமுறை பரத்திடம் "ஒரு வேண்டுதலுக்காக தர்காவுக்கு செல்ல வேண்டும்" என்று கூறி, தனது தாய் வீட்டின் அருகில் உள்ள தர்காவுக்கு வந்தாள். அப்போது தான் தனது தாயாரைக் கண்டு பேசினாள். பின்பு தான் அவள் திட்டப்படி பொலிசார் பரத்தை பொறி வைத்து பிடித்தனர். பரத் பிடிபட்டதும் மஞ்சு, ரமேஸ்வர் போன்றவர்கள் ஓடி விட்டனர்.

பொலிசார் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சம்பவம் மூலம் 'டீன் ஏஜ்' பெண்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று உணர்த்தப்படுகிறது. வீட்டு உரிமையாளராக இருக்கும் மோசமான பெண்களால், வாடகைக்கு குடி இருக்கும் பெண்கள் எவ்வளவு பாதிப்புக்கு உள்ளாகுவார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

# தகவல் பெட்டி




## மீண்டும் பறவைக் கப்பல்

ஏயார் ஷிப் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பறவைக்கப்பலுக்கு ஜெப்ளின் என்ற பெயர். 100 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் இதன் சேவை அண்மையில் ஆரம்பமாகியுள்ளது.

படத்தில் காணப்படும் ஜெப்ளின் ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டது. 75 மீட்டர் நீளமுள்ள இந்த ஜெப்ளினைப் போல் விரைவில் ஏகப்பட்ட ஜெப்ளின்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.

இப்போது ஜெர்மன் நாட்டில் ஜெப்ளின்கள் முழுமுச்சுடன் தயாராகி வருகின்றன.



## சாதனை செய்த சாகசப் பெண்

உலகில் முதன்முறையாக ஹெலிகொப்டர் மூலம் உலகைச் சுற்றி வந்து சாதனை படைத்துள்ளார் ஜெனிபர் முரே என்ற 60 வயதுப் பெண்மணி.

100 நாட்கள் உலகத்தைச் சுற்றி வந்து சாதனை படைத்துள்ளார் ஜெனிபர். இவர் இந்த 100 நாட்களில் சுற்றிய தூரம் 21 ஆயிரத்து 750 மைல்கள்.

இலண்டனில் இருந்து புறப்பட்டு துணிச்சலாகப் பயணம் செய்து புரூலாண்ட்ஸ் விமான நிலையத்தில் வந்திறங்கிய இவர் தனது வெற்றிச் சாதனையைத் தன் பேத்திக்கு முத்தமிட்டுத் தெரிவிக்கிறார்.

ஜெனிபர் முரே பயணம் செய்த ஹெலிகொப்டர் தான் அருகே உள்ளது.



## மின்சாரம் தயாரிக்கும் வீடுகள்

ஜப்பான் நாட்டில் மழையை மட்டும் நம்பியிராமல் சூரிய சக்தி, காற்றுச் சக்தி முதலியவற்றைப் பயன்படுத்தி மின்சாரத்தைத் தயாரித்து வருகின்றனர்.

சில வருடங்களுக்கு முன் ஜப்பான் சூரிய சக்தியை பயன்படுத்தி மின்சாரத்தை அதிகளவில் தயாரித்து வருகிறது. உலகில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் முதலிடம் வகிக்கும் நாடும் ஜப்பான் தான்.

ஜப்பானில் உள்ள சிபா என்ற பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடுகளின் கூரைகள் அனைத்தும் சூரிய சக்திப் பலகைகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பலகைகள் மூலம் மின்சாரம் பெறப்பட்டாலும் இதற்குப் பராமரிப்புச் செலவு ஒரு சதம் கூட இல்லையாம்.





## உலக சாதனையா உடற்பயிற்சியா?

படத்தில் பெரிய சக்கரம் ஒன்றில் வட்டமடிக்கும் இந்தப் பெண் ஏதோ உலக சாதனை செய்கிறார் என்று நினைத்து ஏமாந்து விடாதீர்கள்.

இவர் உடற்பயிற்சி செய்கிறார். ஜெர்மனியில் உள்ள உடற்பயிற்சிக் கூடத்தில் அமைக்கப்பட்ட இந்த விசேட உடற்பயிற்சிக்கு கருவியின் மூலம் அழகான உடலமைப்பைப் பெற பல பெண்கள் இங்கு கூடிவிடுகின்றனர்.

இந்த உடற்பயிற்சிக் கருவியின் அருமை பெருமைகளைக்கூறி, ஜெர்மனியில் அண்மையில் நடந்த கண்காட்சியில் இதைக் காட்சிக்கு வைத்தனர். இதில் மொத்தம் 23 நாட்கள் தமது தயாரிப்பில் உருவான உடற்பயிற்சி செய்யும் சாதனங்களைக் காட்சிக்கு வைத்தனர்.





## வியப்பூட்டும் இராட்சத ஜீவராசி

கணவாய் போன்ற இந்த வியப்பூட்டும் பெரிய ஜீவராசி அவுஸ்திரேலிய நகரான சிட்னியில் உள்ள கடற்கரையில் கரை ஒதுங்கியது.

கணவாய் போன்று இராட்சத உருவத்தில் இருக்கும் இந்தக் கடற்பிராணியை அப்படியே அள்ளிக்கொண்டு போய் அருங்காட்சியகத்தில் வைத்து ஆராய்ந்து வருகிறார்கள் அவுஸ்திரேலிய ஆய்வாளர்கள்.

இந்தக் கடற்பிராணி கரையொதுங்கியதைக் கேள்விப்பட்ட அவுஸ்திரேலியா வாழ்மக்கள், இந்த அதிசய உயிரினத்தைப் பார்த்து வியப்புற்றார்கள்.

## உலகின் மிகப்பெரிய விருந்து

உலகிலேயே மிகப்பெரிய விருந்து ஒன்றை நடத்தி உலகசாதனை புரிந்துள்ளார் மலேசிய நாட்டின் பிரதமர் மஹாதிர் முஹமட்.

20 வருட காலமாக மலேசியாவின் பிரதமராக இருக்கும் மஹாதிர் முஹமட் தனது 75வது பிறந்ததினத்தை அண்மையில் கொண்டாடினார். இவரது பிறந்த நாள் விழாவில் 25 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

இந்த மிகப்பெரிய விருந்தில் கலந்து கொண்டவர்களின் முன்னால் உள்ள திரையில் பிரதமர் உரையாற்றுவதைக் காணலாம்.

திரையுலக மறுபக்கம் 215 தமிழ்நாட்டிலிருந்து மயன்

# நட்சத்திர மருத்துவமனையில் இரகசிய நோய்க்கு

# இரகசியமாகச் சிகிச்சைபெறும் நட்சத்திரம்

தமிழ்-தெலுங்குத் திரையுலகைக் கலக்கி வரும் பிரபல 'ஸ்லிம்' நடிகை சென்னையில் உள்ள நட்சத்திர மருத்துவமனையில் இரகசிய சிகிச்சை பெற்று வருகிறார். இரகசிய சிகிச்சை பெற இரகசிய நோய் தான் காரணம்.

கடந்த சில வருடங்களாக நலிந்து வருகிறது தமிழ்த் திரையுலகம். எனினும் வெளியாகும் சில படங்களிலும் புதிய நடிகைகளே நடிக்கிறார்கள். ஒரு சில படங்களில் தலைகாட்டும் அவர்கள் பின்னர் காணாமல் போய் விடுகிறார்கள்.

இதே போல் சில வருடங்களுக்கு முன் தமிழுக்கு வந்த அந்த நடிகை முன்னணி நாயகர்களுடன் நடித்துப் புகழ்பெற்றார். அவர் நடித்த பல படங்கள் வெற்றிப்படங்களாக அமைந்தன. தெலுங்குப் படங்களிலும் அவர் நடித்தார்.


இந்த நிலையில் அந்த நடிகை சமீபத்தில் உடல் நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள பிரபல நட்சத்திர மருத்துவ மனைக்குச் சென்றார்.

அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்குப் பால்வினை நோய் இருப்பதை உறுதி செய்தனர். இதனைக் கேள்விப்பட்டு அதிர்ச்சி அடைந்த நடிகை உடனடியாக அந்த மருத்துவனையிலேயே இரகசிய சிகிச்சை பெற முடிவு செய்தார்.

தனக்கு இந்த நோய் இருப்பது வெளியே தெரிந்தால் திரையுலக மார்க்கெட்போய் விடும் என்பதோடு மட்டுமல்லாமல தனது 'நடனக்' காதலருக்குத் தெரிந்து விட்டால் திருமணமே நின்று விடும் என்றும் பயந்தார். அதனால் மருத்துவமனையில் தங்காமல் வெளியே இருந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

பிரபலங்களுக்கு இரகசியமாக மருத்துவம் பார்க்கும் இந்த 'நட்சத்திர' மருத்துவமனை, நடிகைக்கு இருக்கும் வியாதி பற்றி இதுவரை மூச்சுக் விடவில்லை.

இருப்பினும் நடிகை இரகசியமாக சிகிச்சை பெற்று வரும் விடயம் பத்திரிகை மூலம் அம்பலமாகி விட்டது. இதைக் கேள்விப்பட்ட தமிழ்-தெலுங்கு திரையுலகப் புள்ளிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.



அபிநாஷ்-அனுசுயா-அபிநயாஸ்ரீ-சஞ்சீவ்குமார் படம்: பியூட்டி

## பிடித்த நடிகர் பிரசாந்த்

'வைகாசி பொறந்தாச்சு' படம் மூலம் 90ம் ஆண்டு நடிக்க வந்த பிரசாந்த் 11 வருடங்களில் தனது 50வது படத்தை எட்டியுள்ளார். ரவிச்சந்திரன் இயக்கத்தில் பிரசாந்த் நடிக்கும் 'மஜ்னு' இவரது 50வது படமாகும்.

அறிமுகமான புதிதிலேயே இவர் மலையாளம் (பெருந்தச்சன்), தெலுங்கு (பிரேம் சிகரம்), இந்தி (ஐ லவ் யூ) என தமிழுடன் சேர்த்து 4 மொழிப்படங்களில் நடித்துள்ளார். கன்னடம் மட்டும் தான் பாக்கி.

இவையெல்லாவற்றையும் விட தான் நடிக்கும் படங்களை இயக்கும் இயக்குநர்களுக்குப் பிடித்தமானவராகி விடுவார் பிரசாந்த்.

'ஜீன்ஸ்' படத்தில் நடித்தபோது படத்தின் இணை இயக்குனராக இருந்த மாதேஷிற்குப் பிடித்துப் போக தனது சொந்தப்படமான 'சாக்லேட்'டில் பிரசாந்தை நாயகனாக்கினார்.

தனது 'கண்ணெதிரே தோன்றினாள்' படத்தில் நடித்தபோது பிரசாந்தின் அணுகுமுறை பிடித்துப் போக உடனே தன் அடுத்தபடமான 'மஜ்னு'வின் பிரசாந்தை நாயகனாக்கி விட்டார் ரவிச்சந்திரன்.

இதைப் போல் 'விரும்புகிறேன்' படத்தின் அறிமுக இயக்குநர் சுசி கணேசனும் தான் அடுத்து இயக்கும் படத்தில் பிரசாந்தை நாயகனாக்க முடிவு செய்துள்ளார்.

## கமிஷனர்-கஞ்சா கறுப்பன்

நாட்டில் நடக்கும் அன்றாடப் பிரச்சனைகளை மையப்படுத்திப் படமெடுத்து வரும் ஆர்.கே. செல்வமணி சிறிய இடைவெளிக்குப் பின் இயக்கும் படம் 'பொலிஸ் கமிஷனர்'.

இதில் கதாநாயகனாக நடிக்கிறார் சத்யராஜ். முரட்டுத்தனமான பொலிஸ் அதிகாரியான சத்யராஜிற்கு படத்தில் கஞ்சாக் கறுப்பன் என்று பெயர்.

இப்படத்தில் இன்னொரு நாயகனாக ராம்கியும் நடிக்கிறார். ராம்கி இப்படத்தில் டாக்டர் வேடத்தில் நடிக்கிறார்.



ரமேஷ் அரவிந்த்-சௌந்தர்யா படம்: குட்டி

## மறுபடி முடக்கம்

நீண்ட நாட்களுக்குப் பின் தயாரிப்பாளர் கைமாறி மறுபடி படப்பிடிப்புத் தொடக்கப்பட்ட படம் 'காமராசு'.

அண்மையில் இதன் படப்பிடிப்பு கோவூரில் நடந்தது. நடிக, நடிகையர் காத்திருக்க, இயக்குநர் அன்பழகன் காட்சி சரியாக இல்லை என்று யோசித்துக் கொண்டு படப்பிடிப்பை இரத்துச் செய்து விட்டார். இப்படியே ஒரிரு முறை செய்ததால் 'காமராசு' படப்பிடிப்பு மறுபடி முடக்கப்பட்டுவிட்டது.


## காதோடு சொல்லுகிறோம்

அண்மையில் 'கார்' நடிகர் நடிக்கவிருந்த படமொன்று நிறுத்தப்பட்டதற்குக் காரணம் 'மாளவ' நடிகையாம். அந்தப் படத்தின் தயாரிப்பாளர் படப்பிடிப்புக் குழுவினரோடு வெளிப்புறப்படப்பிடிப்புத் தளத்தில் 'கார்' நடிகருக்காகக் காத்திருந்தாராம். அந்நேரத்தில் 'மாளவ' நடிகை, 'கார்' நடிகர் இருந்த ஹொட்டலுக்குச் சென்று அவரை வெளியே செல்ல விடாமல் வைத்திருந்தாராம். நடிகரைப் பார்த்துப் பார்த்து வெறுத்துப் போனதால்தான் தயாரிப்பாளர் அந்தப் படத்தையே நிறுத்தி விட்டாராம்.

மூன்றெழுத்துப் பழம்பெரும் படநிறுவனம் 'வேதாளத்தைச் சுமக்கும் மன்னனின் பெயர் கொண்ட நடிகரை வைத்து அடுத்த படத்தைத் தயாரிக்கப் போகிறதாம். அந்தப் படத்தை இயக்கும் வாய்ப்பு இந்த நடிகரை வைத்து இரண்டெழுத்து வெற்றிப்படத்தை இயக்கியவருக்குத் தான் வந்ததாம். இயக்குநர் சம்பளமாக அறுபது இலகரம் கேட்க, படநிறுவனமோ அதில் பத்தில் ஒரு பங்கைத் தருவதாகச் சொல்ல 'நில்'லாக அப்படவாய்ப்பை நிராகரித்து விட்டாராம் அந்த இயக்குநர்.

அந்த 'இமய' இயக்குநரின் மகனுக்கு நன்றாக நடிப்பு வருகிறதோ இல்லையோ ஆனால் காதல் விளையாட்டில் மட்டும் கைதேர்ந்தவராக இருந்து வருகிறாராம். சென்னையின் பிரபல ஹொட்டல்களுக்கு ஜோடி சேர்த்துக் கொண்டு சென்று விடிய விடிய நடனம் ஆடிவிட்டுக் காலையில்தான் திரும்புகிறாராம். பின்னணி பேசும் அந்த கலைஞியின் காதல் தாக்கம் தான் இதற்குக் காரணம் என்று கூறுகிறாராம் நடிகரின் தாய்.

தொடையழகி நடிகை சொந்தமாகத் தயாரிக்கும் படத்தில் மூன்று நாயகிகளில் ஒருவராக ஒப்புக் கொண்ட 'சிம்ம' நடிகை, தனது சம்பளத்தைத் தாறுமாறாக உயர்த்திக் கேட்டாராம். இதைக் கேட்டுக் கடுப்பான 'தொடையழகி' வேறு நாயகியை ஒப்பந்தம் செய்து விட்டாராம். முதலில் ஏதோ நினைவில் ஒப்புக் கொண்ட 'சிம்ம' நடிகை பின், 'தொடையழகி' சிலவேளை தன்னை டம்மியாக்கி விடுவாரோ என்ற அச்சத்தில் தான் சம்பளத்தைத் தாறுமாறாக உயர்த்தி அப்படத்தில் இருந்து நழுவினாராம்.



ஸ்ரீகாந்த்-மாளவிகா பெயரிடப்படாத தெலுங்குப்படம்

## கன்னடத்தில் பிஸி

தமிழில் பெரு வெற்றி பெற்ற 'வானத்தைப் போல' கன்னடத்தில் 'எஜமானா' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. தமிழைப் போலவே கன்னடத்திலும் 'எஜமானா' பெருவெற்றி பெற்றுள்ளது.

இந்தக் கன்னடப்படத்தை இயக்கியவர் தமிழ் இயக்குநரான ராதாபாரதி. இவர் வேறுயாருமல்ல, பிரசாந்த் நடித்த 'வைகாசி பொறந்தாச்சு' படத்தை இயக்கியவர்.

கன்னடத்தில் இப்போது பிஸியாக இருக்கும் ராதாபாரதி தமிழில் இப்படிப் பிரபலமாக முடியவில்லையே என்று வருத்தப்படுகிறார்.

## தெலுங்கில் கவுண்டர்

சாய் சுரேஷ் இயக்கத்தில் சத்யராஜ்-ரம்பா ஜோடியாக நடித்த 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்' தமிழில் நன்றாக வசூல் செய்ய, அதை அப்படியே தெலுங்கில் தயாரிக்கவுள்ளார்கள்.

தமிழ்ப்படத்தை இயக்கிய சாய் சுரேஷ் தான் தெலுங்குப் படத்தையும் இயக்கவுள்ளார். சத்யராஜ் வேடத்தில் தெலுங்கில் நடிப்பவர் வெங்கடேஷ்.

## பந்தா இல்லாத குணால்

ஒரு படத்திற்கு பத்து இலட்சம் சம்பளம். எந்த மாதிரியான வேடமாக இருந்தாலும் ஓகே. இத்தனை மணி நேரம் தான் நடிக்க முடியும். இப்படி எல்லாம் வசதி வேண்டும். கூட வருபவர்களைக் கவனிக்க வேண்டும் என்பது போன்ற பந்தா எதுவும் இல்லாமல் நடித்து வருகிறார் குணால்.

இதனால் இவர் புதிது புதிதாகப் பல படங்களில் ஒப்பந்தமாகி நடித்து வருகிறார்.

## பிரமாண்டத் தயாரிப்பு

சில காலம் படத்தயாரிப்பை நிறுத்தி வைத்திருந்த ஜி.வி.குமார் 5 வருட இடைவெளிக்குப் பின் மறுபிரவேசம் செய்திருக்கிறார்.

மறுபிரவேசம் மூலம் மிகப்பெரிய வெற்றியை எட்ட வேண்டும் என்ற நோக்கில் இவர் தயாரிக்கும் படத்தில் விஜய்-முன்னாள் உலக அழகி பிரியங்கா சோப்ரா ஜோடியாக நடிக்கின்றனர்.

புதிய இயக்குநர் ஒருவரது இயக்கத்தில் உருவாகவுள்ள இந்தப் பெயரிடப்படாத படத்தை பிரமாண்டமாகத் தயாரிக்கிறார் ஜி.வி.

## மினி சினி

பகுத்தறிவுத் தந்தை ஈ.வே.ரா. பெரியார் வேடத்தில் நடிக்கவுள்ளார் மம்முட்டி. இந்தப் படத்தை 'பாரதி' படத்தை இயக்கிய ஞானராஜசேகரன் இயக்கவுள்ளார்.

பிரபுதேவா ஜோடியாக 'மனதைத்திருடி விட்டாய்' படத்தில் அறிமுகமான காயத்ரி ஜெயராம் தற்போது சூர்யா கதாநாயகனாக நடிக்கும் 'ஸ்ரீ' படத்தில் இரண்டாவது நாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

பாரதிராஜாவின் மகன் மனோஜ் இப்போது தனது பெயருக்குப் பின்னால் தன் தந்தையின் பெயரில் முன்பாதியைச் சேர்த்து மனோஜ் கே.பாரதி என்று பெயரில் மாற்றம் செய்துள்ளார்.

ராமராஜன் அடுத்து நடிக்கும் 'பொன்னான நேரம்' படத்தில் முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்ட அபிதா நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக பிரத்யூஷாவை நடிக்க வைத்துள்ளனர்.

ஜெயதேவி இயக்கத்தில் குஷ்பு, பாடகர் ஹரிகரன் நடிக்கும் 'பவர் ஒஃப் வீமன்' படத்தில் ஹரிஹரன் பாடகர்-ஓவியர் வேடத்தில் வருகிறார்.

ஷங்கர் இயக்கத்தில் இந்தியில் தயாரான 'நாயக்' படத்தில் இடம் பெறும் 'ஷக்கலக்க பேபி..' பாடலுக்கு தமிழ் 'முதல்வனில்' நடனமாடிய சுஷ்மிதா சென்னே நடனமாடியுள்ளார்.

அர்ஜுன் இயக்கி நடித்த 'வேதம்' படம் தெலுங்கில் 'லேடீஸ் அண்ட் ஜெண்டில் மன்' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வருகிறது.

கே.பாக்யராஜ் தயாரிப்பில் அவரது சிஷ்யன் பாண்டியராஜன் இயக்கி நடித்த 'கபடி கபடி' ஒருவாறாக அண்மையில் வெளியாகி விட்டது. இதில் சங்கீதா நாயகியாக நடித்துள்ளார்.

ழகப்பில் பிரசாந்த் தேவயாணி அபிதா

## 'காசி'யான கண்மணிகள்

மலையாளத்தின் பிரபல இயக்குநர் வினயன் இயக்கிய 'கருமாடிக்குட்டன்' என்ற படம் பெருவெற்றி பெற அதை 'காசி' என்ற பெயரில் தமிழில் தயாரிக்கிறார்கள்.

'கருமாடிக்குட்டன்' மலையாளப் படத்தை இயக்கிய வினயனே தமிழ்ப்படத்தையும் இயக்குகிறார். இதில் கண்பார்வையற்றவர் வேடத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் விக்ரம்.

'காசி' படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் 'என் கண்மணிகள்'. இப்படத்தில் விக்ரமிற்கு ஜோடியாக அறிமுகமாகிறார் மலையாள வரவான காவ்யா மாதவன்.

## அருண்பாண்டியனின் 'தேவன்'

ஆபாவாணனால் அறிமுகப்படுத்தப்பட்ட அருண்பாண்டியன் விரைவில் சதமடிக்கப்போகிறார். இவரது நூறாவது படத்தின் பெயர் 'தேவன்'.

தேவன் என்ற குற்றவாளியை மையப்படுத்தி எடுத்திருக்கும் இப்படத்தில் குற்றவாளி வேடத்தில் மொட்டையடித்து நடிக்கிறார் அருண்பாண்டியன்.

இதில் போலீஸ் அதிகாரி வேடத்தில் விஜயகாந்தும் வக்கீல் வேடத்தில் கார்த்திக்கும் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள்.

இப்படத்தின் திரைக்கதையை அமைத்து இயக்குகிறார் அருண் பாண்டியன்.



சந்தானபாரதி-திவ்யாஸ்ரீ
படம்: பெண்கள்

## அடுத்த வாரிசு

கவர்ச்சி நடிகை அனுராதா தன் மகளைத் தனது திரையுலக வாரிசாக களமிறங்கியதை அடுத்து இன்னொரு முன்னாள் கவர்ச்சி நடிகையான ஜெயமாலினியும் தன் மகளைக் களமிறக்கக் காத்திருக்கிறார்.

திரையுலகில் தெளிவு கழிவுகள், அனுகுமுறைகள் போன்றவற்றை மகளுக்குப் பாடமெடுத்து ஆயத்தப்படுத்தி வருகிறார் ஜெயமாலினி.

## சினி விசிட்



சொரூபா

## நட்சத்திரங்களின் சம்பளங்கள்

தமிழில் வெளியாகும் படங்களின் எண்ணிக்கை குறைந்து விட்டன. இருப்பினும் நடிக, நடிகைகளின் சம்பளங்கள் மட்டும் எட்டாத உயரத்திற்குப் போய்க் கொண்டிருக்கின்றன.

தமிழில் அதிக சம்பளம் வாங்கும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் கடைசியாக நடித்த 'அருணாச்சலம்', 'படையப்பா' போன்றவை அவரது சொந்தப்படங்கள் என்றபடியால் அவரது சம்பளம் தெரியவில்லை. இனிமேலும் சொந்தப்படங்களில் தான் நடிப்பார் போல் தெரிகிறது.

அடுத்தது கமலஹாசன். இவர் நடித்து கடைசியாக வெளியான 'தெனாலி' படத்தின் தயாரிப்பாளர் இப்படத்தின் இயக்குநரான கே.எஸ்.ரவிக்குமார். 'தெனாலி' படத்தில் நடிக்க கமலுக்கு கே.எஸ்.ரவிக்குமார் 5 கோடி இந்திய ரூபாய் கொடுத்தார். 'தெனாலி'யின் பெருவெற்றியை அடுத்து 'ஆளவந்தான்' படத்திற்கு கமல் வாங்கிய சம்பளம் 7 கோடி ரூபாய்.

விஜயகாந்த் ஒரு படத்திற்கு 4 கோடி வாங்குகிறார். 2 கோடி முற்பணமாகக் கொடுக்க வேண்டும்.

இவர்களை அடுத்து அதிக சம்பளம் வாங்குபவர்கள் இளம் முன்னணி நடிகர்கள். விஜய்-அஜித் படத்திற்கு 3 கோடி வாங்குகிறார்கள். குறிப்பிட்ட சில படநிறுவனங்களுக்கு மட்டும் இவர்கள் குறைவாகச் சம்பளம் பெறுவார்கள்.

மாதவன் ஒன்றரைக் கோடியும் விக்ரம் ஒரு கோடியும் வாங்குகிறார்கள். ஏனையவர்கள் ஒரு கோடிக்கும் கீழ் தான் வாங்குகிறார்கள்.

நடிகைகளில் அதிகம் வாங்குபவர் ஜோதிகா. முதலில் முப்பது இலட்சம் வாங்கியவர் இப்போது அதை இரட்டிப்பாக்கிக் கேட்கிறார்.

இவரை அடுத்து லைலா 15 இலட்சமும் சிம்ரான் 25 இலட்சமும் ஸ்நேகா 15 இலட்சமும் மும்தாஜ் 10 இலட்சமும் வாங்குகிறார்கள்.

## படமாகும் நாவல்

'கண்ணா உன்னைத் தேடுகிறேன்' தோல்விப்படத்திற்குப் பின் கவலைடமி நடிக்க ஒப்புக்கொண்டிருக்கும் புதிய படம் 'ஜமீலா'. நடிகர் பொன்வண்ணன் இயக்கத்தில் உருவாகும் இப்படத்தில் நாயகனாக பொன்வண்ணனே நடிக்கிறார்.

பிரபல நாவலாசிரியர் சாரா அபூபக்கர் எழுதிய 'சந்திரகிரி ஆற்றங்கரையில்' என்ற நாவல்தான் 'ஜமீலா' படத்தின் கதை.

நகைச்சுவை நடிகர்கள் மத்தியில் விவேக் காட்டில்தான் அடைமழை. ஒரு படத்திற்கு 10 அல்லது 12 இலட்சம் சம்பளம் பெறுகிறார். ஒரு படத்திற்கு இவர் வேலை செய்வது 5 அல்லது 6 நாட்கள் மட்டுமே. அப்படிப்பார்த்தால் ஒரு நாளைக்கு 2 இலட்சம் சம்பளம் வாங்குகிறார் விவேக்.



கிங்காங்-எஸ்.எஸ்.சந்திரன்-சங்கீதா-அலெக்ஸ்
படம்: என்றும் ஆனந்தம்

## ணை வாழ்வில் சிக்கல்

வீட்டை எதிர்த்துக் கொண்டு இளம் இயக்குநராக் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட தேவயாணிக்கு அதன்பின் பெரிதாகப் பட வாய்ப்புக்கள் வரவில்லை. ஏற்கனவே ஒப்புக்கொண்ட பல படங்களில் இருந்து கூட அவர் நீக்கப்பட்டார்.

திருமணத்தின் பின் தேவயாணியின் கணவரும் இயக்குநருமான ராஜகுமாரன் இயக்குவதாக இருந்த படங்களும் நிறுத்தப்பட்டு விட்டன. இப்போது படமெதுவும் இல்லாமல் இருக்கும் ராஜகுமாரன், தேவயாணிக்கு வரும் பட வாய்ப்புக்களையும் அது சரியில்லை இது சரியில்லை என்று தட்டிக் கழித்து வருகிறார்.

இதனால் இவர்களது மணவாழ்வில் சிக்கல் தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

## மும்தாஜின் கரிசனை

"மத்த தொழிலாளிகளைவிட செக்ஸ் தொழிலாளி எந்த வகையிலும் குறைச்சல் இல்லே. மத்தவங்களைவிட செக்ஸ் தொழிலாளிக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கு என்று அனுபவிச்சுப் பார்த்தாத்தான் தெரியும். அவங்களை இந்த சமூகமும் அரசாங்கமும் அங்கீகரிக்கணும்"

இப்படிப் பார்ப்பவர்களிடம், எல்லாம் வேதனையுடன் கூறி வருகிறார் மும்தாஜ். செக்ஸ் தொழிலாளி மேல் இவருக்கு ஏன் இந்தத் திடீர் கரிசனம்?

'குயில்' என்ற படத்தில் மும்தாஜ் விலை மகளாக நடிக்கிறார். இதில் நடிக்கும் போது ஏற்பட்ட அனுபவம் தான் இந்த உச்சக்கொட்டலுக்குக் காரணமாம்.

# உலகப் புகழ்பெற்ற புகைப்படம்



உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் இந்தப்படத்திற்கு விளக்கம் தேவையில்லை. இயல்பாக எடுக்கப்பட்ட மிகச் சிறந்த புகைப்படங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

உலகின் சிறந்த புகைப்படங்களுக்காக வழங்கப்படும் 'புலிட்சர் விருது' இந்தப் படத்திற்குக் கிடைத்தது. இப்படத்தை பிரபல புகைப்படக் கலைஞர் பில்பியால் என்பவர் எடுத்தார்.

(படமும் தகவலும்: எஸ். பிரதீப்)

# ஊருக்குப் போய் இருந்தேன்...

மனித முகங்கள்
மாறிப் போய் இருந்தன
பள்ளமும் திட்டியுமாய்
பல்லிலித்து காட்டியபடி
பகட்டாக வரவேற்றது
எனதூர் பிரதான வீதி...

எவனோ ஒருவன் என்று
என்னை ஏறிட்டுப் பார்க்கின்றார்கள்
எவர் மீதும் எனக்கு கோபமில்லை
என் வெள்ளை தோலும்
வித்தியாசமான பார்வையையும்
அவர்கள் விளங்கிக் கொள்ள
நியாயமில்லை...

மீளவும் கால் பதிப்பேன்
என்று கனவிலும் நினைத்ததில்லை
விடியலுக்கு முன்பே
விரட்டப்பட்ட நான்
நீண்ட இடைவெளிக்குப் பிறகு
மீண்டும் வீடு திரும்புகின்றேன்...

நான் புகுந்து வந்த
புதர்களும் மதகுகளும்
என்னைப் பார்த்து புன்னகைத்து
சொல்லாமலே போன என்னை
நல்லா இருக்கிறாயா
என்று நலம் விசாரிக்கின்றன...

நானும் என் நண்பர்களும்
தாவித்திரிந்த ஆஸ்பத்திரி
நாவல் மரமும்-மாவும்
வாதுகளை இழந்து-தன்
வயோதிபத்தை காட்டுகின்றன...

ஒன்றா-இரண்டா
ஒன்பது வருடங்களை
எங்கோ தொலைத்துவிட்டு
வீடு திரும்பும் என்னை
வெறித்துப் பார்க்கின்ற
அயல் வீட்டு முகங்கள்...

எனக்கு மீசை வளர்ந்து
விட்டதால் பேச கூச்சப்படும்
என் மாமி வீட்டு ரோஜாக்கள்
வேலி இடுக்குகளில்
மீடுக்காய் எட்டிப் பார்த்து
தொலைந்த என் பழைய முகத்தை
தேடிப்பார்க்கிறார்கள்...

ஏக்கங்களும்-எதிர்பார்ப்புகளும்
எதிர் காலமாகிவிட்டதால்
ஆச்சரியக்குறிகளான
அப்பாவிகளின் வாழ்வில்
சமாதானக் காற்று எப்போது
சாமரம் வீசப்போகிறது...?

கனவுகளை சுமந்தவாறு
கண்ணயர்ந்து போகையிலே
எங்கோ ஒரு நாய்
ஊளை இட்டு செல்கிறது...
நாளைய விடியலில்
நம்பிக்கை இல்லாமலே
ஒவ்வொரு இரவுகளும்
ஓய்வெடுத்துக் கொள்கின்றன என்று...!

தாமரைமகன், திருமலை.

# காதலித்த காலம்

அங்கே..!
அலைகளுக்குப்
போட்டியாய்-தம்
பாதப்பதிவுகளைப்
பாதுகாக்கத் துடிக்கும்
ஆயிரம் சோடிக்
காதலர்கள்.

என் கன்னத் தாடிக்கு
தலைசீவிக் கொள்கிறது
ஞாபகச் சீப்பு.

நான் சட்டைப்
பொத்தான்களைப்
பூட்டத் தொடங்கியதும்,
சவரக்கத்திக்கு-என்
முகத்தை
அறிமுகப்படுத்தியதும்...
அவள் எனக்கு
அறிமுகமான பிறகுதான்.

என் கண்ணில்
பார்த்துக்கொண்டு-அவள்
பொட்டு வைத்ததும்,
அவள் கன்னத்தில்
பார்த்து-நான்
தலைசீவிக் கொண்டதும்
அப்போது...

நான்...!
'அலைகள் ஓய்வதில்லை'
பார்த்தது முதலாய்-அவளின்
அன்பு கொண்டவன்.
அவள்..!
'அலைபாயுதே...'
பார்த்ததுமே... -என்
காதலை வெறுத்தவள்.


ஆற்றுப்படுகையாய்-
எங்கள்
மனக் கலப்பும்,
ஆவியுயிர்ப்பாய்
மணக் கலைப்பும்
எங்களில் முடிந்தது.

இந்தக்
கொஞ்ச நாட்களாய்தான்
கடற்கரையோரக்
காலடிப் பதிவுகள் போல-என்
காதல் நினைவுகள்
மெதுவாய்க்
கரைந்து கொண்டிருக்கின்றன.

இதற்குள்
அலைக்குப் போட்டியாய்...
ஆயிரம் காதலர்கள் அங்கே!
இங்கே...
என்னைப் பார்த்து-ஒரு
அலை நண்டு சிரிக்கிறது...
ஒளிந்து கொண்டு
அவளைப் போல....

சம்பூர் எம். வதனரூபன்.


# பேனா நண்பர்கள்



பெயர்: எஸ். வசீகரன்,
வயது: 24
முகவரி: பிரதான வீதி, தம்பட்டை-01, தம்பிலுவில்.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். இந்திரா தேவி,
வயது: 19
முகவரி: இல. 333, முவனன்கந்தை, மாவத்தகம.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம். ஹமீட்
வயது: 23
முகவரி: 73, பிரதான வீதி, பண்டாரவளை.
பொழுது போக்கு: கிரிக்கெட்.

# உன் மௌனங்களால்...

என்
எதிர்பார்ப்புகள்
உன் வருகைக்காக
காத்திருந்து
உன் வீதியை
சுத்தம் செய்யும்!

நீ
வெள்ளையுடையில்
வருவதைக் கண்டு
என் விழிகளிரண்டும்
நீலமாய் கரைந்துவிடும்!

உன்
ஓரப்பார்வையின்
ஓய்யாரம்-என்
ஐம்புலன்களையும்
கொஞ்சம் அசைத்துப்
பார்க்கும்!

எத்தனை தடவைகள்
உரைத்திருப்பேன்
என் இதய விருப்பங்களை!

ஆனால் நீ
மௌன வேசம்
போட்டல்லவா-உன்னை
மறுத்துக் கொண்டிருக்கிறாய்!

உன் 'பர்தா' ஓரங்களில்
படிந்திருக்கும்
புழுதியாயாவது நான்
இருக்கக் கூடாதா?

ஒலிவிலூர் ஏ.எம்.சாலிஹ்.

# காணாமல்போன காதலிக்கு...

உன் நினைவுகள்
இன்னுமென்னை
சித்திரவதைக்குள்ளாக்கும்!

என் சந்தோஷங்கள்
உன் ஞாபகங்களில்
எரிந்து சாம்பலாகும்!

ஸகி..!
உன் சல்வார்
கமிஷ்களின் இடுக்குகளில்
சிக்குண்டுச் சருகாய்ப்போன
என்னுள்ளத்தின் ஊனமான
எண்ணங்கள்
உன்மீது வழக்கு(த்)
தொடர முடியாமல்....

உன்
சுகந்த ஸ்பரிசங்களின்
சூட்டுக் காயங்களால்
சுத்தமாக நொந்துபோனது
என்னிருதயம் மட்டுமா?

இனிமையான
இல்லறமும்தான்!

இனியென்ன
வேண்டிக்கிடக்கிறது
இரட்டிப்பான
உன் சந்தோஷங்களுடன்
இறுதியாய் ஒருமுறை
என்வீட்டுப் பக்கம்
வந்து போ!

# தேன் கிண்ணம்

சிதைந்து கிடக்கும்
என்னிதயத்திற்கு
சிகிச்சையளிக்கவல்ல...
சவமாய்க் கிடக்கும்
என் சடலத்திற்கு
சமாதி
கட்டுவதற்கோர்
இடம் காட்டிச்
செல்ல...!

து. பிரபாஹர்,
ஹப்புத்தளையூர்.





# இலட்சியம் வெற்றியின் நிச்சயம்

அணுவிலிருந்து அண்டம் வரை எல்லா பொருட்களும் எப்படி அமைந்துள்ளன. என்பதை இருந்த இடத்தை விட்டு நகராமல் தத்துவ ஞானிகள் கூறியிருக்கிறார்கள். இவர்களால் மட்டும் எவ்விதம் கூற முடிந்தது.

இருக்கும் இடத்திலேயே உண்மையைக் கண்டுபிடிக்க முடியும் என்ற இலட்சியத்துடன் இருந்ததுதான். இலட்சியத்துடன் தொடங்கப்பெற்ற எந்தக் காரியமும் தோல்வி அடைந்ததாக உலக சரித்திரத்தில் செய்தி இல்லை.

இலட்சியம்தான் உலகை இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதனை என்றும் நினைவில் வைக்க வேண்டும். விஞ்ஞானிகள், மதக்கோட்பாட்டினை ஆராய முற்பட்டவர்களில் பலர் உயிரை விட்டிருக்கின்றனர்.

மதக்கருத்துக்கு மாறுபட்டு கூறுவது பெரிய குற்றமாகக் கருதப்பட்ட காலத்திலும் கூட கவலைப்படாமல் தான் கண்டறிந்த உண்மைகளை உலகிற்கு எடுத்துக் காட்டியே தீருவது என்ற இலட்சியத்துடன் பாடுபட்டவர்கள் சிலர் இருந்திருக்கிறார்கள்.

தொன்று தொட்டு வழங்கி வந்த கருத்துகள் சரியானவையல்ல என்று தீர்மானம் செய்தவர்களில் சிலர் மதக் குருக்களாகவே இருந்திருக்கிறார்கள். மதத்தின்பெயரிலேயே பெரிய புரட்சியைச் செய்தவர் மாட்டின் லூதர். இவர் ஒரு இலட்சியவாதி. தன்னுடைய இலட்சியத்தில் உறுதியாக இருந்து உண்மைகளைக் கண்டறிந்து உணர்த்தினார்.

பூமியை மையமாகக் கொண்டு சூரியனும் கிரகங்களும் சுற்றி வருகின்றன என்ற கருத்து தவறானது என்று துணிந்து கூறினார். அவர்தான் பூருனோ. இந்த இத்தாலி அறிஞரின் இலட்சியம் கொடிய மரணத்தைத் தேடித் தந்தது.

மதத்தின் பெயராலும் ஆண்டவனின் பெயராலும் இவர் சிறைப்படுத்தப்பட்டார். எட்டு ஆண்டுகள் சிறையில் வாடியும் இவரது இலட்சியம் மனத்தளர்ச்சி அடையவில்லை. தன்னுடைய இலட்சியத்தை மாற்றிக் கொண்டு மன்னிப்பு கேட்பார் என்று பகைவர்கள் நினைத்தது பொய்யாயிற்று.

சிறைவாசத்தாலும் சித்திரவதையாலும் பாதிக்கப்பட்ட இவரை உயிருடன் வைக்கக்கூடாது என்று மத குருக்களின் மன்றம் தீர்மானம் செய்தது.

அதன்படி புரூனோ ஒரு கம்பத்தில் கட்டப்பட்டு உயிரோடு எரிக்கப்பட்டார். மேல் நோக்கி எழும் தீ இவருடைய உடலை ஆழம் பார்க்கும் நிலையிலும் இலட்சியத்தை விட்டு விடவில்லை. மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை.

இறக்கும் தருவாயில் எதிரிகளை இகழ்ச்சியுடன் நோக்கி, "இன்று நான் மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை. என்னைக் கொல்லும் நீங்களோ அஞ்சி நடுங்குகிறீர்கள் என்பதற்கு இந்தச் செயலே சான்று" என்றார்.

புரூனோவின் இலட்சியம் சுடர்விட்டு பிரகாசித்தது. அவர் கூறிய கருத்துகள் நாளடைவில் உண்மையானது. இதுவே அவருடைய எதிரிகளின் செல்வாக்கை அழிக்க ஆரம்பித்தது.

இலட்சியத்தின் துணை கொண்டு செயல்பட்டால் எதிர்க்க வரும் எதுவும், இருக்கும் இடம் தெரியாமல் ஓடிவிடும். கலிலியோவையும் மதவெறி கொடுமைப் படுத்தியது.

தன்னுடைய இலட்சியத்தைப் பகிரங்கப்படுத்தியபடியினால் சிறைத்தண்டனைப் பெற்றார். ஆனால் இலட்சியத்தை கைவிடவே இல்லை! தான் கண்டறிந்த உண்மைகளை கூறிக்கொண்டேதான் இருந்தார்.

அதனால்தான் அவர் விஞ்ஞானிகளின் தந்தை என்று போற்றப்படுகிறார். இவர்களைப் போல நாமும் இலட்சியத்தில் உறுதியாக இருந்து புகழ்பெற முடியும் அல்லவா.

# இந்தவாரம் உங்கள் பலன்

07.10.2001 தொடங்கி 13.10.2001வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன், வெள்ளி |
| தனு | - செவ்வாய், கேது |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு |

**சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்**

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழிற் பிரச்சனைக்கு இடமுண்டு. கருமங்களில் திடீர் தேக்கமும் பொருள்வரவும் குன்றும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்களுக்கு உத்தியோக ரீதியான நன்மைகள் வார இறுதியில் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள் : வியாழன்
அதிஷ்ட இல. : 07

### இடபம்:

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் நிலையிலும், குடும்பத்திலும் இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். பொருளாதாரம் சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் நன்மையடைவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள் : திங்கள்
அதிஷ்ட இல. : 04

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) எதிர்பார்த்த கருமங்களில் தடைகள் ஏற்படும். குடும்பத்தில் வார இறுதியில் நன்மைக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தில் உள்ளோர் விழிப்புடன் நடந்து கொள்வர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள் : செவ்வாய்
அதிஷ்ட இல. : 05

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் கஷ்டங்கள் தீரும். பொருள்வரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள் : புதன்
அதிஷ்ட இல. : 06

### சிங்கம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில்நிலையில் நன்மையுண்டாகும். குடும்பசுகம், பொருள் வரவு சிறந்து விளங்கும். வார இறுதியில் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு எதிலும் பிரச்சனைகள் தோன்றும். கவனம் தேவை. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள் : செவ்வாய்
அதிஷ்ட இல. : 04

### கன்னி:

(உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் நிலையிலும், குடும்பநிலையிலும் ஓரளவு முன்னேற்றம் உண்டாகும். பொருள்வரவு சிறந்து விளங்கும். உத்தியோக ரீதியாக இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். மாணவர்களுக்கு, கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள் வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்தல் நன்மை தரும்.

அதிஷ்ட நாள் : வெள்ளி
அதிஷ்ட இல. : 03

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் முன்னேற்றம். காரியானுகூலம், பொருள்வரவு உண்டாகும். வெளியிடப் பிரயாணங்களால் கஷ்டங்கள் தோன்றும். உத்தியோகஸ்தர்கள் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள் : புதன்
அதிஷ்ட இல. : 02

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் ரீதியாக பிரச்சனையுண்டாகும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்கள் எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலபம் அடைவர்.

அதிஷ்ட நாள் : வியாழன்
அதிஷ்ட இல. : 05

### தனு:

(மூலம், பூராடம் உத்தராடத்து முதற்கால்) தொழில் முன்னேற்றம். குடும்ப நன்மை, பொருளாதார பேறு உண்டாகும். வெளியிட பிரயாணங்களில் கவனம் தேவை. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பு தரும்.

அதிஷ்ட நாள் : புதன்
அதிஷ்ட இல. : 07

### மகரம்:

(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) காரியானுகூலமும், பொருள் நன்மையும் உண்டு. குடும்பத்தில் எதிர்பார்த்த காரியமொன்று நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மைதரும். மாணவர்களுக்கு கல்விச்சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஷ்ட நாள் : வெள்ளி
அதிஷ்ட இல. : 06

### கும்பம்:

(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி, முன்முக்கால்) தொழிலில் இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். பணவரவு, குடும்பநன்மை சிறந்து விளங்கும். வெளிநாட்டு பிரயாணங்கள் சிலருக்கு கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் சிலர் பதவி உயர்வுகளைப் பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள் : திங்கள்
அதிஷ்ட இல. : 01

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) கருமங்களில் வெற்றியும், பொருள்வரவும் ஏற்படும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் சில்ருக்கு தீரும். உத்தியோகஸ்தர்கள் வீண் கவலையடைவர். மாணவர்களுக்கு கல்வித்தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதிலும் விழிப்புடன் நடந்து கொண்டால் இலாபம் ஏற்படும்.

அதிஷ்ட நாள் : செவ்வாய்
அதிஷ்ட இல. : 05

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உரையாடும் போது உரத்துச் சிரிக்கலாமா?



1. பேசும் போது கண்களுக்கு முக்கிய வேலையளிக்க வேண்டும். கண்களின் பளிச்சிடும் உணர்வுகளைப் போன்று உரையாடலுக்கு கவர்ச்சி சேர்ப்பது வேறு இல்லை.

2. பேசும் போது தயக்கம் காண்பிக்கக் கூடாது. தங்கு தடையற்றுச் சரளமாகப் பேசினால் அதன் மகத்துவமே தனிதான்.

3. பேச்சிலே தயக்கம் இருந்தால் மனப் பூர்வமான விஷயங்களை வெளியிடவில்லை என நமது பேச்சினைச் செவி மடுப்பவர்கள் அவநம்பிக்கை கொள்ள நேரும்.

4. பேச்சின் இடையிடையே முணு முணுப்பு இருக்கக்கூடாது.

5. பேசும் போது உணர்ச்சிவசப்பட்டு ஆவேசக் கூச்சல் எழுப்பிவிடக்கூடாது.

6. உரையாடும் நேரம் முழுவதும் தாழ்ந்த மரியாதை தவழும் குரலிலேயே பேச வேண்டும்.

7. ஆவேசமாக விவாதம் செய்வதை உரையாடலின் போது தவிர்க்க வேண்டும்.

8. பேசும்போது கூடியவரை தங்கள் பேச்சை ஒருவர் குறைத்துக் கொண்டு மற்றவர் பேசுவதற்கு அதிக இடமளிக்க வேண்டும்.

9. நம்மோடு உரையாடுவோரின் பேச்சு சரியல்ல என்ற போதில் சகிப்புத் தன்மையைக் காண்பித்து அமைதியாக இருக்க வேண்டும்.

10. உரையாடலை முடிக்கும் போது மிகவும் சமுகமான சூழ்நிலை உங்களுக்கும் உங்களுடன் உரையாடுவோருக்குமிடையே இருக்கும் வண்ணம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

11. அதிகமாகச் சத்தமிட்டுச் சிரிக்கக் கூடாது. சலங்கையொலி எழுவது போன்று மிகவும் மெல்லிய குரலில் கலகலவென சிரிப்பது பார்க்க அழகாக இருக்கும்.

12. அதிகமாக வாயைத்திறந்து பற்கள் அனைத்தும் வெளியே தெரியும்படி சிரிக்கக் கூடாது.

13. உதடுகளை இலேசாக விரித்து பற்கள் பாதியாகவே தெரியுமாறு சிரிக்க வேண்டும். எப்போதும் அழகாக புன்னகை பூத்துக் காட்சி அளிப்பது கவர்ச்சியூட்டும் நல்ல வழக்கமாகும்.

## அங்க அழகுகள் சிறக்க தங்கமான சில யோசனைகள்

### முகம்

குளிர் காலங்களில் முகத்திலுள்ள நரம்புகள் சிவந்து காணப்படும். இக்காலங்களில் முகத்துக்கு அடிக்கடி அழுத்தம் கொடுக்கப்படலாம். ஒவ்வொரு பாகத்தையும் விரல்களால் அழுத்தி 'மஸாஜ்' செய்யப்பட வேண்டும்.

முகத்துக்கு ஒப்பனை செய்வதற்கு முன் 'கிளென்சிஸ்' கிறீம்-துப்பரவு செய்யும் களிம்பு தடவி சுத்திகரிக்கலாம். புருவங்களையும் சீராக்கிக் கொள்ளுதல் வேண்டும். காலையிலும் மாலையிலும் முகத்தை துப்பரவாகக் கழுவிக் கொள்ள வேண்டும்.

### நகம்

பெண்களுக்கு ஏனைய அவயவங்கள் அழகுகூட்டுவதுபோல் அவர்களுடைய நகங்களும் அழகாகவும் கவர்ச்சியாகவும் அமைய வேண்டும். நகத்தை வெட்டும் போது மிகவும் அவதானமாக இருத்தல் அவசியம். நகங்களை நறுக்குவதற்கு முன்னர் சிறிதளவு எண்ணெய்யைத் தடவி 'மஸாஜ்' செய்யலாம். நகத்தின் நடுப் பாகத்தை குறிவைத்து வெட்ட வேண்டும். இரு ஓரங்களையும் நேர் பார்த்து அமைப்பாக வெட்ட வேண்டும். இதன் பின்னர் உரிய களிம்பு பூசி 'மஸாஜ்' செய்த பின்னர் 'கியூரெக்ஸ்' பூசலாம்.

நகம் வெட்டுவதில் போதுமான கவனம் செலுத்தாவிட்டால், அவை பலம் குன்றி உடைந்து விட நேரிடும்.

### பாதங்கள்

பாதங்களும் கால்களும்கூட ஏனையோரின் பார்வையைக் கவரும் பாகங்களாகும். இவை எப்போதும் துப்பரவாகவும் பளபளப்பாகவும் இருக்கவேண்டும். குதிகளில் சிலருக்கு வெடிப்புக்கள் தோன்றி அழகைக்கெடுக்கும். இதனால் தாங்க முடியாத வேதனையும் ஏற்படலாம். இதற்கு எண்ணெய் அல்லது வெஸ்லின் என்ற களிம்பு பூசினால் தற்காலிக நிவர்த்தி கிடைக்கும். மருதோன்றி இலையினை அரைத்துப் பூசி வந்தால் சில நாட்களில் வெடிப்பு மறைந்து நோவு நீங்கிவிடும்.


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KE

பெயர்:......................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-10-2001**


அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
### மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

திருமதி. சீ.அரசம்மா
பாக்கியா ஸ்ரூடியோ, மன்னார்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




"கேட்டா இல்லைன்னு தான் சொல்வா. என்னைத் திட்டுவா! நீங்க அனிதாவை-நம்ம குழந்தையையே- அபாண்டமா சொல்றது எத்தனை நியாயம்? அத்தனை கோபம் வர்றதே! நம் குழந்தையை- பெத்தப் பொண்ணையே குறை சொல்றது என்ன நியாயம்னு யோசிச்சுப் பார்க்க மாட்டீங்களா? உங்களுக்கு உங்காத்து மனுஷா அத்தனை பேரும் நல்லவா... எம் பொண்ணு தான் கெட்டவ!" என்று கமலம் சொல்ல.

"அவ எம்பொண்ணும்தான்" என்றார் மகாதேவன்.

"இப்ப என்ன ஆயிடுத்து... இந்த வரன் இல்லாட்டா வேற வரன்!"

"அவ மனசில என்ன வெச்சுண்டிருக்கான்னு கேட்டுரு."

"ஒண்ணுமில்லை! 'மேல படிக்கணும், இந்த வருஷம் கல்யாணம் வேண்டாம்'னு தான் சொல்றா. வயசு என்ன வயசுங்கறேன் அவளுக்கு? எதுக்காக அவசரப்படணும்?"

"இப்படியே சொல்லிண்டு முப்பது வயசு வரைக்கும் தள்ளிப் போடணுமா?"

அனிதா இதையெல்லாம் விடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். 'போதுமே உங்கள் சண்டையை நிறுத்துங்களேன்' என்று மனசுக்குள் இரைந்து கத்தினாள்.

'நான் அவர்கள் சொல்லும் மாலைக்கு கழுத்தை நீட்ட வேண்டிய அடிமை. ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள். ஒரு மாமி லூனாவில் ஆடைகள் இறக்கைகள் போலப் பறந்து சென்று கொண்டிருந்தாள். எத்தனை சுதந்திரம் இவளுக்கு!

ஆனால், விளிம்பில் ஒரு சந்தோஷம் இப்போது இருக்கத்தான் செய்தது.

கல்யாணம் இப்போது கிடையாது.

கல்யாணம் இப்போது கிடையாது.

"மிஸ் அனிதா... எப்படி உங்களுக்கு சோமாலியாவுக்கு வந்து உதவி செய்யணும்னு தோணிச்சு?"

"இந்தக் குழந்தைகளின் கண்களில் கடவுளைக் காண்கிறேன்'னு 'டைம்' பத்திரிகைல ஒரு லெட்டரைப் பார்த்தேன்."

மதுவுக்கு போன் செய்து பேச வேண்டியது கட்டாயம் என்று தோன்றியது. அப்பா தன் ரெக்ஸீன் பை, ஸஃபாரி ஸூட். காலருக்குள் செருகப்பட்ட கைக் குட்டை. வெற்றிலைப் பெட்டி இவற்றுடன் கிளம்பினதும்தான் அனிதா, ரூமை விட்டு வெளியே வந்தாள்.

சமையல் அறையில் ஜிம்புவுக்குச் சாப்பாடு கட்டிக் கொண்டிருந்த அம்மாவிடம் சென்று மேடை மேல் சாய்ந்து கொண்டு, "என்னம்மா பண்றே?" என்றாள்.

"அனி... நன்னா கேட்டுட்டேன்! பூனைக்கும் ஒரு காலம் வரும்னு உன் அத்தைதான் அவளுக்கு ஏதாவது மொட்டைக் கடுதாசி எழுதியிருக்கணும் அனி. நீ ஏதும் பண்ணலைதானே கண்ணு...?"

"இல்லைம்மா... நான் ஏதும் செய்யலை!"

"பின்ன ஏன் வாண்டாம்னு அவா சொல்லிட்டா?"

"சொல்லிட்டுப் போகட்டுமேம்மா... அதனால என்ன?"

"அதானே, என் செல்லத்தைக் கட்டிக்க க்யூவில காத்துண்டிருக்கான். என்னைக் கேட்டா, நீ சீதாவையே...."

"அம்மா, மறுபடி ஆரம்பிக்காதேம்மா! எனக்குப் பணம் வேணும். மதுவோட ரூமுக்குப் போய் கம்பைன் ஸ்டடி பண்ணணும்" என்றாள்.

"போயிட்டு வாம்மா அனி! எனக்கு உம்மேல சந்தேகமே இல்லை. நான் பெத்து வளர்த்த செல்வம் நீ. குடும்பம் தலை குனியும்படியா எந்தக் காரியமும் செய்ய மாட்டே. எனக்குத் தெரியும். செய்ய மாட்டேதானே?"

"மாட்டேம்மா."

அம்மா பத்து ரூபாய்தான் கொடுத்தாள். மதுவிடம் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று அவசரத்தில் அனிதா புறப்பட்டு விட்டாள். உசேனியா ஸ்டோர்ஸைத் தாண்டும்போது அந்தக் கப்பல் கார் அவளைத் தாண்டி கொஞ்ச தூரம் போய் நின்றது. அதிலிருந்து சீருடை டிரைவர் இறங்கி வந்தான்.

"அம்மா, உங்களுக்காகத்தான் கார் கொண்டாந்திருக்கேன்..."

அனிதா விழித்தாள். "யாரு?"

"வைரவன் சார் அனுப்பிச்சாருங்க. இப்பத்தான் வெளிநாட்டிலிருந்து வந்தாரு..."

அனிதா சுற்றும் முற்றும் பார்த்தாள். காதரும் ஜமாலும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"உங்களைக் கட்டாயமா கூட்டிவரச் சொன்னாரு...."

"நான் மதுவோட ரூமுக்குப் போகணும்..."

"எங்கே போனாலும் அங்கே அழைச்சுட்டுப் போகச் சொன்னாரு. எப்ப ஃப்ரீயோ அப்ப கூட்டி வரச் சொன்னாரு. இன்னிக்கு முழுக்க உங்களுக்குத்தான் காரு..."

"நான் பஸ்ல போறேன்..."

"சரி, போங்க. பின்னாடியே வரேன். உங்களை அழைச்சுட்டு வரலைன்னா என் வேலை போயிடும்மா..."

"நீங்க திரும்பிப் போங்க. நான் போன் பண்றேன்னு சொல்லுங்க."

"இல்லீங்க... அவர் எனக்கு இந்த ட்யூட்டிதான் கொடுத்திருக்காரு. என்னம்மா தயக்கம்? கார்ல ஏர்றதில என்ன தயக்கம்?"

அனிதா பஸ்லில்தான் சென்றாள். திரும்பிப் பார்த்த போது அந்த கார், பஸ்ஸைத் தொடர்ந்து வருவதைக் கவனித்தாள். மதுவின் அறைக்குச் சென்று புரட்டி எழுப்பினாள்.

"ஹாய்!" என்றாள் மது.

தூக்கம் நிறைந்த கண்களுடன், "ராத்திரி பார்ட்டில மூணு ஜின் அடிச்சுட்டேனா... கலக்கிருச்சு! என்ன விஷயம்" என்றாள்.

"என் கல்யாணம் நின்னு போச்சு மது..."

"அப்படியா... ஏன், அப்பாகிட்ட தைரியமா சொல்லிட்டியா?"

"இல்லை. அவங்களே வேண்டாம்னுட்டாங்க..."

"முதல்ல அவங்கதான் ரொம்ப உற்சாகமா இருந்தாங்கன்னு சொன்னே..."

"எனக்கு என்னவோ சந்தோஷம்தான்" என்றாள் அனிதா.

மது ஜன்னலைத் திறந்து "என்னது... கார் நிக்குது! எனக்கு வைரவன் அனுப்பிச்சிருக்காரு... ஒரு நிமிஷம்" என்றாள்.

"மது-அந்தக் கார் வந்து...."

"ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம்" என்று அனிதா முன்னாலேயே தன் சட்டையை முழுவதும் கழற்றி வேறு மாட்டிக்கொண்டு மது கீழே ஓடினாள்.

சற்று நேரத்தில் திரும்ப வந்து "கார் உனக்காக வந்திருக்கு" என்றாள் ஏமாற்றத்துடன்.

"அதைச் சொல்ல வர்றதுக்குள்ள நீ..."

"அந்தாளு நிச்சயம் உன் மேலதான் பைத்தியமா இருக்காருன்னு நிரூபணம் ஆயிருச்சு. இட்டாலின்னா சொன்னாங்க?"

"திரும்பி வந்துட்டாரு."

"உன்னைப் பார்க்கத்தான். நீ... நீ எப்படி இதை உங்க அப்பா அம்மாகிட்ட சொல்லப் போறே?"

"என்ன சொல்லணும்?"

"வைரவன்னு ஒருத்தர் எனக்காக கன்னா பின்னான்னு கார் அனுப்பிச்சு, காத்து, என்னைக் காதல் பண்ணிக்கிட்டு இருக்காரு'ன்னு..."

"மது... இப்பதான் சுரேஷ்கிட்டேருந்து தப்பிச்சிருக்கேன். இனிவைரவன் கிட்டேருந்து தப்பிச்சாகணும்!" "ஒண்ணு சொல்லட்டுமா? நான்கூட வரேன். அவரைப் போய்ப் பார்த்துட்டு, 'என்னைத் தொந்தரவு செய்யாதீங்க. ரெண்டு பேரும் வேற வேற ஜாதி... இதுக்கு பேரண்ட்ஸ் ஒருக்காலும் ஒப்புக்க மாட்டாங்க'ன்னு இப்பவே சொல்லிரலாம். என்ன?"

"வேண்டாம்" என்றாள் அனிதா.

மது, அனிதாவை நேராகத் துளைப்பது போலப் பார்த்து, "இப்ப புரியுது" என்றாள்.

"என்ன?"

"உனக்கு உள்ளால வைரவன் மேல இஷ்டம்தான்."

"சேச்சே...! அந்தாள நிமிர்ந்துகூடப் பார்த்ததில்லை இதுவரைக்கும்..."

"நான் நிமிர்ந்தே பார்த்துட்டேன். சோக்காவே இருக்காரு. அதும்... அவர் போற வெளிநாட்டுக் காரும், போட்டிருக்கிற வெளிநாட்டுக் கண்ணாடியும் தனி அழகு சேக்குது. அவர் மூச்சுலகூட தங்க பொகை தெரியுது."

அனிதா சிரித்தாள். "எப்படிப் பார்த்தாலும் பணம் தான்டி உனக்கு. உங்க அப்பா கிட்ட இருக்கற பணம் பத்தாதா?"

"வைரவன் பணம்கிறது வேறவிதமான பணம். மெகா மெகா மெகான்னு சொல்லுவாங்க. இந்தியாவிலேயே இந்த மாதிரி பணம் படைச்சவங்க பத்துப் பேர்தான் இருப்பாங்க. அந்த லெவல்."



நவீன எழுத்துலக வேந்தன்
**சுஜாதா**

"அப்படிப்பட்ட ஆளு எதுக்காக என் பின்னாடி அலையறாரு?"

"அதான் எனக்கும் ஆச்சரியமாக இருக்குது. பம்பாய்ல யாரையோ ஃபிலிம் ஸ்டாரை வைரவன் கட்டிக்கப் போறதா ஒரு ஆங்கிலப் பத்திரிகைல வதந்தி....."

"எல்லாமே குழப்பமா இருக்கு."

"நேர சந்திச்சு விஷயத்தை உடைச்சுப் போடு. ஏன் தயக்கம்?"

"பார்க்கலாம்... எனக்கு அவரைச் சந்திக்க பயமா இருக்கு..."

"என்ன பயம்?"

"என்னைச் சம்மதிக்க வச்சிடுவாரோன்னு."

"அப்ப நான் போய் சொல்லிரவா?"


"வேண்டாம்... சந்தர்ப்பம் கிடைக்கிறபோது நானே சொல்லிடறேன். தைரியத்தை வரவழைக்க ஒரு வாரமாவது வேணும்."

"ஒங்கிட்ட என்னதான் இருக்குதுன்னு அந்தாளு இப்படி மாயறாறு? காமி" என்று அனிதாவின் முகத்தைத் திருப்பினாள் மது.

"சுரேஷை இவர்தான் மனம் மாற வெச்சிருப்பாருன்னு தோண்றது. என்கிட்ட அட்ரஸ் கேட்டார் ஒரு தடவை" என்றாள் அனிதா.

"அதை எங்கிட்ட சொல்லவே இல்லையே. அப்ப பேச்சுவார்த்தை நடந்துக்கிட்டுத்தான் இருக்கு?"

[அனிதா வருவாள்...]



## பாப்பா முரசு சிறுகதை

# அதிர்ச்சி வைத்தியம்

சம்பூர் என்ற கிராமத்தில் சர்மா என்ற மருத்துவர் வசித்து வந்தார். இவர் மிகச் சிறந்த மருத்துவர். நோயைச் சரியாக கண்டு பிடித்து உடனடியாக அதற்கு மருந்து கொடுத்து குணமாக்கி விடுவார்.



எனவே, இவரைத் தேடி பல ஊர்களில் இருந்தும் மக்கள் வந்து கொண்டே இருப்பர்.

சர்மாவும் பலவிதமான பச்சிலை களை அரைத்து விசேஷித்த மருந்து களை தயாரித்து மக்களின் பிணியை உடனுக்குடன் போக்கி வந்தார். எனவே மக்கள் சர்மாவை தெய்வ மாகவே மதித்தனர்.

அரசன் எவ்வளவோ வசதிகள் செய்து தருகிறேன் என்று சொல்லியும் கேளாமல், தன்னுடைய சின்ன குடிசையிலேயே ஊருக்கு ஒதுக்குப்புற மான இடத்தில் வாழ்ந்து வந்தார்.

மக்களிடம் இவ்வளவு பணம் என்று கேட்க மாட்டார். அவர்கள் கொடுப்பதை மட்டும் வாங்கிக் கொள் வார். சர்மாவிடம் சின்னு என்பவன் உதவியாளனாக இருந்தான். இவன் ரொம்ப துடுக்குத்தனம் நிறைந்தவன்! குடுகுடு என்று காரியங்களைச் செய்வான்.

சர்மாவிடம் வைத்தியம் கற்றுக் கொண்டு தானும் அவரைப் போல் புகழ்பெற வேண்டும் என்பது சின்னுவின் ஆசை.

ஒருநாள் பச்சிலை ஒன்றை இடித்துக் கொண்டிருந்தார் சர்மா, 'அவருக்கு தேவையான பச்சிலைகளை எடுத்துக் கொடுத்து உதவி செய்து கொண்டிருந் தான் சின்னு.

“சின்னு! சில நோய்களுக்கு நம்மால் இன்னும் மருந்து கண்டுபிடிக்க முடிய வில்லை. இப்போ தொடர்ந்து விக்கல் வருகிறதென்று வைத்துக்கொள். அதுக்கு எந்த மருந்தும் கிடையாது. ஓங்கி ஒரு அடி கன்னத்தில் அடித்தால் போதும். அந்த அதிர்ச்சியிலேயே விக்கல் நின்றுவிடும். அதைத்தவிர வேறு வழி யில்லை.” என்றார்

எல்லாவற்றையும் அக்கரையுடன் கேட்டுக் கொண்டிருந்தான் சின்னு.

இரண்டு நாட்களுக்குப் பின்-

மாட்டு வண்டியில் இரண்டு மனிதர் கள் வந்து கொண்டிருந்தனர். ஒருவன் அவசரமாக வண்டியை விட்டு இறங்கி, மருத்துவரிடம் ஓடி வந்தான்.

“விக்கல்... தொடர்ந்து விக்கலெடுக் குது. ஏதாவது மருந்து இருக்கா வைத்தியரே?” என்றான் அவசரமாக.


சர்மா பச்சிலைகளை அரைத்துக் கொண்டிருந்த தால், சின்னு எழுந்து வந்தான். தனக்குதான் விக்கலைப் போக்க வழி தெரியுமே. எனவே, தானே அதற்கு.. வைத்தியம் பார்க்க முடிவு செய்தான்.

வந்த மனிதரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். “இப்போது விக்கல் நின்று விடும். இதுதான் விக்கலுக்கான மருந்து. வேறு மருந்தே இல்லை.” என்றான் பெருமையாக.

'பொம்' என்று வீங்கிய கன்னத்தை துடைத்துக் கொண்டே “எ... எனக்கு விக்கல் இல்லை; என் அண்ணனுக்கு தான். அவர் வண்டிக்குள் உட்கார்ந்திருக் கிறார்,” என்றார் பரிதாபமாக.

“சின்னு! அவசரப்பட்டு வைத்தியம் பார்க்கக்கூடாது; அது ஆபத்தில் முடிந்து விடும்,” என்றார் சர்மா.

திருதிரு என்று விழித்தான் சின்னு.



எண்களை இணைத்துப் படத்தை இரசியுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **13.10.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **415**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 413

பரிசுக்குரியவர்:
அசானா ஹில்மா அம்சீக்,
புனித தோமையார் பெண்கள் பாடசாலை, மாத்தளை.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ச.சாக்ஷிஹன்,<br>பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழு.-04. | இராசரத்தினம் சாருஜன்,<br>தமிழ் மத்திய மகா வித்தியாலயம்,வவுனியா. |
| ஜே. சஞ்சு,<br>ஹைலெவல் ஆங்கில பாடசாலை, ஹட்டன். | எம். ஜெயகாந்தி,<br>கிரிமெட்டிய தமிழ் மகா வித், மெனிக்திவெல. |
| வ. அக்ரம்,<br>ஸாஹிரா முஸ்லிம் வித்தியாலயம், குருநாகல். | எம். ஐசாக் லோகராஜ்,<br>எம். எம். பாடசாலை, திருக்கோயில். |
| இ.ராஜேஸ்வரி,<br>சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி, மன்னார். | சி. அருண்ராஜ்,<br>விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. |
| செல்வி எ.ஃப் ஃபஸ்லா முபாரக்,<br>எலெக்ஸோ சர்வதேச கல்லூரி, கொழு.-10. | ஆர். செராமி,<br>நல்லாயன் அரசினர் த.மகளிர் பா., கொட்டாஞ்சேனை. |

## அவுஸ்திரேலியா தகவல்கள்

- ஒரு கண்டம் என்ற சிறப்பைப் பெற்ற ஒரே நாடு அவுஸ்திரேலியா.
- உலகின் மிகச் சிறிய கண்டம் அவுஸ்திரேலியா.
- உலகின் 30 சதவீத கம்பளித் தேவை யைப் பூர்த்தி செய்யும் நாடு இது.
- மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிகளை அதிகளவு ஏற்றுமதி செய்யும் நாடு இது.
- இங்கு சுமார் 70 சதவீதமானோர் சொந்த வீடு வைத்திருக்கின்றனர்.
- அதிக வருமானம், 100 சதவீத கல்வி யறிவு, நீண்ட ஆயுட்காலம் கொண்ட நாடு இது.
- இங்கு வாக்குரிமை கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- ஆங்கிலம் பேசும் நாடுகளில் அதிகம் மது அருந்துவோர் இங்குதான் உள்ள னர்.

## உயர்ந்த நகரம்

உலகிலேயே மிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள நகரம் திபெத்தில் உள்ள வென் சுவான் என்ற நகரமாகும். 1955ம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த நகரம் கடல் மட்டத்தில் இருந்து 16 ஆயிரத்து 732 அடி உயரத்தில் உள்ளது.

## தண்டனை



இங்கிலாந்தில் 1824ம் ஆண்டு வாக்கில் இருந்த சட்டம் இது. சோதிடர்கள் சொன்னது பலிக்கவில்லை என்றால் அவர்களைக் கைது செய்து சிறையில் தள்ளலாம் என்பது தான் அந்தச் சட்டம். ஆனாலும் இது அங்கு அமுல் படுத்தப்படவில்லை.


ரஷ்யாவில் இப்போதும் உள்ள சட்டம் இது. வீதிகளில் கரும்புகையை அதிகம் கக்கிக் கொண்டே எந்த வாகன மாவது சென்றால் அதன் உரிமை யாளர் குற்றவாளியாகக் கருதப்படுவார். அதற்குத் தண்டனையும் உண்டு. ரஷ்யாவில் பல நாடுகள் இணைந்திருந்த போது இந்தச் சட்டம் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது.





அமெரிக்காவில் மதுவிலக்கு கடுமை யாக அமுலில் இருந்த கால கட்டத்தில் சட்டம் மிகக் கடுமையாக இருந்தது. மது அருந்துபவர்களுக்கு அபராதத்தோடு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. மிச்சிக்கனைச் சேர்ந்த பிரட்பாம் என்பவர் ஒரு முறை 100 மில்லி லிட்டர் ஜின் என்ற மதுபானத்தைக் குடித்து விட்டார். இதற்காக அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

## பறக்கும் படகு



காற்று நிரப்பப்பட்ட பலூன் போன்ற ஒன்றின் மேல் இருக்கும் மிதவைப் படகு தான் பறக்கும் படகு என அழைக்கப்படு கிறது. இதற்கு 'ஹோவர் கிராஃப்ட்' என்ற பெயர்.


ஒஸ்ரியாவைச் சேர்ந்த டகோபேர்ட் முல்லர் என்ற பொறியியலாளர் இந்தப் படகை 1900ம் ஆண்டு முதலில் கட்டி னார். எனினும் 1959ல் ஆங்கிலேய விஞ்ஞானியான கிறிஸ்டோபர் கொக்ரெல் என்பவர் மிதவைப்படகு தொழில் நுட் பத்தில் புதிய கண்டுபிடிப்பை மேற் கொண்டார்.

அழுத்தப்பட்ட காற்றில் வைக்கப்படும் படகு ஒன்றை அவர் தயாரித்தார். இந்தப் படகில் பெரிய மின்விசிறிகள் காற்றை உறிஞ்சி படகின் கீழ் செலுத்தும். முன்பு தயாரிக்கப்பட்ட படகுகளில் காற்று வெளியேறும் நிலையில் வடிவமைக்கப்பட்டி ருந்தது. ஆனால் இந்தப் படகில் தொடர்ந்து காற்று உள்வாங்கப்படும்.

அதன்பின் 10 வருடங்களில் பல நாடுகள் இராணுவம் மற்றும் உள் நாட்டுப் பயணத்திற்கு இந்த வகைப் படகுகளைப் பயன்படுத்த தொடங்கியது. இப்படகுகள் தண்ணீரில் மட்டுமல்ல தரையிலும் செல்லக்கூடியது. ■

# காலத்தின் தண்டனை

கிணற்றடிக்குப் பக்கத்தில் வேப்ப மரத்தின் கிளையிலிருந்த காகம் இடைவிடாமல் கத்திக் கொண்டிருந்தது. சட்டி பானைகளையெல்லாம் கழுவுவதற்காக எடுத்துக் கொண்டு போன தங்கம்மா "சூ...சூ... எதுக்கு இந்தச் சனியன் புடிச்ச காகம் பறந்து பறந்து கத்துது?" நச்சரித்தபடி கைகாட்டி விரட்டினாள். அது



கரைந்து கொண்டே தெற்குத்திசை நோக்கிப் பறந்துபோனது. காகம் கரைவதில் சகுனம் பார்க்கும் பழக்கம் இன்றுவரை மக்கள் மத்தியில் மாற்றமடையாமல் தான் இருந்து கொண்டு வருகின்றது.

'வெளிநாட்டில இருக்கிற மகன் கடந்த ஒரு மாசமாக கடிதம் கூடப் போடல்ல... மகனிடமிருந்து கடிதம் வரப்போகுதோ?!' என்பதைத்தான் தங்கம்மாவின் மனம் அடிக்கடி நினைத்துக் கொண்டது. "தங்கம்மா... அடியே தங்கம்மா" வீட்டிற்குள் இருந்து அவள் கணவன் சுந்தரலிங்கத்தின் குரல் கேட்டதும் வாளியிலிருந்த தண்ணீரை எடுத்துக் கையைக் கழுவிவிட்டு, சேலைத் தலைப்பால் துடைத்தபடி அவசரமாகவே நடந்தாள் தங்கம்மா. அவள் எதிர்ப்பட்டதும் "இந்த மூலைக்குள்ள வச்ச செருப்பு எங்க? இந்த வீட்டுல வச்ச இடத்துல ஒரு சாமான்கூட இருக்காது" அவரது வழமையான தோரணையே இப்படிக் கத்திப் பேசுவதுதான். இது இன்றைக்கு மட்டும் ஒன்றும் புதிதல்ல. இப்படியான அதட்டல்களுக்குப் பழக்கப்பட்டுவிட்ட தங்கம்மா "இங்க தான் இருக்கும் தேடிப் பாருங்கவன்... நானும் ஏதோவெண்டு போட்டிற்று ஓடி வாறன்... இஞ்சாருங்கோ... வெளியில போயிட்டு வரேக்குள்ள ஏதாச்சும் மரக்


அ. கோகுலதீபன் – கல்முனை


கறி வாங்கிவாங்கோ" அவரது தடதடப்பைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் நிதானமாகவே பதில் சொன்னாள்.

"சரி முதல்ல காசை எடுத்துத்தா... நான் கடைக்காரனுக்கும் பழைய காசு இரு நூறு ரூபா கொடுக்க வேணும். நாலு நாளாகக் கேட்டு ஒரே கரைச்சல் படுத்துறான்." சொல்லியபடி கண்ணாடியின் முன்நின்று தலையை சீவிக் கொண்டார். இடையிடையே காணப்பட்ட நரை முடி முதுமைப் பருவத்தை விளக்கிக் கொண்டிருந்தது. 'இந்த மனுசன் எப்பத்தான் திருந்தப் போகுதோ? சாராயம் குடிச்சே காச அழிச்சுப் போட்டிரும்' மனசுக்குள் நினைத்துக் கொண்டாலும் வெளியே சொல்லித்திட்ட முடியாது. எத்தனையோ தடவை அவளும் சொல்லிப் பார்த்திருக்கிறாள். ஆனாலும் பலன் பூச்சியம்தான்.

தங்கம்மா அறைக்குள் புகுந்து அலுமாரிக்குள் இருந்த பட்டுப் புடவையின் கீழ் வைத்திருந்த ஐநூறு ரூபாய் நோட்டொன்றை எடுத்து வந்து சுந்தரலிங்கத்தின் கையில் கொடுத்தாள். அவரது முகத்தில் இப்பொழுது புதுமலர்ச்சி தெரிந்தது. "மிச்சக் காசக் கொண்டு வாங்கோ.. பின்னேரம் சீட்டுக்காசு கொடுக்க வேணும்." கண்டிப்பாகவே சொல்லிக் கொண்டாள் தங்கம்மா. "சீ.. வெறுங் காலோட தான் கடைக்குப் போக வேண்டியிருக்கு... நிம்மதியா வெளியில போக முடியாது" புறுபுறுத்தபடி வெளியேறினார் மனுசன்.

கச்சேரியில் பியோனாக வேலை பார்த்த சுந்தரலிங்கம் மகன் வெளிநாடு போனதும் வேலையை விட்டுவிலகினார். மகன் அனுப்பும் பணத்தில் காலை ஆட்டிக் கொண்டே வீட்டிலிருந்து சாப்பிடலாமே என்பதே அவர் எண்ணம். பொழுது போகவில்லையென்றால் சீட்டாடுவது, குடித்துக் கொண்டு ஊர்வம்புகளைப் பேசுவது இப்படியாக அவர் நடவடிக்கைகள் மாறத்தொடங்கின. வீட்டில் காசு இல்லாவிட்டாலும் கடன் வாங்கியேனும் குடிக்கத் தவறமாட்டார்.

சவுதிக்கு வேலை செய்வதற்காக அவரது மகன் போய் இப்பொழுதுதான் ஆறு மாசமாயிருக்கிறது. அவனது சம்பளத்தில் செலவு போக மாசம் நான்கு அல்லது ஐந்தாயிரம் தான் அனுப்புவான். இந்த மாசம் அந்தக் காசையும் காணவில்லை. பொன்னம்பலத்தின் கடைக்குப் போன சுந்தரலிங்கம் அரைக்கிலோ கரட் கிழங்கையும், கால்கிலோ கறிக்கொச்சிக்காயையும் வாங்கிக் கொண்டார். பொன்னம்பலம் தனது கடன் காசையும் எடுத்துவிட்டு இருநூற்றி அறுபத்தொரு ரூபாவைக் கொடுத்தார். காசை வாங்கி சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டு மரக்கறியும் கையுமாக வீதிக்கு வந்த சுந்தரலிங்கத்திற்கு முன்னால் சைக்கிள் ஒன்று நின்றது. நிமிர்ந்து பார்த்தார், சிவலிங்கம் நின்று கொண்டிருந்தான்.

"என்னடா சிவலிங்கம் தலைதெறிக்க ஓடி வர்றா... கடையில ஏதாச்சும் சாமான் வாங்க வேணுமா?" அவனுக்கு இன்னும் மூச்சு வாங்கியது."அண்ணே என்ர தங்கச்சிக்கு அடுத்த கிழமை ஒப்பரேசன் பண்ண வேணுமெண்டு டாக்டர் சொல்லிட்டார்... அதால ரெண்டு நாளைக்குள்ள எட்டாயிரத்தையும் தரவேணும்... அதைச் சொல்லத்தான் உங்களத் தேடித்திரிஞ்சனான்" கறாராகச் சொல்லிவிட்டு சைக்கிளில் ஏறி நகர்ந்து போனான். நின்றால் இவர் ஏதாவது காரணம் சொல்லி தட்டிக்கழித்து விடுவார் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். சிவலிங்கம் ஊரில் இருக்கும் 'பார்' ஒன்றுக்குச் சொந்தக்காரன் அவனிட்ட சாராயம் குடிக்கப்போய் பட்ட கடன்தான் அந்த எட்டாயிரம்.

'ரெண்டு மூன்று நாளைக்குள்ள மகன் அனுப்புவான். அதை எடுத்து அரைவாசிக் காசையென்றாலும் குடுக்கலாம்' நினைத்துக் கொண்டு விறுவிறுவென்று வீட்டிற்குள் புகுந்ததும் அப்படியே ஆடிப் போய் நின்றார் சுந்தரலிங்கம். கதிரையில் சிரித்த முகத்துடன் வெளிநாடு போன மகன் குந்திக் கொண்டிருந்தான். "என்னடா சொல்லாம வந்திட்டா?" அவர் கேட்டுக் கொண்டே மகனையும், தங்கம்மாவையும் மாறி மாறிப் பார்த்தார்.

"அப்பா எங்கட கம்பனி தொடர்ந்து நஸ்டத்துல போனதால கம்பனிய மூடிட்டாங்க. அதால உடனே இங்க வர வேண்டியதாப் போச்சு. பிளைட் காசைத் தவிர கையில எதுவும் இல்லாமல் தான் வெளிக்கிட்டனான்... பேசாம இங்கேயே ஏதாவது தொழில் செய்திருக்கலாம்" அவன் அலுத்துக் கொண்டான்.

'கடவுளே நான் பட்ட கடன் காசு எட்டாயிரத்தை எப்படி அடைக்கப் போறன்? அவர் நாவெல்லாம் வறண்டு போக, சிவலிங்கத்தின் உருவம் தான் சுந்தரலிங்கத்தின் கண்ணுக்குள் வந்து போனது. ■

# எப்போதோ முடிந்த விசயம்




வி.என். சந்திரகாந்தி-திருமலை


முறிந்து விட்ட எனது வலதுகை எலும்புக்கு தென்பாக தோளில் மாட்டியிருந்த முடிச்சை சரிப்படுத்திக் கொள்கிறேன்...

எனது சுபாவம் மற்றவர்களுக்கு உதவிகள் புரிவது. அனைவரும் என்னுடன் அன்பாக நடக்க வேண்டும் என்பதற்காகவே நான் சிரமங்களைப் பொருட்படுத்தாது வலிந்து சென்று மற்றவர்களுக்கு உதவிகள் செய்வேன்.

அன்றொரு நாள் வெளிநாட்டிலிருந்து எனது நண்பன் ஒருவனின் தொலைபேசி அழைப்பு வந்தது.

"மச்சான்... என்னுடைய தங்கை ஒருத்தி நீ இப்போ தொழில் பார்க்கும் நகருக்கு இடமாற்றத்தில் வருகின்றாள். உன்னால் இயன்ற உதவிகளை எனது சார்பில் செய்வாயா?"

அந்த அறிமுகத்தில் வந்து சேர்ந்தவள்தான் லாவண்யா. அவளுடைய அழகும் இளமையும் கதைகள் பேசும் நயனங்களும் என்னை சிறிது தடுமாற வைத்தாலும் நண்பனின் தங்கை என்ற முறையில் உரிய மதிப்பினை கொடுத்ததுடன் உதவிகள் பலவற்றையும் செய்தேன். அவளுக்கு இது அன்னிய பிரதேசமாக இருந்தாலும் அவள் தொழில் பார்க்கும் இடத்திலும் பழகும் இடங்களிலும் என்னை தனது அண்ணன் என அறிமுகம் செய்து கொண்டிருந்தமை அவளுக்கு மிகுந்த பாதுகாப்பாக அமைந்தது.

அநாவசியமாக என்னிடம் உதவிகள் கேட்டு வராவிட்டாலும் அவசியமான சந்தர்ப்பங்களில் எனது ஆலோசனையை பெற்றே செயற்பட்டாள்.

அவள் ஆடைகள் அணியும் நேர்த்தியும் இனிதாக பழகும் முறையும் எவரையுமே கவரச் செய்தன.

என்னதான் அவள் என்னுடன் சகோதர முறையில் பழகினாலும் எனது மனத்தில் வெற்றிடமாக இருந்த 'இல்லாள்' என்ற ஸ்தானத்தை அவள் பற்றிய நினைவுகள் மெல்ல மெல்ல பட்டு இழைகளால் பின்னத் தொடங்கியிருந்தன.

காதலை முகத்துக்கு முகம் நேராக அடித்துக் கூறும் மனத் தைரியம் என்னிடம் இல்லை. உண்மையான காதல் ஒரு விழி வீச்சில்... மெல்லிய புன் முறுவலில் வெளிப்பட வேண்டும். காதல் என்பது மலர். அது தானாக மலர்ந்து மணம் வீச வேண்டும்.

லாவண்யா குறித்த நம்பிக்கைகள் எனது மனத்தில் மலையாக உயர்ந்து சிகரத்தை எட்டிய நிலையில் லாவண்யா கூறினாள்...

"அண்ணா... என்னைப் பற்றிய உண்மை ஒன்றினை நான் உங்களுக்கு கூறவேண்டும். நான் ஏற்கனவே விவாகமாகியவள்."

இதைக் கேட்க நேர்ந்ததும் எனது ஆசைகளும் கனவுகளும் ஒரு நிமிட நேரத்தில் தகர்ந்து அழிந்தன...

தனது கதையை கண்ணீருக்கு மத்தியில் அவளே கூறினாள்...

"அண்ணா... மூன்று வருடங்களுக்கு முன்னர் எனது விவாகம் தலைநகரில் நடந்தது. ஆனால் மூன்று வாரங்கள் கூட நான் அவருடன் வாழக் கொடுத்து வைக்கவில்லை. என்னில் ஆசை வைத்து என்னில் திருப்தியடைவார் என்ற எனது எதிர்பார்ப்புக்கு மாறாக குடியிடமும் கூத்தியிடமும் அவர் தஞ்சம் புகுந்திருந்தார். வெளிநாட்டு வாழ்க்கை அளித்த சுதந்திரமும் அளவுக்கு மிஞ்சிய பணமும் அவரை அப்படி நடக்க வைத்தன. நான் உள்ளூரில் கஷ்டப்பட்டு சம்பாதித்து சேமித்து வைத்திருந்த பணம் யாவற்றையும் அவரது 'டாம்பீகத்துக்கு' ஈடுகொடுப்பதற்காக தண்ணீராக இறைத்தேன். அவருடன் வெளிநாடு போகப் போகிறேன் என்ற பெருமிதத்தில் தொழிலுக்கும் சொல்லாமல் விட்டுவிட்டேன்...

முடிவு... என்னை தனிமையில் ஏழ்மையில் தவிக்கவிட்டுவிட்டு அவர் தான் தொழில் பார்க்கும் அந்நிய தேசத்திற்கு சென்றுவிட்டார். அவருக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது!

நான் சில வருடங்கள் 'அஞ்ஞான வாசம்' வாழ்ந்தேன். வெறுமையும் விரக்தியும் ஏமாற்றமும் என்னைப் பாடாய் வருத்தியது. மீண்டும் என்னைத் தேற்றிக் கொண்டு 'மீள் நியமனத்திற்கு' விண்ணப்பித்தேன். இடம் பெயர்ந்தோருக்கான சலுகை அடிப்படையில் நிலுவைச் சம்பளத்துடன் எனக்கு தொழில் கிடைத்தது. எனது தாய், சகோதரங்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரிடமிருந்தும் ஒதுங்கியும் மறைந்தும் வாழவேண்டும் என்ற மன வைராக்கியத்துடன் ஒதுக்குப் புறமான இந்த நகருக்கு இடமாற்றம் பெற்று வந்தேன்.

'கணவனை விட்டு விலகி ஒரு பெண் தனிமையில் வாழ்ந்தால் பிற ஆடவர்கள் கண்களுக்கு இளக்காரமாக போய்விடுவாள்' என்ற உண்மையை கருத்தில் நிறுத்தி கன்னிப் பெண்ணாகவே மற்றவர்களுக்கு என்னை அறிமுகம் செய்தேன். என்னை மன்னியுங்கள் அண்ணா" எனக் கூறி விம்மி விம்மி அழத் தொடங்கினாள். லாவண்யாவின் மனக்குமுறல் எனது நெஞ்சைப் பிழிந்தது.

ஆனால்... லாவண்யா பற்றிய உண்மைகள் மறைக்கப்பட்டமை மறுபக்கத்தில் சில பிரச்சனைகளை உண்டுபண்ணியது...

பல இளைஞர்கள் அவளை பின் தொடர்ந்தனர். அவளது அழகை இரசிப்பதற்காகவும் அவளுடன் இரண்டு வார்த்தைகள் பேசி விடவேண்டும் என்பதற்காகவும் சிலர் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து ஏங்கினர். இப்படியே தொடர்ந்தால் லாவண்யாவே மனம் மாறிவிடக்கூடும் என்றுகூட நான் பயந்தேன். ஆனால் அவளது கற்பின் திண்மை மிகவும் வலுவுடையதாகவே இருந்தது. இதனால் பலர் நாளாவட்டத்தில் விலகிப் போயினர்...

ஆனால்.... கணேஷ் என்ற இளைஞன் மட்டும் லாவண்யாவை பின் தொடர்ந்து வதைக்கத் தொடங்கினான். அவள் அணியும் தொப்பியை பாதையில் வைத்துப் பறித்துச் சென்றான். அவளது இரட்டைப் பின்னலைப் பற்றி இழுத்தான்.

முறைப்பாடு எனக்கு வந்தது. கணேஷ் நல்ல பையன். எனது புத்திமதிகளை பொறுமையுடன் கேட்டான். ஆனால் தான் அவளை விவாகம் செய்யாவிட்டால் தனக்கு பைத்தியமே பிடித்துவிடும் என்று உறுதியாக கூறினான். லாவண்யாவுக்கு வெளிநாட்டில் முறைப் பையன் இருப்பதாக கூறினேன். அவன் எதையும் ஏற்கவில்லை. ஒரு பெண்மீது மனதைப் பறி கொடுத்துவிட்ட ஒரு ஆடவனின் பரிதாப நிலையை நேரில் கண்டேன். லாவண்யா மீது அவன் கொண்ட காதல் அவனை எந்த எல்லைக்கும் கொண்டு போய்விடலாம் என்பதை நான் சிந்தித்திருந்த அதே சமயம்...

அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது....

லாவண்யாவின் கணவன் நல்லபடி திருந்தி அவளைத் தேடி வந்தான்!

லாவண்யா மட்டுமன்றி நானும் மலைத்து நின்றேன். லாவண்யா இந்த நகருக்கு வந்து ஒரு வருட காலத்தில் அவளது நட்பு அலைகள் விரிந்து பரந்திருந்தது. பெரியதொரு உறவு வட்டமே அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அனைவருமே அவளை கன்னி என்று நம்பியிருந்தனர். இப்போது உண்மையைக் கூறப்போனால், 'லாவண்யா பெரும் பொய்காரி' என்ற பெயரை சம்பாதிக்கப்போவது மட்டுமல்ல.... ஒரு விவாகமாகிய பெண் தாலி அணியாமலும் நெற்றியில் குங்குமம் தரிக்காமலும் கலாச்சாரத்தை மீறிய பழிக்கும் உட்பட வேண்டி ஏற்படும்.

லாவண்யாவின் அழகு, இளமை, மன உறுதி ஆகியவற்றிற்கு அப்பால் அவளது ஆற்றலை நான் காணக்கூடிய சந்தர்ப்பம் உருவானது...

அவளது கணவன் அவளை இங்கு சந்தித்து தலைநகர் மீண்டமையை தன்னை பெண்பார்க்க ஒருவர் வந்ததாக கூறினாள். ஓரிரு தடவைகள் தானும் தலைநகர் சென்று திரும்பினாள். பேச்சுவார்த்தை.... விவாகப் பதிவு... கலியாணம் என்று ஒரு கட்பனை விவாகத்தை மற்றவர்கள் நம்பும் படி கதையளந்தாள்! 'ரிசெப்சன்' மட்டும் பெரும் பணச் செலவில் இங்கு நடாத்தப் பட்டது!

நாம் கற்பனை செய்து பார்க்க முடியாததும் நம்ப முடியாததுமான பல சம்பவங்கள் எம் கண்முன் நடந்து கொண்டே தான் இருக்கின்றது. இவற்றை ஒரு கதாசிரியர் தனது கதைகளில் உட்புகுத்தினால் நாம் அவற்றை யதார்த்தத்திற்கு புறம்பானதெனவே கணிப்போம். ஆனால் அப்படியான சம்பவங்களோ உண்மையில் உலகில் ஏராளம்... ஏராளம்!

லாவண்யா என்ற தேன்சிட்டு சிறகடித்து பறந்துபோய் விட்டது.

கணேஷ் பற்றி நான் மறந்துவிட்டிருந்தேன். ஆனால் ஒரு மாதம் முன்னராக கப்பலில் ஊர் சென்றிருந்த அவன் பிரயாணத்தில் பல தடங்கல்களைக் கடந்து காலதாமதமாக வந்து சேர்ந்தமையை பின்புதான் நான் அறிந்தேன்.

கணேஷிடம் நான் முன்பு குறிப்பிட்ட, 'லாவண்யாவினுடைய வெளிநாட்டு உறவுக்கார பையனை' அவன் இல்லாத சந்தர்ப்பத்தில் நான் (என்னை லாவண்யாவின் அண்ணன் என அவன் திட்டவட்டமாக நம்பினான்) இந் நாட்டுக்கு வரவழைத்து லாவண்யாவுக்கு விவாகம் செய்து வைத்து அனுப்பிவிட்டதாக, அவன் ஆத்திரம் கொண்டிருக்க வேண்டும்...

ஒரு நாள் அதிகாலை... எமது வாயிற் கதவைக்கூட நாம் திறக்கவில்லை... யாரோ மதில் ஏறி குதிப்பதை கிரகிப்பதற்கு முன்பாகவே எனது தலையை குறிவைத்து வந்த பாரிய அடியை எனது கைகள் தடுத்தன. அதனைத் தொடர்ந்து சரமாரியான அடிகள். வலது கையில் ஏற்பட்ட எலும்பு முறி காரணமாக நான் இப்போ பல நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றேன்...

நானும் லாவண்யாவை மனதார நேசித்து விரும்பியவன்தான். ஆனால் அவளது விவாகம் எப்போதோ நடந்து விட்டமையை அறிந்து கொண்டதனால் அமைதியடைந்துவிட்டேன்.

ஆனால் அந்த உண்மையை அறிந்து கொள்ளாத கணேஷ் அவளை நினைத்து... மதுவுக்கு அடிமையாகி... தாடியுடன் தன்னை மறந்த நிலையில் அலைந்து திரிவதனை அறிந்து கவலை கொண்டேன்....

உலகத்தில் நடக்கும் சம்பவங்களெல்லாமே 'எப்போதோ நடந்து முடிந்த விசயங்கள்தான் போலும்!' ■



# அசத்தல் தொடர் 05

# ஓடாதே! ஒளியாதே!

## க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

"கே. முரளி யாரு...?"
"மை செல்ஃப்..."

"உங்களை உள்ளே கூப்பிடறாங்க."

ஃபைலைப் பிடித்திருந்த உள்ளங்கை வியர்த்திருக்க கதவைத் தள்ளினான் முரளி. பெரிய மேஜைக்குப் பின்னே லீமா உட்கார்ந்து இருந்தாள். அவளுக்குப் பக்கவாட்டில் புவன்யா.

"குட்மார்னிங் மேடம்."


"குட்மார்னிங். உட்கார்..."

'தாங்கஸ்' சொல்லிக் கொண்டே போல்டிங் சேரின் நுனியில் உட்கார்ந்தான். அவனுடைய சர்டிபி கேட் ஃபைலை வாங்கிப் புரட்டிக் கொண்டே லீமா கேட்டாள்.

"பி.ஏ.எக்னாமிக்ஸா?"

"எஸ் மேடம்."

"பி.ஏ.எக்னாமிக்ஸ் படிச்சிருக்கற நீ ஒரு மெடிகல் கம்பெனியில லேப் அசிஸ்



டென்ட்டா வேலை பார்க்க எந்த அடிப்படையில் விண்ணப்பிச்சே?"

"நீங்க குடுத்த விளம்பரத்தில் சயன்ஸ் க்ராஜுவேட்தான் வேணும்ன்னு கேக்கலை. ஏதோ ஒருபட்டம்ன்னு கேட்டு இருந்தீங்க. அதனாலதான் அப்ளை பண்ணினேன். என்னோட அப்ளிகேஷனை கன்சிடர் பண்ணி நீங்களும் இன்டர்வியூ கார்டு அனுப்பிச்சீங்க."

லீமா புவன்யாவிடம் திரும்பினாள்.

"ஸைட் டெஸ்ட் பார்த்துடு புவன்யா."

"எஸ் மேடம்."

புவன்யா தன் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் ஸ்டிக்கால் சுவற்றில் தொங்கும் சார்ட்டைத் தொட்டுக் காட்டினாள்.

"மிஸ்டர் முரளி... நீங்க உட்கார்ந் திருக்கும் இடத்திலிருந்து இந்த சார்ட்டிலுள்ள எழுத்துக்களை படிக்க முடியுமா?"

பெரிய சைஸிலிருந்து பொடி சைஸ் வரை பலதரப்பட்ட எழுத்து வடிவங்கள் அந்த சார்ட்டில் தெரிந்தது. உற்றுப் பார்த்து படித்துக் காட்டினான்.

புவன்யாவின் பிரம்பு அடுத்த சார்ட்டில் போய் நின்றது. அதில் ஏராளமாய் பல வண்ணப் புள்ளிகள். அந்தப் புள்ளிகளுக்கு மத்தியில் சில உருவங்களும், எண்களும் சந்தடியில்லாமல் மறைந்து கிடந்தன.

அந்த உருவங்கள், எண்களை மிகச் சரியாகக் கண்டுபிடித்து வாசித்தான் முரளி. லீமாவின் முகப்பரப்பில் மகிழ்ச்சி அலைகள் படிப்படியாய் உருண்டன. ஏறக்குறைய எல்லா டெஸ்ட்களுமே முடிந்த நிலையில் கடைசியாய் அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

"உங்க குடும்பத்தில் உங்களைத் தவிர எத்தனை பேர்?"

"நான் ஒண்டிக்கட்டைதான் மேடம்."

"சிஸ்டர்ஸ், பிரதர்ஸ்... யாருமில்லையா?"

"யாருமில்லை மேடம்..." ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி அந்தப் பொய்யைக் கூசாமல் சொன்னான் முரளி.

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

காயத்ரி ஸ்டவ்வை இறக்கி வைத்து விட்டு முன்னால் வந்தாள். தாழை நீக்கி-கதவைத் திறந்து வாசலில் பார்வையைப் போட்டாள்.

அந்த இளைஞன் உதடுகளில் புன்னகையைக் காட்டியபடி நின்றிருந்தான். சற்றே கறுத்த நிறம். தொளதொளத்த நூறு சதவிதம் பருத்திச் சட்டை அணிந்திருந்தான்.

"யாரு வேணும்?" காயத்ரி கேட்டாள்.

"முரளி இல்லிங்களா?"

"நீங்க...?"

"காமாட்சி பேக்கேஜிங்ல முரளியோட வேலை பார்க்கறேன். என் பேர் நிவாஸ்."

"உள்ளே வாங்க. உங்களைப் பத்தி அண்ணன் சொல்லியிருக்கார்."

நிவாஸ் வீட்டுக்குள் பிரவேசித்தான். சுவர் மூலையில் சாய்த்திருந்த மடக்கு நாற்காலியை விரித்துப் போட்டாள் காயத்ரி.

"உக்காருங்க."

நிவாஸ் உட்கார்ந்து கொண்டே கேட்டான்.

"முரளி வெளியே போயிருக்கானா?"

"ஒரு இன்டர்வியூக்காக மெட்ராஸ் போனார். இன்னும் வரலை."

ஆச்சர்யத்தோடு கேட்டான். "இன்டர்வியூவா?"

"ஆமா...!"

"எப்ப போனான்?"

"போய் நாலு நாளாச்சு. இன்டர்வியூ முடிஞ்சதும் கிளம்பி அடுத்த நாளே வந்துடறதா சொல்லிட்டுப் போனார். ஆனா, இன்னும் வரலை" சொன்ன காயத்ரியின் குரலில் கவலை கணிசமாய்க் கலந்திருந்தது.

"போன இடத்தில் வேலைக்கு சேர்ந்து இருப்பானா?"

"அப்படித்தான் நினைக்கறேன்."

"அப்படியே இருந்தாலும்-உங்களைத் தன்னந்தனியா விட்டுட்டுப் போயிருக்கான்... விபரத்தை ஒரு தபால் எழுதிப் போட்டிருக்கலாம். அல்லது தந்தி குடுத்திருக்கலாம்."

"புது வேலைல சேர்ந்திருக்கார். நேரம் கிடைக்கலையோ என்னவோ?"

"கார்டு எழுதிப் போட அஞ்சு நிமிஷம் கிடைக்காமப் போயிடுமா? கம்பெனிக்கு லெட்டர் போட்டிருக்கானே!"

"கம்பெனிக்கு லெட்டர் போட்டாரா? என்ன லெட்டர்?"

"ராஜினாமா லெட்டர். அதனாலதான் முரளியை பார்த்துட்டுப் போகலாம்ன்னு வந்தேன். அவன் மெட்ராஸ் போனதெல்லாம் எனக்குத் தெரியாது."

"ராஜினாமா எழுதிப் போட்டிருக்கார்ன்னா அவர்க்கு அந்த வேலை நிச்சயமா கிடைச்சிருச்சின்னு தான் அர்த்தம்."

"உங்களை இங்கே விட்டுட்டு... அவன் அங்கே போய்... எத்தனை நாளுக்கு இப்படியே இருக்க முடியும்?"

"அங்கேயே வீடு பார்த்து என்னைக் கூட்டிட்டுப் போயிருவார்ன்னு நினைக்கறேன். அதனாலதான் நாலு நாளாகியும் எனக்கு எந்தவிதமான தகவலும் வரலை. சர்ப்ரைஸா இருக்கட்டும்ன்னு நினைச்சு இருப்பார்..."

"நான் கேக்கறேன்னு தப்பா நினைச்சுக்க மாட்டிங்களே..."

"கேளுங்க."

"இங்கே உள்ளூர். பிரச்சனையில்லை. மெட்ராஸ் மாதிரி வெளியூர்ல செலவு ஜாஸ்தியாகுமே. வீட்டு வாடகை குடுத்து மத்த செலவுகளையெல்லாம் சமாளிக்க முடியுமா?"

காயத்ரி புன்னகைத்தாள். "அங்கே சம்பளம் அதிகம் கிடைக்கும்ன்னு அண்ணன் சொன்னார்."

"இங்கே ஆயிரம் ரூபா வாங்கிட்டிருந்தான். அங்கே போனா அவனுக்கு எவ்வளவு கிடைச்சுரப் போகுது?"

"எட்டாயிரம் ரூபாய்க்கும் மேல இருக்குமாம்..."

நிவாஸ் அவளை ஆச்சரியப் பார்வை பார்த்தான். "அவ்வளவு சம்பளம் தர்றாங்களா...! என்ன கம்பெனி அது?"

"ஏதோ மருந்துக் கம்பெனின்னு சொன்ன மாதிரி ஞாபகம்."

நிவாஸிடம் ஒரு நிஜமான கவலை பரவிற்று "காய்த்ரி, தகுதிக்கு மேல சம்பளம் குடுக்கறாங்கன்னா... கொஞ்சம் யோசனை பண்ணனும். கண்ணை மூடிட்டுப் போய் விழக்கூடாது."

"இதுல யோசிக்க என்ன இருக்கு? உள்ளூர்ல இருக்கற சின்னச் சின்னக் கம்பெனிகள்ல அவ்வளவு தான் சம்பளம் தருவாங்க. மெட்ராஸ் மாதிரி பெரிய ஊர்ல பெரிய பெரிய கம்பெனிகள் இருக்கும். சம்பளமும் ஜாஸ்தி இருக்கும்."

"இவன் படிச்சது எகனாமிக்ஸ். மருந்துக் கம்பெனில இத்தனை சம்பளத்தில் என்ன வேலைன்னு யோசிச்சுப் பார்க்கணும் இல்லையா?"

"அட்டைப் பெட்டிக்கும் எகனா மிக்சுக்கும் மட்டும் என்ன சம்பந்தம்?" கேட்டுவிட்டு ஒரு புன்னகைப் பூத்தாள் காயத்ரி. "ரொம்ப யோசிக்காதிங்க.அண்ணன் வரட்டும். அதே கம்பெனில உங்களுக்கும் ஒரு வேலை கிடைக்குமான்னு கேட்டு சொல்றேன்."

அவள் புன்னகையை நிவாஸ் ரசிக்கவில்லை. இன்னமும் யோசனையில் மூழ்கியிருந் தான்.

"உங்க யோசனைக்கான காரணம் எனக்குப் புரியுது... அவ்வளவு சம்பளம் தர்றவங்க அண்ணன்கிட்ட சக்கையா வேலை புழிஞ்சிருவாங்கன்னு எனக்குத் தெரியும். ஆனா, என்ன கஷ்டமிருந்தாலும் அனுபவிக்க அண்ணன் துணிஞ்சிட்டது எனக்காகத்தான்."

நிவாஸ் நிமிர்ந்தான்.

காயத்ரி தொடர்ந்தாள். "அப்பா இருந்த வரைக்கும் குடும்பத்தில் ஒரு வயசுப் பெண்ணு இருக்குங்கற எண்ணமே துளிகூட இல்லாம சம்பாதிக்கறது, செலவழிக்கிறது, குடிக்கறதுன்னு பொறுப்பில்லாம இருந்து குடியில் தன்னையே அழிச்சிகிட்டார். ஆண்டவன் கருணையால அண்ணன் அப்படியில்லை. இருபத்தெட்டு வயசைத் தாண்டிட்டு எனக்கு சீக்கிரமே கல்யாணத்தைப் பண்ணி வைக்கத் துடிக்கிறார். இந்தக் காலத்தில் கூலி வேலைக்குப் போறவன்கூட பத்துப் பவுணாவது போடணும்ன்னு எதிர் பார்க்கறான். வெளியூருக்குப் போனாலும் பரவாயில்லை. கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. நிறைய சம்பாதிச்சு என்னைக் கரையேத்தணும்ன்னு முடிவு பண்ணிட்டார்."

"எல்லாருமே வரதட்சணை விஷயத்தில் பேராசை பிடிச்சு அலைய மாட்டாங்க..."

"அப்படிச் சொல்லாதிங்க. இந்த வரன் பார்க்கும் விஷயத்தில் நானும், அண்ணனும் நிறை அடிபட்டுட்டோம். போன வாரம்கூட- எங்களுக்கு வரதட்சணை வேண்டாம், கட்டின புடவையோட பெண்ணை அனுப் பினாபோதும்ன்னு சம்பந்தம் பேச வந்தாங்க. நாங்களும் ரொம்ப சந்தோஷப் பட்டோம். கடைசியில் தான் தெரிஞ்சது அவங்க சரியான பித்தலாட்டக்காரங்கன்னு!"

நிவாஸ் ஒன்றும் பேசவில்லை. சில விநாடி அமைதிக்குப் பின் சொன்னான்.

"உங்க மனசுக்குப் பிடிச்ச மாதிரி ஒருவரன் சீக்கிரமே அமையும். கவலைப் படாதீங்க..."

அவனுக்கு நன்றி சொல்கிற தினசில் பல்வரிசை லேசாய் தெரிகிற மாதிரி ஒரு புன்னகையை உதிர்த்தாள் காயத்ரி.

நிவாஸ் தொடர்ந்தான். "முரளி வந்தான்னா அவசியம் என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க. அவன்கிட்ட நான் பேசணும்."

(வரும்)

# பழைய சந்திப்பும் புதிய விஷயமும்

பூலான்தேவி 1980களில் சம்பல் பள்ளத்தாக்கை மட்டுமின்றி இந்தியாவை நடு நடுங்க வைத்த கொள்ளைக்காரி.

1990களில் புகழ்பெற்ற பெண் எம்.பி.

குறுகிய காலமே அவர் பாராளுமன்ற எம்.பி.யாக இருந்தாலும் பூலான்தேவி என்கிற பெயரைக் கேட்டாலே சிலருக்கு பயம் கலந்த ஒருவித மரியாதை வந்துவிடும்.

இப்படி பூலான்தேவியால் தன் வசம் இழுக்கப்பட்டவர் கஜோல். பூலான்தேவி அரசியலுக்கு வந்த புதிதில் (எம்.பி. ஆன



பிறகு) துணிச்சலாக கஜோல் டெல்லியில் அவர் தங்கி இருந்த இடத்திற்கே சென்று சந்தித்தார். அவரை பேட்டியும் கண்டார்.

இன்று பூலான்தேவி உயிருடன் இல்லை. ஆனால் கஜோலுக்கு அவர் எடுத்த பேட்டி இன்றும் மாறாத பசுமையான நினைவுகளாகவே இருக்கிறது.

1997ல் கஜோல் எடுத்த அந்த பேட்டி:-

கஜோல்:- உங்கள் கிராமம் பற்றிச் சொல்லுங்கள்.

பூலான்தேவி:- என் கிராமத்தின் பெயர் சேக்பூர் குடா. உண்மையில் குடா என்பது எனது கிராமமான சேக்பூர் அருகே உள்ளது. இரண்டு கிராமங்களையும் ஒன்றாக



இணைத்து சேக்பூர்குடா என்று அழைக்கப்படுகிறது. உ.பி. மாநிலம் ஜலோன் மாவட்டத்தில் ஜான்சி-கான்பூர் நகரங்களுக்கு இடையில் நான் பிறந்த கிராமம் இருக்கிறது.

கஜோல்:- நீங்கள் வீட்டில் அதிர்ஷ்ட சாலி குழந்தையாக கருதப்பட்டீர்களா? அல்லது உங்களுக்கு வேறு பட்டம் எதுவும் சூட்டப்பட்டதா?

பூலான்தேவி:- அதிர்ஷ்டமா? கிடையவே கிடையாது. என் அம்மா 5 பெண் குழந்தைகளை பெற்றெடுத்தவர். நானும் பெண்ணாக பிறந்து விட்டேன். என்ற கோபம் எப்போதும் அவரிடம் இருக்கும். அந்த கோபம் அடி உதையாக மாறும். அப்பா தான் என்னை எடுத்து இடுப்பில் வைத்துக் கொஞ்சுவார்.

வளர்ந்த பிறகு அம்மாவின் புலம்பல் ஓயவில்லை. சப்பை மூக்கு, கருப்பு நிறம், அழகும் இல்லை. உன்னை எவன் கட்டிக்குவான் என்று அழுவாள்.

கஜோல்:- அப்போது உங்களிடம் கவரக்கூடிய எந்த அம்சமும் இல்லையா?

பூலான்தேவி:- வெளிப்புறமாக எனக்கு அப்படி எதுவும்இல்லை. ஆனால் ஒவ்வொருவருக்கும் உட்புறமாக அழகான விஷயம் இருக்கும். மனித நேயம் உள்ளவளாக இருந்தேன்.

நான் பருவ வயதை எட்டிய பிறகு ஆண்களின் பார்வை என்மேல்பட்டது. அப்போது அம்மாவிடம் கேட்டேன். "நான் அழகாக இல்லை என்றாயே. இப்போது ஏன் என்னை இப்படி பார்க்கிறார்கள்! நான் என்ன செய்யவேண்டும்" என்பேன்."

கஜோல்:- அப்படி ஆண்கள் உங்களைச் சுற்றி வந்ததில் நீங்கள் வித்தியாசமாக எதையும் உணரவில்லையா?

பூலான்தேவி:- இல்லை. முன்பிறவியில் எனது பாவங்களுக்கு பரிகாரம் எதுவும் செய்யாமல் விட்டு விட்டேன் போலிருக்கிறது. அதனால் தான் தண்டிக்கப்பட்டு அதே மாவட்டத்தில் பிறந்திருக்கிறேன். அதான் அவர்கள் இப்படிச் சுற்றுகிறார்கள் என்று நினைப்பது உண்டு."

"ஆண்கள் மீது ரொம்பவும் கோபப் படுகிறீர்களே?"

"பெண்களை மதிக்காத, கேவலமாக நடத்தும் ஆண்களைத்தான் எனக்கு பிடிக்காது.

இன்றுகூட என்னை ஒரு அரசியல் வாதியாக நான் கருதிக்கொள்வது இல்லை. நான் ஒரு பெண்ணாகத்தான் இருக்கிறேன். எனக்கு நிகழ்ந்த கொடுமைகளை எதிர்த்து போராடவே அரசியலுக்கு வந்தேன். ஏமாற்றப்பட்ட எனக்கு நீதி வேண்டும். ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு நீதி விஷயத்தில் இருக்கவே கூடாது.

ஆனால் பாருங்கள்! இன்று என்ன நடக்கிறது. ஒரு ஏழை பிக்பாக்கெட் அடித்து விட்டால் அவனை பொலிசும், பொதுமக்களும் போட்டு புரட்டி எடுத்து விடுகிறார்கள்.

ஆனால் பணக்காரர்கள் கொலையே செய்தால்கூட லட்சக்கணக்கான ரூபாயை செலவழித்து வெளியே வந்து விடுகிறார்கள். பொலிஸ் ஸ்டேஷனில் அவருக்கு உட்கார நாற்காலி போட்டு, குடிக்க குளிர்பானமும் கொடுக்கிறார்கள்.

பணக்காரர்கள் தங்களது துப்பாக்கி ரவைகளை ஏழைகளை நோக்கி பாய்ச்சுகிறார்கள். இது நகரத்திலும் நடக்கலாம். கிராமத்திலும் நடக்கலாம். கிராமத்தில் ஜமீன்தார் யாராவது ஒரு விவசாயியை கொன்று விட்டால் அவர் சுலபமாக, 'ஏழை விவசாயி இன்னொரு ஏழை விவசாயிடம் சண்டை போட்டு செத்து விட்டான்' என்று தப்பி விடுகிறார்."

பூலான்தேவி தன் இளமைக் காலத்தில் அனுபவித்த பயங்கரமே அவரை இப்படி பேச வைத்திருக்கிறது என்பது மட்டும் நூறு சதவீதம் உண்மை என்பது இந்த பேட்டியில் தெரிகிறது. ■

# பட்டுக் கோட்டையா? பாட்டுக் கோட்டையா?

துரோணரை நேரிலே கண்டு அவரிடம் பயிற்சி பெறாமலே அவரை மானசீக குருவாக ஏற்றுக்கொண்டு வில்வித்தை படித்து அதில் தலை சிறந்தவனாய் விளங்கிய ஏகலைவன் மாதிரி, பாவேந்தர் பாரதிதாசனை நேரிலே பார்க்காமலே அவரை தனது மானசீக குருவாக ஏற்று பாரதிதாசனே வியந்து பாராட்டும் விதம் கவிஞராக நிகழ்ந்தவர் பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் அற்புதமான கவியாற்றலில் மனதை பறிகொடுத்து அவரிடம் மரியாதை செலுத்தி பழகியவர் கவியரசு கண்ணதாசன் ஆவார். அதே மாதிரி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் கண்ணதாசனிடம் அலாதியான அன்பை செலுத்தி வந்தார்.

கண்ணதாசன் சொந்தமாக படம் தயாரித்த போது, அப்போது முன்னணியில் இருந்த ஒரு திரைப்பட கவிஞரிடம் தனது படத்திற்கு பாடல் எழுதித்தர கேட்டபோது, அந்த கவிஞர் மிக அலட்சியமாக, 'எனக்கு புதிதாக எழுத நேரமில்லை. இதில் ஏதாவது பாடல் தேறினால் எடுத்துக் கொண்டு போ' என்று பழைய காகிதங்களை தூக்கிக் தந்ததாக வேதனையுடன் கண்ணதாசன் கூறினார்.

அதேசமயம் அந்த காலக்கட்டத்தில் ஓய்வு ஒளிச்சல் இல்லாமல் படங்களுக்கு பாடல் எழுதி வந்த பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை கண்ணதாசன் நேரில் பார்த்து, ஒரு பாடல் எழுதித் தருமாறு கேட்டபோது, அவர் மிகுந்த பற்றுதலோடு பாடல் எழுதித்தர இசைந்ததை கண்ணதாசன் நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டுள்ளார்.

அந்த நாளில் தமிழ் சினிமா பத்திரிகை ஆசிரியர் ஒருவர் சில திரைப்பட கவிஞர்களை ஏளனமாகவும், கேலியாகவும் விமர்சித்து வந்தார். அந்த ஆசிரியரின் ஏளனத்துக்கு பலியானவர்களில் கவிஞர் கண்ணதாசனும் ஒருவர்.

ஒரு சமயம் ஒரு விழாவிற்கு பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரமும், கண்ணதாசனும் வந்திருந்தார்கள். ஒருவரை ஒருவர் நலம் விசாரித்து பேசிக் கொண்டிருந்த நேரம் அப்பக்கமாக குறிப்பிட்ட அந்த சினிமா பத்திரிகையின் ஆசிரியர் வரவே பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் திடீரென பாய்ந்து அந்த சினிமா பத்திரிகை ஆசிரியரின் சட்டை கழுத்தை பிடித்துக் கொண்டார். அந்த ஆசிரியர் கவிஞர் கண்ணதாசனைப் பற்றி ஏளனமாக அந்த வாரத்தில் தன் பத்திரிகையில் எழுதி இருந்ததை பட்டுக்கோட்டையார் குறிப்பிட்டு, 'என்னடா கவிஞர்கள் என்றால் உனக்கு ஏளனமா? கருவாட்டு வியாபாரம் செய்கிற உனக்கு கவிதையைப் பற்றி என்னடா தெரியும்?' என்று கேட்டு உதைக்கப் போய் விட்டார்.

தனக்காக ஒரு மனிதரிடம் சண்டைக்கு போகிற அளவு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் நடந்து கொண்டார் என்றால் அவருக்கு தன் மீதுள்ள மதிப்பு எவ்வளவு என கண்ணதாசன் நெகிழ்ந்து போனார்.

அதனால்தான் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் திடீர் மறைவுச் செய்தியை கண்ணதாசனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'பட்டுக்கோட்டை சாய்ந்ததா? இல்லை பாட்டுக்கோட்டையே சாய்ந்ததம்மா?' என்று கண்ணதாசன் பட்டுகோட்டையார் மறைவு குறித்து மிக உருக்கமாக பாடினார்.

சுமார் 29 வயதிலேயே காலமாகிவிட்ட பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் தனது எழுத்தைப் போலவே உயர்ந்த சுபாவங்களை கொண்ட மனிதராவார். பொதுவுடமை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்.

ஒரு சமயம் சென்னையில் நகரப் பேருந்தில்தான் பயணம் செய்து கொண்டிருந்த போது, வழியில் ஒரு இடத்தில் சாலையில் பள்ளம் தோண்டப்பட்டு அங்கே பழுது பார்க்கும் வேலை நடப்பதை அறிவிக்க வாகனங்களுக்கு எச்சரிக்கையாக சிவப்புக்கொடி கட்டப்பட்டிருந்தது.

அதைப் பார்த்துக் கொண்டே வந்த பட்டுக் கோட்டையார் தன் அருகிலே இருந்த நண்பரிடம், 'எங்கே எல்லாம் பள்ளம் விழுந்து அது மேடாக நிரப்பப்பட வேண்டுமோ, அங்கே எல்லாம் சிகப்பு கொடி பறந்துதான் அந்த பணிகள் நடக்க வேண்டும் போலும்' என்றார்.

பொதுவுடமை லட்சியம் என்றாலே வாழ்க்கையில் இல்லாதவர்களை முதலில் கைதூக்கி விடுகின்ற பணிதான் முக்கிய மனாது. அந்த பணியில் நாட்டம் உள்ளவர்கள் சொந்த துன்பங்களை பெரிதுப்படுத்த மாட்டார்கள்.

ஒரு சமயம் பொதுவுடமை இயக்கத்திற்காக நாடகம் நடத்த வெளியூர் சென்றிருந்த பட்டுக்கோட்டையார் நாடகத்திற்கு சரியான வசூல் இல்லாமல் தங்கள் குழுவினருடன் பசி, பட்டினியுமாக சென்னை திரும்ப பேருந்தில் ஏறினார். பேருந்தில் அமர்ந்திருந்த தங்கள் குழுவினர் அனைவரும் சோர்ந்த முகத்துடன் காணப்பட்டார்கள். அவர்கள் சோகத்தை மாற்றி அவர்களுக்கு குதூகலத்தை தர பட்டுக்கோட்டையார் அங்கேயே ஒரு பாடல் எழுதி, அதனை சத்தமாக பாட ஆரம்பித்தார். அந்த பாடலை கேட்டதும் நாடக குழுவினருக்கு பசி பறந்து விட்டது. அனைவரும் குதூகலமாக கைகளை தட்டி சேர்ந்து பாட ஆரம்பித்தார்கள்.

**'சின்னக்குட்டி நாத்தனா**
**சில்லறைய மாத்துனா**
**குன்னக்குடி போற வண்டியில்**
**குடும்பம் பூரா ஏத்துனா!**

இந்த பாடலை கேட்டு மகிழ்ந்த அவரது குழுவினர், 'அண்ணே பாட்டு ரொம்ப அருமையா இருக்கு. இந்த பாட்ட அப்படியே ஒருபடத்துக்கு குடுங்கன்னே' என்று கேட்டுக் கொண்டார்கள். அதன் படியே பட்டுக் கோட்டையாரின் அந்த பாடலை மாடர்ன்ஸ் தியேட்டர் தயாரித்த 'ஆரவல்லி' படத்திற்கு தந்து விட்டார்.

வெறும் கேலி கிண்டல் என்றில்லாமல் ஒரு சிறந்த சிந்தனைவாதியின் சீற்றமும் பட்டுக் கோட்டையார் பாடலிலே காணலாம். 'பாண்டித் தேவன்' என்ற திரைப்படத்தில் அவர் எழுதிய பாடலில் சில வரியை இங்கே காணலாம்.

**சித்தர்களும் யோகிகளும்**
**சிந்தனையில் ஞானிகளும்**
**புத்தரோடு ஏசுவும்**
**உத்தமர் காந்தியும்**
**எத்தனையோ உண்மைகளை**
**எழுதி எழுதி வச்சாங்க**
**எல்லாந்தான் படிச்சீங்க?**
**என்ன பண்ணி கிழிச்சீங்க!**

என்று ஆத்திரமாய் கேட்கிறார். அதே மாதிரி 'கண்திறந்தது' என்ற படத்தில் மிக புரட்சிக்கரமான வரிகளை பட்டுக்கோட்டையார் பாடலாக்கி இருக்கிறார்.

**வசதி இருக்கிறவன்**
**தரமாட்டான்-அவனை**
**வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்**
**வானத்தை வில்லா வளைச்சுக்**
**காட்டுறேன்னு**
**வாயாலே சொல்லுவான் செய்ய**
**மாட்டான்...**

**எழுதிப் படிச்சு அறியாதவன் தான்**
**உழுது ஒளச்சு சோறு போடுறான்.**
**எல்லாம் படிச்சவன் ஏதேதோ பேசி**
**நல்லா நாட்டைக்கூறு போடுகிறான்-**
**இவன்**
**சோறு போடுறான்-அவன்**
**கூறு போடுறான்...**

என்கிறார் வேதனையுடன்! இதே போல் 'சங்கிலித் தேவன்' என்ற திரைப்படத்தில் தொழிலாளர் மேன்மையை சொல்லுகிற ஒரு அருமையான பாடலை பட்டுக் கோட்டையார் எழுதி இருந்தார்.

**வீரத்தலைவனும் நெப்போலியனும்**
**வீடு கட்டும் தொழிலாளி!**
**ரஷ்யா தேசத்தலைவன் மார்சல் ஸ்டாலின்**
**செருப்புத் தைக்கும் தொழிலாளி!**
**விஞ்ஞான மேதை ஜி.டி.நாயுடு**
**காரு ஒட்டும் தொழிலாளி!**
**விண்ணொளிக் கதிர் விவரம் கண்ட**
**சர்.சி.வி.ராமனம் தொழிலாளி!-எதற்கும்**
**உழைப்பு தேவை!**

என்கிறார். 'பாண்டித்தேவன்' என்ற திரைப்படத்தில் இன்றைய நாட்டு நடப்பை சொன்னது போல பட்டுக் கோட்டையார் எழுதியுள்ள பாடலில் சிலவரிகள்.

**நாடு முன்னேற பலர்**
**நல்லதொண்டு செய்வதுண்டு**
**நல்லதை கெடுக்கச் சிலர்**
**நாச வேலையும் செய்வதுண்டு**
**ஒடெடுத்தாலும் சிலர்**
**ஒற்றுமைாய் இருப்பதில்லை-இந்த**
**உண்மையை தெரிந்தும்-நீ**
**ஒருவரையும் வெறுப்பதில்லை!**

என்கிறார் 'திருடாதே' திரைப்படத்தில் குழந்தைக்கு புத்திசொல்வது மாதிரி பெரியவர்களுக்கே பொதுவுடமை தத்துவத்தின் சாறு எடுத்து கவிதையாக்கி ஊட்டி இருக்கிறார். அதில் சில வரிகளை பாருங்கள்.

**கொடுக்கிற காலம் நெருங்குவதால்-இனி**
**எடுக்கிற அவசியம் இருக்காது.**
**இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப்**
**போனால்**
**பதுக்கிற வேலையும் இருக்காது.**
**ஒதுக்கிற வேலையும் இருக்காது.**
**உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டா**
**கெடுக்கிற நோக்கம்**
**வளராது-மனம்**
**கீழும் மேலும் புரளாது.**

பட்டுக்கோட்டையாரின் சிந்தனை செல்வமான அற்புதமான பாடல்களை குறைந்த காலத்திலேயே நிறைந்தளவு எழுதி இருக்கிறார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய பாடல்களில் பெரியவர்களின் அறிவைச் சுடுகிற மாதிரி ஆழ்ந்த கருத்துக்களை அவர் தந்தாலும் அவர் தன்னை விட சிறியவர்களுக்கு அறிவு புகட்டியது மாதிரியே அடக்கமாக பாடி இருக்கிறார்.

'சின்னப் பயலே சின்னப்பயலே' என்று சிறு வயது பையனை அழைத்துப் பாடுவது போலவும் 'தூங்காதே தம்பி தூங்காதே' என்று தம்பிக்கு கூறுவது போலவும் திருடாதே பாப்பா திருடாதே' என்று குழந்தைகளுக்கு சொல்வது போலவுமே அவர் பெரும்பாலும் அறிவுப் போதனையான பாடல்களை பாடி இருக்கிறார்.

அவர் சின்னப்பயலே என்று சிறு குழந்தையை அழைத்து பாடுவது போல தோன்றினாலும் அவர் பாடும் கருத்துக்கள் பெரியவர்களே மன வளர்ச்சியில் சின்னவர்களாய் வாழ்வதைப் பார்த்து பாடுவது போலவே அவர் கருத்துக்கள் அமைந்தன.

**தனியுடமைக் கொடுமைகள் தீரத்**
**தொண்டு செய்யடா-நீ**



**தொண்டு செய்யடா!**
**தானா எல்லாம் மாறும்என்பது**
**பழைய பொய்யடா-எல்லாம்**
**பழைய பொய்யடா!**

இவ்வாறு பாடுகிற பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் தனியுடமை கொடுமைகள் தீர தொண்டு செய் என சின்னப்பயலிடம்தான் கூறுவாரா? சின்னப் பயலாகிய சிறு குழந்தைக்கு அது புரியுமா? ஆக அறிவில் சிறுவரான பெரியவர்களுக்கே இதை கூறுகிறார்.

'அரசிளங்குமரி' படத்தில் சின்னப் பயலுக்கு அறிவுரைச் சொன்ன பட்டுக் கோட்டையார் 'குமாரராஜா' படத்திலும் சிறுவனுக்கு அறிவுரை சொல்கிறார்.

**மூத்தோர் சொல் வார்த்தைகளை**
**மீறக்கூடாது-பண்பு**



**முறைகளிலும் மொழிதனிலும்**
**மாறக்கூடாது!**
**மாற்றார் கைப்பொருளை நம்பி**
**வாழக்கூடாது-தன்**
**மானமில்லாக் கோழையுடன்**
**சேரக்கூடாது!-நீ**

இவ்விதம் பெரியவர்களுக்கே புரியக் கூடிய அறிவுரையைச் சொல்கிறார்.

இதேபோல் மிக பிரபலமான 'நாடோடி மன்னன்' படத்தில் வரும் தூங்காதே தம்பி தூங்காதே என்று வரும் பாடலில் ஒவ்வொரு வரியுமே சிந்தனைத் துளிகளாகும்.

**'நல்ல பொழுதையெல்லாம்**
**தூங்கிக் கெடுத்தவர்கள்**
**நாட்டைக் கெடுத்ததுடன்**
**தானுங்கெட்டார், சிலர்**
**அல்லும் பகலும்**
**தெருக்கல்லாயிருந்து விட்டு**
**அதிர்ஷ்டமில்லையென்று**
**அலட்டிக் கொண்டார்.**
**விழித்துக் கொண்டோரெல்லாம்**
**பிழைத்துக் கொண்டார்-உன் போல்**
**குறட்டை விட்டோரெல்லாம்**
**கோட்டை விட்டார்!'**

இந்த அருமையான பாடலைப் போலவே 'பாசவலை' படத்தில் ஆடு மேய்த்துக் கொண்டு பாடுவதாக ஒரு பாட்டு!

**'கணக்கு மீறித் தின்றதாலே**
**கனத்த ஆடு சாயுது... அதைக்**
**கண்ட பின்னும் மந்தையெல்லாம்**
**அதுக்கு மேலே மேயுது.**
**பணக்கிறுக்குத் தலையிலேறிப்**
**பகுத்தறிவத் தேயுது-இந்த**
**பாழாய்ப் போற மனிதக்கூட்டம்**
**தானாய் விழுந்து மாயுது!'**

இப்படி மனிதர்களைப் பார்த்து நொந்து கொள்ளும் பட்டுக்கோட்டையார் 'சக்கரவர்த்தி திருமகள்' படத்தில் பிறவி முதல் இறுதி வரையுள்ள ஒருவன் குணங்களைப் பற்றி இப்படி பாடுகிறார்.

**'உறங்கையிலே பானைகளை**
**உருட்டுவது பூனைக்குணம்-**
**காண்பதற்கே**
**உருப்படியாய் இருப்பதையும்**
**கெடுப்பதுவே குரங்குக் குணம்- ஆற்றில்**
**இறங்குவோரைக் கொன்று**
**இரையாக்கல் முதலைக்குணம்- ஆனால்**
**இத்தனையும் மனிதனிடம்**
**மொத்தமாய் வாழுதடா**
**பொறக்கும் போது மனிதன் பொறந்த குணம்**
**போகப் போகப் மாறுது-எல்லாம்**
**இருக்கும்போது பிரிந்த குணம்**
**இறக்கும் போது சேருது'**

என்று அருமையாக பட்டுக்கோட்டை பாடுகிறார்.

பட்டுக்கோட்டையார் சிருங்கார ரஸம் வெளிப்படும் காதல் பாடல்களிலும் அவரது வர்ணனைகள் தனி முத்திரை பதிப்பவையே! 'அமுதவல்லி' என்ற படத்தில் அவர் எழுதியுள்ள பாடலைப்பாருங்கள்.

**'ஆடைகட்டிவந்த நிலவோ-கண்ணில்**
**மேடைகட்டி ஆடும் எழிலோ-இவள்**
**ஆடைகட்டி வந்த நிலவோ-குளிர்**
**ஓடையிலே மிதக்கும்-மலர்**
**ஜாடையில் சிரிக்கும் இவள்**
**காடுவிட்டுவந்த மயிலோ-நெஞ்சில்**
**கூடுகட்டி வாழும் குயிலோ?'**

இந்த வார்த்தைகளின் கோர்வை நம் மனதை சுண்டி இழுக்க வில்லையா? இதே போல் 'தங்கப்பதுமை' என்ற படத்தில் பட்டுக் கோட்டையார் எழுதிய ஒரு பாடலை பாருங்கள்.

**முகத்தில் முகம் பார்க்கலாம்-விரல்**
**நகத்தில் பவளத்தின் நிறம் பார்க்கலாம்!**
**வகுத்த கருங்குழலை மழைமுகிலெனச்**
**சொன்னால்**
**மலரினை இதழோடு இணை**
**சேர்க்கலாம்!- என் முன்**
**இகத்திலிருக்கும் சுகம் எத்தனையானாலும்**
**இருவருக்கும் பொதுவாக்கலாம்**
**அன்பே**
**அதன் எண்ணிக்கை விரிவாக்கலாம்-**
**காதல்**
**அகத்தினிலே அலைமோதும்**
**ஆசையிலே இன்பம்**
**ஆயிரம் உருவாக்கலாம்!**

என மிக அழகாக சொற்சுவையுடன் பாடலை அமைத்திருக்கிறார்.

இதே மாதிரி 'கல்யாணிக்கு கல்யாணம்' என்ற படத்தில் ஒரு பாடலை பாருங்கள்.

**'வட்டக் கருவிழி மங்கையே-ஒளி**
**கொட்டும் நிலவுக்கு தங்கையே!**
**கட்டுக் குலையாத பட்டுத்தளிர்-மேனி**
**கண்ணில் அபிநயம் காட்டுதே-இன்பக்**
**காவியத் தேனள்ளி ஊட்டுதே!**

எனக் குறப்பிடுகிறார். பட்டுக் கோட்டையார் பெரியபெரிய செய்திகளை எளிமையான சில வரிகளில் அடக்கிக் காட்டுவதில் நிகரற்றவர்.

'இரும்புத்திரை' படத்தில் நகைச் சுவையாக எழுதிய ஒரு பாடலில் பெரிய கருத்தை பொதிந்து வைத்துள்ளார்.

**'கண்ணுக்கு அழகாப் பெண்ணைப்**
**படைச்சான்**
**பெண்ணுக்கு துணையா ஆணைப்**
**படைச்சான்**
**ஒண்ணுக்கு பத்தா செல்வத்தைப்**
**படைச்சான்**
**உலகம் நிறைய இன்பத்தைப்**
**படைச்சான்**
**என்னைப் போலவே பலரையும் படைச்சு**
**இதுக்கும் அதுக்கும் அலைய வைச்சான்**
**ஏழையைக் கடவுள் ஏன் படைச்சான்'**

இப்படி பாடிய பட்டுக் கோட்டையார் நாடகம் வடிவில் நெடும்பாடலும் திரைக்கு எழுதியதுண்டு. 'ரங்கோன்ராதை' படத்தில் ராஜா தேசிங்க பாடல் ரசிக்கத் தக்கது.

**'நாட்டுக்கு ஒரு வீரன்! செஞ்சிக்**
**கோட்டைக்கு அதிகாரன்**
**அந்த நாளில் ஆற்காடு நவாபை**
**எதிர்த்த ராஜா தேசிங்கு**
**கதையை நாம் சொல்வோம் இங்கு**
**இந்தப் பாட்டைக் கேட்டால் பரம்பரை**
**நிலைமை**
**பளிச்சுப் பளிச்சுன்னு தெரியும்**
**வேட்டு பீரங்கி கூட்டத்தில் பாய்ந்து**
**வெட்டியவன் கதை விபரம் புரியும்...**

போர் வந்த பிறகு ராஜா தேசிங்கு நண்பர் முகம்மது கான் போர் களம் புறப்பட மனைவியிடம் விடை கேட்கிறார்.

**'வந்தது வந்தது ஓலை**
**வாளும் தலைகளம் சந்திக்கும் வேளை!**
**வந்தது வந்தது ஓலை**
**வாழ்க்கை தொடங்கிடும் வேளை-என்**
**வார்த்தையைக் கேளுங்கள் போகலாம்-**
**நாளை**
**வாழ்க்கை தொடங்கிடும் வேளை**
**மானம் பெரிது உயிர் சிறிது- இது**
**வழி வழி வந்த வழக்கமடி**
**மானம்பெரிது உயிர் சிறிது- இது**
**மாற்றம் நடந்தால் என் மார்பின் உதிரம் -நம்**
**மண்ணை மணப்பதும் உண்மையடி-என்**
**வண்ணக் கிளியே விடை கொடடி!'**

இவ்விதம் தான் எழுதிய திரைப்பட பாடல்களில் பட்டுக்கோட்டையார் ஒவ்வொரு வரியிலும் உணர்ச்சி ஊடுருவச் செய்தார். அதனால்தான் அவருடைய பாடல்கள் திரைப்பாடல்களானாலும் இலக்கிய பாடல்களுக்கு நிகராக என்றும் படிக்கவும், கேட்கவும் சுவை மிகுந்ததாய் இருந்து வருகின்றன.

---

# வாரம் ஒரு வார்த்தை!

**36. அன்பு**

அன்பாயிருக்கணும்னு அநேக பெரியவங்க சொல்லியிருக்காங்க!

நாமளும் அதை கேட்டுட்டு அன்பு காட்டறதுக்குத் தயாராதான் இருக்கோம். அதை வாங்கறதுக்குத்தான் ஆளைக் காணோம்!

இருந்தாலும் அன்புலே எத்தனையோ வகை உண்டு. அதைச் சரியாபுரிஞ்சுக்கிட்டு அதுக்கப்புறம் அன்பு காட்ட ஆரம்பிக்கணும். வகையை புரிஞ்சுக்காமே அன்பு காட்டினா வம்புலே மாட்டிக்க வேண்டியது தான்!

அன்பு-ன்னா சாதாரணமா நினைச்சுடாதீங்க. அதுலே எவ்வளவு விதம் தெரியுமா?

இரக்கம்-கருணை காருண்யம்-பந்துத்துவம்-பட்சம்-பாசம்-நேசம்-விசுவாசம்-அபிமானம்-காதல்-பக்தி-இப்படி பலவிதமாக அதைப் பத்தி சொல்றாங்க பெரியவங்க!

இந்த வார்த்தைகளெல்லாம் நாம கேள்விப்பட்டதுதான். இருந்தாலும் அதுகளுக்குள்ளே என்ன வித்தியாசம்னு கேட்டா சரியா சொல்லத் தெரியாது!

அதனாலே இந்த வார்த்தைகளுக்கெல்லாம் பெரியவங்க என்ன விளக்கம் சொல்றாங்கன்னு இப்ப பார்க்கலாம்.

எளியவர்கள் மேலே செலுத்தற அன்பு இருக்கு பாருங்க அதுக்கு இரக்கம்ன்னு பேரு:

அறிவு பலம்-சரீர பலம் இது ரெண்டும் இல்லாதவங்க மேலே- அதாவது வலிமையற்றவர்கள் மேலே-செலுத்தற அன்பு இருக்கு பாருங்க அதுதான் கருணை.

எறும்புலேயிருந்து யானை வரைக்கும் சகல ஜீவராசிகள் மேலேயும் காட்டுற அன்புக்கு காருண்யம்ன்னு பேரு-ஜீவ காருண்யம்! சிபிச் சக்கரவர்த்தி காட்டின அன்பு இந்த ரகம்.

உறவினர்கள்-சொந்தக்காரங்க-அவங்க வசதியா இருந்தாலும் வறுமையிலே இருந்தாலும் வித்தியாசமில்லாமே காட்டற அன்பு இருக்கு பாருங்க அதுக்குப் பேரு பந்துத்துவம்.

ஒரு எஜமானன் வேலையாட்கள் கிட்டே காட்டுற அன்பு இருக்கு பாருங்க அதுக்குப் பேருதான்-பட்சம்! அவனும் தன்னை மாதிரி மனுஷன்தான்ங்கிற நினைப்பு வேணும்.

ஒரு தாய் தன் குழந்தை மேலே, ஒரு குழந்தை தன் தாய் மேலே செலுத்தற அன்புக்கு பாசம்-ன்னு பேரு! (ஈருடல் ஒருயிர்ன்னு நினைக்கிறது இது!) ராமரும் கௌசலையும் இதுக்கு உதாரணம்.

தம்மை ஒத்த நண்பர்கள் கிட்டே செலுத்தற அன்புக்கு நேசம்ன்னு பேரு. வயசு-செல்வம்-அந்தஸ்து இந்த வித்தியாசம்லாம் பார்க்காமே அவங்க சுக-துக்கத்துலே சமபங்கு எடுத்துக்கறது இது. கிருஷ்ணன் குசேலர் கிட்டே காட்டினது இந்த ரகம்!

வேலை செய்யறவன் முதலாளிகிட்டே காட்டுற அன்புக்கு 'விசுவாசம்'ன்னு பேரு!

தேசத்து மேலேயும்-தாய்மொழி பேர்லேயும் செலுத்துற அன்பக்கு அபிமானம்ன்னு பேரு!

தேசாபிமானம்-ன்னு சொல்றோமே-இதுதான்.

ஒரு கணவன்-மனைவி பேர்லே காட்டுற அன்புக்கு காதல்ன்னு பேரு!

கடவுள் பேர்லே செலுத்துற அன்புக்கு 'பக்தி'ன்னு பேரு.

இப்படி அன்புலே பல ரகம் இருக்கப்போ அதுலே உள்ள வித்தியாசம் தெரியாம இடம் மாத்தி அன்பு காட்டினா இடைஞ்சல் தான்.

சரி... இந்த அன்பைப் பத்தி விஞ்ஞானம் என்ன சொல்லுது தெரியுமா?

இதயத்தைப் பாதுகாக்கறதுக்கு முக்கியமா தேவைப் படற ஒண்ணு இந்த அன்புதான்னு சொல்லுது!

நெதர்லாந்து விஞ்ஞானிகள் இதை ஆராய்ச்சி பண்ணியே கண்டுபிடிச்சிருக்காங்க.

கொஞ்சம் முயல் குட்டிகளை ரெண்டு பிரிவா பிரிச்சாங்க. ரெண்டு 'குரூப்'புக்கும் கொழுப்பு அதிகமா உள்ள ஆகாரத்தையே குடுத்தாங்க. ஆனா ஒரு குரூப்புக்கு

**தென்கச்சி - கோ.சுவாமிநாதன்**

வெறுமனே ஆகாரத்தைக் குடுத்ததோட சரி! இன்னொரு 'குரூப்' முயல்களுக்கு ஆகாரம் குடுத்ததோட நிறுத்திக்கலே!

அதுக்கு முன்னாடி கூண்டுகளைத் திறந்துவிட்டு முயல்களை கொஞ்ச நேரம் கொஞ்சி விட்டு, அதுக்கப்புறமா ஆகாரம் குடுத்தாராம் ஆராய்ச்சியாளர்.

இந்த 'குரூப்'புக்கு இதய பாதிப்பு 60 சதவீதம் குறைச்சலா இருந்துதாம்!

சில நோயாளிகளுக்கு ஹார்ட் அட்டாக் வந்தாலும் அதை தாங்கிக்கிட்டு குணமாகற சக்தி அதிகமா இருக்கு!

இது எப்படின்னு ஆராய்ஞ்சிப் பார்த்தாங்க.

அவங்கள்லாம், மனைவி தன் பேர்லே ரொம்ப அன்பா இருக்கிறதா நினைக்கறவங்களா இருந்தாங்களாம்!

இதய நோயாளிகள் பல பேரை சந்திச்சு இதய நோய் ஏற்பட என்ன காரணம்னு கேட்டிருக்காங்க. அவங்க சொன்ன காரணம்லாம் சாப்பாடு சம்பந்தமா இல்லையாம்.

மனைவி அன்பா இல்லே-இப்படிப்பட்ட காரணத்தைத்தான் சொல்றாங்களாம்.

அதனாலே இதயத்தை பாதுகாக்கணும்ன்னு நினைக்கிறவங்க... அடுத்தவங்க அன்பா இருக்கற மாதிரி பார்த்துக்குங்க. அதுதான் முக்கியம்.

ஒருத்தரு முகம் பூரா பிளாஸ்திரி போட்டுக்கிட்டு வந்தார்-ரொம்ப கோவமா!

'என்னங்க ஆச்சி'ன்னு விசாரித்தேன்.

'எல்லாம் உங்களாலேதான் சார்'ன்னார்.

'விவரமா சொல்லுங்க'ன்னேன்.

உங்க தகவலைக் கேட்டுட்டு ஒரு பூனைக்குட்டியை கையிலே எடுத்தேன் அன்பா அதை தடவிக் குடுக்கறதுக்கு. ஆனா அது முந்திக்கிட்டுது. அது என் முகத்தை தடவிக் குடுத்துட்டுது! முகம் பூரா நகக்கீறல். அதுதான் இப்படி-ன்னார்.

அன்புலே அறிவு சேராததுனாலே வந்த கோளாறு இது.

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## இந்நாள் விக்கெட் கீப்பர்
## ஒரு முன்னாள் ஜிம்னாஸ்டிக் வீரர்



தீப் தாஸ் குப்தா இந்திய அணியின புதிய விக்கெட் கிப்பர். சிறந்த துடுப்பாட்ட வீரர். இவர் ஒரு ஜிம்னாஸ்டிக் வீரர் என்பது பலரும் அறியாத ஒன்று:

புதுடில்லியில் உள்ள தேசிய விளையாட்டரங்கில் ஜிம்னாஸ்டிக் பயிற்சி பெறச் செல்லும்போது, இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியை வேடிக்கை பார்ப்பது தான் குப்தாவின் பொழுது போக்கு.

இந்தப் பொழுது போக்கே நாளடைவில் அவரைக் கிரிக்கெட் வீரர் ஆக்கி விட்டது. 16 வருட விளையாட்டுப் பயிற்சிக்குப் பின் இந்திய கிரிக்கெட் அணியில் வாய்ப்புப் பெற்றுள்ளார் குப்தா.

ஜிம்னாஸ்டிக் வீரரான இவர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது சுனித் சர்மா என்ற கிரிக்கெட் பயிற்சியாளரின் பார்வையில் பட்டார். அவர் இந்திய கிரிக்கெட் பயிற்சியாளர் குரு சரண் சிங்கிடம் அறிமுகம் செய்து வைத்தார். அதன்பின் குப்தாவின் கிரிக்கெட் ஆசை அரங்கேறும் வாய்ப்பு ஏற்பட்டது.

குப்தா பிறந்தது கல்கத்தாவில். 16 வருடமாக வசித்தது டில்லியில். புதுடில்லி கிரிக்கெட் அணியில் ஆடினார். பின்பு மேற்கு வங்க அணியில் இடம் கிடைத்தது. உள்ளூர்ப் போட்டிகளில் பிரகாசித்தாலும் இந்திய தேசிய அணியில் குப்தாவுக்கு அவ்வளவு சுலபமாக இடம் கிடைக்கவில்லை.

இருப்பினும் என்றாவது ஒருநாள் வாய்ப்புக் கிடைக்கும் என்று குப்தா அமைதியாகக் காத்திருந்தார்.

இந்திய அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர் முதல்தர போட்டிகளில் இருந்து ஓய்வுபெற, குப்தாவுக்கு இடம் கிடைத்தது. அதன்பின் தேசிய அணியில் இடம்பெற்றார்.

"எனது கனவு இப்போதுதான் நனவாகி இருக்கிறது. நாட்டுக்காக விளையாடும் ஆசையைப் பல வருடங்களாக மனதில் வளர்த்து வைத்திருந்தேன்.

இனி மற்றவர்கள் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை காப்பற்றும் அளவுக்கு விளையாட வேண்டும் அவ்வளவுதான்" என்கிறார் குப்தா.

24 வயதான குப்தா இதுவரை 15 போட்டிகளில் விளையாடி 630 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிகபட்சம் 120. பந்துகளை 36 தடவைகள் பிடித்து எதிரணியினரை அவுட்டாக்கியுள்ளார்.

## 'டெண்டுல்கர் ஆட்டத்திறமைக்கு வானமே எல்லை'
## இந்திய கிரிக்கெட் சபை புகழாரம்

'மானிடத் தெய்வம். டெண்டுல்கரின் ஆட்டத்திறமைக்கு வானமே எல்லை' என்று இந்திய கிரிக்கெட் சபை டெண்டுல்கருக்குப் புகழாரம் சூட்டியுள்ளது.

இந்திய கிரிக்கெட் சபையின் 72வது ஆண்டறிக்கை அண்மையில் தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் மேற்கண்டவாறு இந்திய துடுப்பாட்ட நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கருக்கு புகழாரம் சூட்டப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அவுஸ்திரேலியாவின் கிரிக்கெட் மன்னன் டொன் பிரட்மன் சமீபத்தில் மறைந்தார். அவர் தன்னுடைய கனவாக ஒரு சிறந்த அணியை தெரிவு செய்திருந்தார். அந்த அணியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

பிரட்மன் கனவு அணியில் உள்ள வீரர்களில் டெண்டுல்கரும் ஒருவர் என்பது இந்தியாவுக்கே பெருமை.

இந்தியாவின் வெற்றிக்கு பல நேரம் கைகொடுத்துள்ள டெண்டுல்கர். உண்மையிலேயே கைகொடுத்த தெய்வம். அவர் ஒரு மானிட தெய்வம். அவரை எப்படி வேண்டுமானாலும் பாராட்டலாம்.

28 வயதிலேயே பல சாதனைகளை டெண்டுல்கர் படைத்து விட்டார். அவருடைய ஆட்டத்திறமைக்கு எல்லையே இல்லை. வானம் தான் எல்லை.

2001ம் ஆண்டு ஜூன் 30ம் திகதி வரையிலான புள்ளி விவரப்படி அவர் 25 டெஸ்ட் சதங்களையும் 29 ஒருநாள் சர்வதேச சதங்களையும் அடித்துள்ளார். ஒரு நம்பிக்கைக்குரிய துடுப்பாட்ட வீரர் என்பதை நிலைநாட்டியுள்ளார்.

கிரிக்கெட் வரலாற்றில் டெண்டுல்கரின் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை எட்டிப் பிடித்த முதல் வீரர் டெண்டுல்கர் என்பது அவருடைய சாதனை மைல் கற்கள்.

அவர் ஒரு சகலதுறை ஆட்டக்காரர் என்பதையும் மெய்ப்பித்து இருக்கிறார். ஒருநாள் போட்டியில் சிறப்பாகப் பந்து வீசி 100 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளில் 'ரன் மெஷின்' என வர்ணிக்கப்பட்ட விவியன் றிச்சர்ட்ஸ் போன்ற துடுப்பாட்டத்திறமை கொண்டவர் டெண்டுல்கர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இலக்கிய நயம்
## சந்தோஷம் எங்கே?

அவளைத் தன்னை நோக்கி திருப்பிவிடுவதற்காக அவள் தோளைப் பற்றி இழுத்தான் சமரன்.

ஒருக்களித்துப் படுத்திருந்த நிலையிலிருந்து திரும்பாமலே தன் கையால் அவன் கையை விலக்கி விட்டாள் சந்தியா.

சமரனுக்குக் கோபம் வந்தது. இன்னும் சற்று நேரத்தில் நம்மைக் கலங்கடிக்கிற மாதிரி ஆவேசமாக நடந்துகொள்ளப்போகிறாள். இதென்ன, தனக்கு இதெல்லாம் விருப்பமே இல்லை என்பதுபோன்ற சலிப்பான பாவனை... எரிச்சல் குமிழியிட கையை எடுத்துத் தன் மார்புக்குக் குறுக்கே கட்டிக்கொண்டு மல்லாந்து படுத்தான்.

அவள் மெதுவாகத் திரும்பியதை பஞ்சணை அசைவிலிருந்து புரிந்து கொண்டான்.

"என்ன கோபமா?" என்றாள் கிறக்கம் வழியும் குரலில்.

அவன் பேசாமல் படுத்திருந்தான். இவள் குரலைக் குழைத்துக்கொண்டு வந்தால், நாய்க்குட்டிபோல, இவள் இழுப்புக்கெல்லாம் நான் போகவேண்டுமாக்கும்.

மெல்லத் தன் கையொன்றை அவன் மார்பின் மேல் போட்டு, "ஏதோ யோசனையில ந்தேன்... அதற்குள் என் செல்ல க்கு முணுக்கென்று கோபம் வந் டுதாக்கும்..." என்று சொல்லியபடி உதடுகளை அவன் கன்னமருகே கொண்டு வந்தாள்.

அவள் கூந்தலின் வாசனை, கழுத்தின் வியர்வை மணம் இரண்டுங் கலந்து அவனுள் போதையேற்றின.

தன் இறுக்கத்தைத் தளர்த்திக்கொள்ள விரும்பாமல் வீம்புடன் படுத்திருந்தான்.

அவன் கழுத்தைச் சுற்றி தன் கைகளைப் போட்டுத் தன் முகத்தை நோக்கி அவன் முகத்தை இழுத்து மிக வினோதமான முனகலுடன் முத்தமிட்டாள்.

அவன் முதுகில் வியர்வை குளிர்வதை உணர்ந்தான். குளிர்ந்த நீருக்குள் இறங்குவதுபோல தசைகள் அனைத்தும் இறுகின. "வேண்டாம்" என்று உதடுகள் முனகின.

அவள் திடீர் வேகத்துடன் அவனைப் பாய்ந்து பற்றிக்கொண்டு தன் கால்களால் இறுக்கினாள். அவன் அறிந்திருந்த அவளது அந்தரங்க வாசனை இதயம் முழுவதும் நிரம்பிவிட்டது போல் திணறினான்.

அவ்வளவுதான். இறுக்கம் உடைந்து விழ, அவன் பொங்கி அவளை அணைத்துக்கொண்டான்.

அவன்மீது மென்மைச் சுமையாக அவள் அழுந்தினாள்.

ஆடைகள் கலைந்தன.

அவனை இறுக அணைத்தே நொறுக்கிவிடவேண்டும் என்கிற வெறியில் சமரன் இயங்கினான்.

அவனது கடினமான உடற் பிரதேசம் முழுவதையும் அவள் மென்மையாக நிரப்பினாள். அவன் உடல் கொப்பளித்து வெம்மையாக வழிந்தது.

கைகளால் மட்டுமில்லாது முழு உடலாலும் அவளைத் தனக்குள் அடக்கினான். விரும்பிய வடிவில் தன்னை நெகிழ்த்திக் கொள்ளும் இளகிய மண்ணாக அவனில் படிந்தாள் சந்தியா.

அவள் கழுத்தின் இரு புறங்களுக்கும் மாறி மாறி தன் முகத்தை ஒளிக்க இடம் தேடுவதுபோல மீண்டும் மீண்டும் புதைத்துக் கொண்டான்.

அவளுடலின் மென்மையை உணர உணர, அதைப் பிழிந்து தன்னுடலுக்குள் செரித்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவேசம் எழுந்தது. பாம்புகளின் பிணைவு வெறியில் சில நிமிடங்கள் கழிந்தன.

ஆர்த்தெழுந்து பாறையில் மோதிய அலை சிதறி வீழ்ந்து அடங்கியது.



தருவது
முழடில்யன்

வியர்த்த முகத்திலும், தோளிலும், கழுத்திலும் தலை மயிர் ஒட்டியிருக்க, அவன் கண்களைப் பார்க்கக் கூசி, முழங்கையால் தன் கண்களை மூடிக்கொண்டாள் சந்தியா.

"என்ன?" என்றான்.

"ம்" என்றாள் கண்களைத் திறக்காமல்.

"வெளியே போக வேண்டாமா?"

"கடற்கரைக்குப் போகவேண்டும் என்றாயே..."

"வேண்டாம்"

"ஏன்?"

"இந்த சந்தோஷம் போதும்"

"சந்தோஷம் இருக்கட்டும். காற்றாட உலவி வர வேண்டாமா?"

"இனி எந்தக் காற்றும் என்மீது படவேண்டாம்"

"அப்போ காற்று வாங்கச் செல்கிறவர்கள் சந்தோஷமாக இல்லையா?"

அவள் முகம் துணுக்குற்றது. எதுவும் பேசாது அவன் தலையை இழுத்துத் தன் மடிமீது சாய்த்துக் கொண்டாள். அவன் உதடுகளைத் தன் விரல்களால் வருடியபடியே சொன்னாள். "மற்றவர்கள் எங்குபோய் வேண்டுமானாலும் சந்தோஷமாக இருக்கட்டும். என்னோடு என் செல்லம் இருந்தால், எனக்கு எங்கிருந்தாலும் சந்தோஷம்தான்... என்னைவிடப் பெரிதாக யாரும் ஒன்றும் சந்தோஷமாக வாழ்ந்துவிடவில்லை. இன்றைக்கு நாம் எங்கும் போகப்போவதில்லை. உலகில் யாருக்கும் கிடைக்காத மகிழ்ச்சியும் நிம்மதியும் இந்தச் சுவர்களுக்குள் இருக்கும் என்னை அடைந்திருக்கிறது. வேறொன்றும் வேண்டாம்."

**வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே**

**வாழுநம் என்னும் செருக்கு.**

(குறள்: 1193)

## ஆப்கான்களைக் கவர்ந்தவர்கள்

தற்போது உலகெங்கெங்கும் பரபரப்பாகப் பேசப்படும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி அண்மையில் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஆரம்பித்துள்ளது.

நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடி அந்த அணியை வெகுவாகப் பாதித்துள்ளது. வெகு அக்கரையாகப் பயிற்சியில் ஈடுபடும் ஆப்கான் அணிக்கு நிதி நெருக்கடி கொஞ்சம் கஷ்டத்தைக் கொடுக்கிறது.

"பலதரப்பட்ட நுணுக்கங்களை எங்கள் வீரர்களுக்குக் கற்றுக்கொடுக்க ஆசைதான். ஆனால் போதுமான நிதி வசதி எங்கள் கிரிக்கெட் சபையிடம் இல்லையே!" என்கிறார் ஆப்கான் கிரிக்கெட் சபைத் தலைவர்.

ஆப்கான் வீரர்களைப் பொறுத்தவரை பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் தான் இவர்களது மானசீகக் குரு. இம்ரான் கான், வாஸிம் அக்ரம், வக்கார் யூனுஸ் ஆகியோர் தான் இவர்களுக்குப் பிடித்த வீரர்கள்.

பந்து வீச்சில் இவர்களது நுணுக்கங்களைப் பார்த்துப் பந்து வீச்சுப் பயிற்சிகளை மேற்கொள்கின்றனர். துடுப்பாட்டத்தில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கரின் ஆட்டத்தைப் பார்த்து தொழில் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்கிறார்கள்.

தவிர்க்க முடியாத காரணங்களால் இம்முறை மன்னாதி மன்னன், எஸ்.டி.எஸ். தொடர் இடம்பெறவில்லை.

## சிந்தியா பதில்கள்

★ எல்லாப் பத்திரிகைகளும் இரண்டு முழுப் பக்கங்களை (பெரும்பாலும்) ஆபாசமான வண்ணப்படங்களுக்கு என ஒதுக்கி இளைஞர் மனதைக் கெடுக்கின்றனவே, சரிதானா?

எம்.எம். மிஹ்லார், கொழும்பு-10.

*பெரும்பாலான பத்திரிகைகளில் வருகின்ற அரசியல் கட்டுரைப் பக்கங்களை விட இது ஒன்றும் அவ்வளவு ஆபாசமோ, ஆபத்தானதோ இல்லை என்பது என் தாழ்மையான கருத்து.*

⊙⊡⊙

★ சிந்தியா, நாஸ்திகனாக இருப்பதில் என்ன லாபம்?

எம்.எம்.எம். இமாம் ஹஸன், ஹெம்மாத்தகம.

*ஒரு லாபமுமில்லை. அதில் விடுமுறை நாட்கள்கூட குறைவுதான்!*

⊙⊡⊙

★ என்னதானிருந்தாலும் ஒஸாமாவின் தாக்குதல் அமெரிக்காவின் பயங்கரவாதத் திமிருக்குப் பலத்த அடிதானே?

எம். ஸ்ரனிஸ்லோஸ், மன்னார்.

*இல்லை. ஒஸாமாவைப் பிடித்துத் தண்டனை அளிப்பதோடு, உலகப் பொலீஸ்காரனின் கெடுபிடி முன்பிருந்ததைவிட அதிகம் ஓங்கப்போகிறது.*

⊙⊡⊙

★ எல்லோருமாகச் சேர்ந்து 17வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்களே, இந்த அதிசயம் எப்படி இருக்கு?

கு.சஞ்சீவன், கொழும்பு-05.

*இழுத்துக்கொண்டே வந்த 'வாழ்க்கை' தொடர் அவசர அவசரமாக முடிந்து விட்டது போல.*

★ 'கடவுள் பாதி மிருகம் பாதி கலந்து செய்த கலவை' ஆளவந்தான் மட்டும் தானா?

என். ஜெயகாந்தன், திருகோணமலை

*இல்லை. எல்லோரும்தான். மிருக குணங்களிலிருந்து விடுபட்டு, நாம் உருவகித்து வைத்திருக்கும் தெய்வ குணங்களுக்குச் செல்லுதலே மனித முயற்சியாகச் சொல்லப்படுகிறது.*

*அது ஒருபக்கமிருக்க, கொஞ்சம் திரும்பிப் பார்த்தால் 'திருடா திருடா' படத்திலும் இதை எழுதியிருக்கிறார் வைரமுத்து. "கொஞ்சம் மிருகம் கொஞ்சம் கடவுள் ஒன்றாய்ச் சேர்த்தால் எந்தன் நெஞ்சம்".*

*அதற்கும் பின்னால் பார்க்க, 'ஆலய மணி'யில் கண்ணதாசன் சொல்கிறார்: "பாதி மனதில் தெய்வம் இருந்து பார்த்துக் கொண்டதடா! மீதி மனதில் மிருகம் இருந்து ஆட்டி வைத்ததடா!"*

⊙⊡⊙

★ ஒரு பெண் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்கிறார்களே. ஆண் நினைத்தால் முடியாதா?

மார்க்கண்டு வாணி, கிரான்.

*ஆண் நினைத்தால், அப்படி எதையும் பெண்கள் சாதிக்க விடாமல் பார்த்துக் கொள்ள முடியும். அதைத்தான் இரண்டாயிரம் வருஷங்களுக்கு மேலாகச் செய்து வருகிறோமே!*



ஆளவந்தானில் கமல

⊙⊡⊙

★ நீங்கள் அதிகம் விரும்பிப் படிக்கும் பத்திரிகை எது?

கே.தவப்பிரியன், தம்பிலுவில்-02.

*மொத்தம் 20 பக்கங்களில் ஒரு பக்கத்தில் மட்டுமே விளம்பரங்கள் வரும் வாரப்பத்திரிகை.*

⊙⊡⊙

★ BBC என்றால் என்ன?

பி.ஜேசுதாஸ், களுதாவளை.

British Broadcasting Corporation.

*பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பதன் சுருக்கம்.*

⊙⊡⊙

★ காதலன் காதலிக்காக தொங்குதோட்டம் கட்டியிருக்கிறான், தாஜ்மஹால் கட்டியிருக்கிறான். ஆனால் காதலி காதலனுக்காக எதையும் கட்டவில்லையே ஏன்?

த.பிரசானந்தன், நாவலப்பிட்டிய.

*ஏனில்லை? உங்களைக் கல்யாணம் கட்டிக் கொள்கிறார்களே... அது போதாதா?*

⊙⊡⊙

★ கல்யாணம் செய்துகொள்ளும் எண்ணமும் இருப்பதில்லை. தொடர்ந்து அந்தப் பெண்ணின் பின்னால் போகும் உத்தேசமும் இல்லை. ஆனாலும் பெண்களைக் கண்டால் ஏன் ஆண்கள் துரத்துகிறார்கள்?

ஜே. லக்கி, பெரியகல்லாறு.

*காரில் ஏறி அதை ஓட்டப் போவதில்லை என்று தெரிந்திருந்தாலும், ஓடும் காரைத் துரத்திக் கொண்டு பின்னால் ஓடுவதில்லையா நாய்கள்! அதுபோலத்தான். (கோபமடையும் ஆண்கள் சற்றே மகிழ, அடுத்த கேள்வி-பதிலுக்கு வரவும்)*

⊙⊡⊙

★ பெண்களைப் பற்றி இருப்பதுபோல ஆண்களைப் பற்றி ஜோக்குகள் அவ்வளவு பெரிதாக இல்லையே ஏன்?

த.திருஞானம், யாழ்ப்பாணம்.

*பெண்கள் அவற்றை ஞாபகம் வைத்துக்கொள்ளத்தான்!*

⊙⊡⊙

# மெய் சிலிர்க்க வைக்கும் வசனம்

கலைஞர் வசனம் எழுதிய மனோகரா படம் வெளிவந்த சமயம் அப்படத்தின் விளம்பரங்களில் திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி என்ற எழுத்துக் களைவிட, டைரக்ஷன் ஏ.எல்.பிரசாத் என்ற எழுத்துக்கள் சற்று பெரிய அளவிலே காணப் பட்டன. அதன் பின் படம் வசனத்தினாலேயே பிரமாண்டமான வெற்றியை பெற்று வந்ததால் பின்னர் வந்த விளம்பரங்களில் கலைஞர் மு.கருணாநிதி என்ற பெயர் மிகப்பெரிய எழுத்துக்களிலும், இயக்குநர் பெயர் சாதாரண எழுத்துக்களிலும் வெளிவர ஆரம்பித்தன.

மனோகரா படத்தை பார்த்துவிட்டு ஏவி.மெய்யப்ப செட்டியார் அவர்கள் அந்த இரவே மழை பெய்து கொண்டிருக்கும் நிலையில் அண்ணாசாலையில் அப்போது இருந்த முரசொலி அலுவலகத்திற்கு வந்து கலைஞரை மிகவும் பாராட்டினார். அத்துடன், அந்தக் காலக் கட்டத்தில் வசனம் எழுதுவதற்கு அதுவரை கொடுக்கப்படாத ஒரு பெரும் தொகையை அப்போதே கலைஞருக்குத் தந்து, அடுத்துதான் தயாரிக்க விரும்பும் கண்ணகிக் கோவலன் (பூம்புகார்) கதைக்கு வசனம் எழுதித்தர வேண்டுமென ஏவி.எம். கேட்டுக்கொண்டார்.



'மனோகரா' படத்தில் சிவாஜி, கிரிஜா.

மனோகரா படத்தின் வசனம் அந்தளவு ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

அதனால்தான அந்த நேரத்தில் கல்கி பத்திரிகை ஆசிரியர் கல்கி ரா.கிருஷ்ண மூர்த்தி அவர்கள் மனோகரா படத திற்கு விமர்சனம் எழுதும்போது. "திரைப்படத்தின வாசனத்தை ஒரு காவியம்போல எழுதலாம் என்பதை கருணாநிதி இந்த படத்தின் மூலம் நிரூபித்திருக்கிறார்" என புகழ் மாலை சூட்டினார்.

மனோகரா படத்தின் வசனங்கள் சிறந்த கவிதைகளைப் போல எதுகை மோனை நயத்துடன் துள்ளும் தமிழிலே அமைந்திருந்தன.

மனோகரன் தாயின் ஆணைப்படி பாண்டியன் முத்துவிஜயனோடு போர் செய்ய புறப்படும்போது, விடை பெறுகிற காட்சி இது.

மனோகரன்: விடை கொடுங்கள். வெற்றி மழை பொழிய வைக்கிறேன். வீணன் முத்து விஜயன் விலா எலும்பை நொறுக்குகிறேன். சூது செய்து பிறர் நாட்டைச் சுருட்டிக் கொள்பவர்களுக்கு அவனை உதாரணமாகக் காட்டுகிறேன்.

பத்மா: செல்வா! சிந்தை குளிர்ந்தடா. கண்ணே! நம் பரம்பரைக்கேற்பட்ட களங்கத்தை நீதான் கழுவவேண்டும்.

மனோகரன்: பரம்பரைக் கேற்பட்ட களங்கம்! பாண்டியன் முத்து விஜயனால் மட்டுமல்ல. பாதகி வசந்தசேனையாலுந்தான்! ஏமாந்த காலத்தில் வெற்றிமுரசு கொட்டிய வெறியனை மட்டுமல்ல. உங்கள் இன்வாழ்வில் குறுக்கிட்ட வஞ்சகியையும் விட்டு வைக்காது இந்த வாள்!

இதேபோல் போரிலே வென்ற மனோகரன் கூடாரத்தில் தூங்கும்போது பாண்டிய நாட்டு வீரன் ஒருவன் இருட்டில் பதுங்கி கூடாரத்தில் நுழைந்து மனோகரனைக் கொல்ல முயற்சிக்கும்போது, மனோகரன் விழித்தெழுந்து அவனை மடக்கி விடுகிறான். அப்போது நடக்கும் உரையாடல் இது.

மனோகரன்: யாரடா நீ?

விஜயா: நீர் உண்டாக்கிய சுடுகாட்டிலே மறு உயிர் பெற்ற பேயுமல்ல, பிணமுமல்ல! உமது பார்வையில் தட்டுப்படாமல் போன பகைவர்களில் ஒருவன் பாண்டிய நாட்டு வீரன்.

மனோகரன்: பாண்டிய நாட்டு வீரன்! உம், பாதி ராத்திரியிலே பதுங்கிப் பாயும் பட்டாளப் பயிற்சிக்கும் முத்து விஜயன் ஆட்சியிலே முதல் இடம் போலும், முதுகெலும்பில்லாதவனே! கையிலே வாளும், நெஞ்சிலே கோழைத்தனமும் கொண்டவர்களில் நீ ஒருவன் மிச்சமா ஓடிப்போ. உயிரை காப்பற்றிக் கொள்...

(அப்போது மனோகரனின் தோழன் ராஜபிரியன் அங்கே வருகிறான்)

ராஜ: மனோகரா! இவனை விடக் கூடாது.

மனோகரன்: போகட்டும் பாவம் மன்னித்து விட்டேன்!

விஜயா: மன்னிப்பு கேட்கும் மரபல்ல!

மனோகரன்: மறைந்திருந்து தாக்கும் மரபு! மாவீரன்!

ராஜ: தூங்குபவன் தலையைத் துண்டாடுபவர்களும், வீரர்கள்தான் பாண்டிய நாட்டுப் பள்ளிக்கூடத்திலே! போடா போக்கற்ற கோழையே.

விஜயா: கோழை நானா? இதோ பார். இப்பொழுதே நேராகவே பழி தீர்த்துக் கொள்கிறேன்.

(அந்த பாண்டிய வீரன் வாளை உருவும் போது மனோகரன் அவனை தடுக்க முயலும் சமயம் பாண்டியவீரனின் தலைப்பாகை அவிழ்ந்து விழுகிறது. அப்போதுதான் வந்தது ஆணல்ல. பெண்ணென்று தெரிகிறது.

மனோகரன்: ஆ...பெண்.

விஜயா: உன்பகைவனின் பெண்-பழி வாங்க வந்தவள்.

ராஜ: இளவரசி?

மனோகரன்: அற்புதமான காட்சி. வளையல் ஏந்தும் கைகளிலே வாள்.

விஜயா: பேசாதீர். நீர் வீரனானால் என்னை ஜெயித்த பிறகு பேசும்.

மனோகரன்: வேல் விழி மாதர்களிடம் வீரர்கள் ஜெயித்தார்கள் என்பதற்கு சரித்திரமே கிடையாது இளவரசி.

விஜயா: கேலி... தேவையில்லை... எடும் வாளை.

மனோகரன்: என்வாள் களத்திலே தான் விளையாடும். கனிகளை காயப்படுத்தாது.

விஜயா: துணிவிருந்தால்... வீராட்சணத்தைப்பற்றி பேசியதெல்லாம் வாய்வீச்சாக இல்லாமல் இருந்தால் வாளை வீசும். நல்ல தீர்ப்பு கிடைக்கட்டும்.

மனோகரன்: நல்ல தீர்ப்பு வாள் முனை வழங்காது. இனிமேல் வழக்கு மன்றத்திலேதான் பெறவேண்டும். பாண்டியன் பெற்ற பைங்கொடியே, நீ இப்போது கைதி. பாதுகாப்புக்கைதி. ராஜ பிரியா அழைத்துச் செல்.

இவ்வாறு மனோகரனும், விஜயாவும் சந்திக்கும் காட்சியில் வசனம் இலக்கிய சுவையுடன் நம்மை மகிழ்விக்கிறது.

அடுத்து வஞ்சகி வசந்தசேனை மனோகரனின் அன்னையை தகாத வார்த்தையால் பேசிவிட அந்த இடத்தில் அவளை பழிவாங்க முடியாமல் அன்னையிடம் தான்கொடுத்த ஆணையால் குமுறிக்கொண்டு மனோகரன் அன்னையை வந்து சந்திக்கிறான்.

மனோகரன்: அம்மா அம்மா! துள்ளி வரும் வேல், ஆவேசத்தை அள்ளி வரும் வாள், அவைகளை எல்லாம் தடுத்திருக்கிறேன். அவைகளைவிட பெரியவளா என்னை நகையாடிய இந்த கள்ளி? ஆனால் அவளைத் தான் எதிர்க்க முடியாமல் ஓடி வந்திருக்கிறேன் யாராலம்மா? தங்களால் தங்கள் கட்டளையால் சத்தியத்தால்!

பத்மா: மனோகரா விஷயத்தை சொல். என்ன நடந்தது.

மனோகரன்: தன்மானம் தரை மட்டமாவது. வீரம் விலை கூறப்பட்டது. அவமானச்சின்னம் ஆணவத்தால் ஆடியது. அம்மா தங்கள் கட்டளையை உடனே மாற்றிக் கொள்ள வேண்டும்.

பத்மா: சத்தியம் செய்திருக்கிறாய் செல்வா!

இவ்விதம் மனோகரன் கோபாவேசமாக மாறிவிட்டான் என்பதை அவன் தந்தை மன்னர் புருஷோத்தமன் அறிய வருகிறார். குமுறும் எரிமலையாகிவிட்ட அவனை அதிகாரத்தை வைத்தே அடக்க வேண்டுமென தன் மகளுக்கு விலங்கு மாட்டி சபைக்கு அழைத்து வரச் செய்கிறார். அங்கே அரசருக்கும், மனோகரனுக்கும் நடக்கிற உரையாடல் இது.

அரசர்: மனோகரா உன்னை எதற்காக அழைத்திருக்கிறேன் தெரியுமா?

மனோகரன்: திருத்திக் கொள்ளுங்கள் தயவு செய்து, அழைத்து வரவில்லை. இழுத்து வரச் செய்திருக்கிறீர்கள்.

அரசர்: என் கட்டளையை தெரிந்து கொண்டிருப்பாய் நீ.

மனோகரன்: கட்டளையா இது? கரை காண முடியாத ஆசை. பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி, மகிழ்ந்து, கண்ணே முத்தே. தமிழ்ப்பண்ணே என்றெல்லாம் குலவிக் கொஞ்சி தந்தத்தால் ஆன கட்டிலிலே... சந்தனத் தொட்டிலிலே வீரனே என் விழி நிறைந்தவனே தீரா வழி வந்தவனே என்று யாரை சீராட்டி பாராட்டினீர்களோ! அவனை அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து சபைநடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டுமென்ற தங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?

சபை: தச்.. தச்..

அரசர்: நீ நீதியின் முன்னே நிற்கும் குற்றவாளி. தந்தையின் முன் நிற்கும் தனயனல்ல இப்போது.

மனோ: குற்றவாளி? ஹும் யாருக்கு என்ன தீங்கிழைத்தேன்? என்னால் பாதிக்கப் பட்டவர்கள் யார்? அரசே தந்தையின் முன் தனயனாக அல்ல. பிரஜைகளில் ஒருவனாகவே கேட்கிறேன். கொலை செய்தேனா? கொள்ளை அடித்தேனா? நாட்டைக் கவிழ்க்கும் குள்ளநரி வேலை செய்தேனா? குற்றம் என்ன செய்தேன், கொற்றவனே குற்றம் என்ன செய்தேன்? கூறமாட்டீர்களா? நீங்கள் கூற வேண்டாம். இதோ அறங் கூறும் அமைச்சர்கள் இருக்கிறார்கள்! மறவர்குடி பிறந்த மாவீரர்கள் இருக்கிறார்கள்! மக்களின் பிரதிநிதிகள் இந்த நாட்டின் குரல்கள் இருக்கிறார்கள்... அவர்கள் கூறட்டும்... என்ன குற்றம் செய்தேன்?

சபை: குற்றத்தை மகாராஜா கூறத்தான் வேண்டும்.

அரசர்: இது உங்களுக்கு சம்பந்தம் இல்லாதது.

மனோ: சம்பந்தம் இல்லாதது சபைக்கு வருவானேன். குடும்ப தகராறு கொலு மண்டபத்திற்கு வரும் விசித்திரத்தை சரித்திரம் இன்றுதான் முதன் முதலாக சந்திக்கிறது மகாராஜா!

அரசர்: போதும் நிறுத்து! வசந்த விழாவில் நீ செய்த தவறுக்காக வசந்த சேனையிடம் நீ மன்னிப்பு கேட்க வேண்டும்.

மனோ: அதற்குத்தான் காரணம் கேட்கிறேன்.

அரசர்: எதிர்த்து பேசுகிறவர்களுக்கு ராஜசபையில் என்ன தண்டனை தெரியுமா?

மனோ: முறைப்படி மணந்த ராணிக்கு சிறைத்தண்டனை அளித்துவிட்டு, மூலையில் கிடப்பவர்களுக்கு முடி சூடப்படும் தண்டனையைவிட குறைவானது தான்.

அரசர்: ஆத்திரத்தை கிளப்பாதே! நிறைவேற்று அரசன் உத்தரவை.

மனோ: அரசன் உத்தரவென்ன? ஆண்டவனின் உத்தரவுக்கே காரணம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள் அரசே! சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டும். தாய் என்று கேள்விப்பட்ட பின்னும் அடங்கிக்கிடப்பவன் ஆமை!

அரசர்: தாய்க்கும், தந்தைக்கும் வேற்றுமை அறியா மூடனே, தந்தையின் ஆணைக்கேட்டு தாயாரின் தலையை வெட்டி எறிந்த பரசுராமனைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா நீ?

மனோ: பரசுராமன் அவதாரம்! மனோகரன் மனிதன்!

அரசர்: என் உத்தரவை நிறைவேற்றப் போகிறாயா? இல்லையா?

மனோ: நிறைவேற்றுகிறேன். மன்னிப்பு கேட்க வேண்டும் மனோகரன்.

அரசர்: ஆமாம். அதுவும் அரை நொடிக்குள்!

மனோ: அரை நொடியென்ன? அதற்குள்ளாகவே! ஆனால் யாரிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் தெரியுமா? கோமளவல்லி! கோமேதகச்சிலை! கூவும் குயில்! குதிக்கும்மான் என்றெல்லாம் உம்மால் புகழப்படும் இந்த கோணல் புத்திக் காரியின் கொள்ளிக் கண்களை கொடிய நாக்கை என் கூர்வாளுக்கு இரையாகத் தந்துவிட்டு- அதை எதிர்த்தால் உம்மையும் உமக்கு பக்கத்துணை வந்தால் அந்தப் பட்டாளத்தையும் பிணமாக்கி விட்டு, சூனியக்காரிக்கு ஆலவட்டம் கூற்றியவர்களை சுடுகாட்டுக்கனுப்பி விட்டேன் என்று சுழலும்வாளுடன்... சூழும் புகழுடன் என் அன்னையிடம் ஓடி மன்னிப்பு கேட்கவேண்டும். நிறைவேற்றட்டுமா அந்த உத்தரவை? தயார்தானா தயார்தான? ஏன் நடுங்க வேண்டும். ஹ...ஹ..ஹ... புருஷோத்தமர் போரிலே புலி! வாள் எடுத்தால் வையகமும் கலங்கும்.

அவரா இப்படி பயப்படுகிறார்? பாவம் வேலின் கூர்மையை சோதித்த விரல்கள் வஞ்சகியின் விரலை அல்லவா ரசித்துக் கொண்டிருக்கின்றன. பாசறையைப் பார்வையிட்ட கண்கள் இந்தப் பாம்பாட்டத்தின் பாவத்தில் அல்லவா லயித்துக்கிடக்கின்றன. கோட்டை கொத்தளங்களை நினைத்துக் கிடந்த நெஞ்சம், இந்த குட்டிச்சுவரின் நிழலில் அல்லவா குளிர்ச்சி காணுகிறது"

இந்த உணர்ச்சி மயமான நீண்ட வசனத்தின் இடையே எதிர்பாராமல் மனோகரனின் தாய் அவைக்கு வந்து தந்தையை கொல்வதற்கு வாளை ஓங்கிய மனோகரனை தடுத்து விடுகிறார்!

அப்போது மனோகரனின் தாய் மகனைப் பார்த்த முதலில் உன்னை சுமந்த இந்த வயிற்றில் வாளை பாய்த்து விட்டு தந்தையிடம் போய்மோது என்று கூறுவார்.

அந்த வார்த்தையைக் கேட்டு துடித்துப்போகும் மனோகரன் அம்மா என்று அலறியப்படி தாயின் காலிலே விழுவான்.

நீண்ட வசனங்கள் மூலம் கலைஞர் ஏற்படுத்திய உணர்ச்சியின் குமுறலை இந்த இடத்தில் அம்மா என்று கூறும் ஒரு வார்த்தையிலேயே அத்தனை உயர்ச்சியையும் கலைஞர் திரட்டித் தந்திருப்பார். மேலும் அந்த காட்சில் சிவாஜி வசன முழக்கமும், அம்மா என்ற அலறலும் நம்மை எல்லாம் உணர்ச்சி மோதலில் திக்குமுக்காட வைக்கும். ■


# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:................ பெயர்:...................... ஒப்பம்:.................




**அபிமான வாசகர் போட்டியில் ஒன்பதாவது: ஒரு மெய் எப்போது பொய்யாகிறது? முடிவுத் திகதி ஒக்டோபர் 30.**

சேதி கேள்விப்பட்டியலோ, எங்கட தமிழர் வியாபாரக் கூத்தணிக்குள்ள தலைமைப் பிரச்சனையாம். அழுக்கு சங்கரிக்கெதிரா மாவரைக்கிறவர் போர்க்கொடியாம். யாழ்ப்பாணத்துக் கட்சிக் கூட்டத்தில, அழுக்கரும் மாவும் ஏன் கொழும்பில கொட்டகை கட்டியிருக்க வேணும், பாராளுமன்றத்துக்கு வேற ஆக்கள விட்டிட்டு யாழ்ப்பாணத்தில நிண்டு கட்சிக் கிளைகளப் புனரமைக்கலாம்தானேயெண்டு உச்சந்தலையில கைவைக்கிற கேள்விக் கணைகளாம். "இல்லையில்ல, நாங்கள் கொழும்பில நிண்டு வெளிநாட்டுத் தூதுவர்களையும், தென்னிலங்கை அரசியல் வாதிகளையும் சந்திச்சுப் பேசவேண்டின முக்கியமான வேலைகள் இருக்குது. அதுதான் கொழும்பில நிக்கிறம், இல்லாட்டி எங்களுக்கு அந்தச் சிங்கள நாட்டில நிக்க என்ன வில்லங்கமா?" எண்டு சொல்லித் திக்குத் திணறச் சமாளிக்கப் பார்த்தவையாம். இந்த முக்கியமான வேலைய மட்டும்தானே முப்பது வருஷமாச் செய்துகொண்டிருக்கிறதாப் பம்மாத்துக் காட்டினமெண்டு முணுமுணுத்துக்கொண்டு சிலபேர் வெளிநடப்பும் செய்து போட்டினமாம். என்ன நடந்தாலும் தங்கட கதிரைகளைக் கடைசிவரை விட்டுக் குடுக்கப்போறதில்லையெண்ட உறுதியோட நிக்கினமாம் தலைவர்மார். இது ஒரு பக்கத்தில இருக்க, கிழக்கிலயும் கசப்புத் தொடங்கிட்டுதாம். அழுக்கு சங்கரி ஆதிக்கத்துக்கு வந்தபிறகு கிழக்கை ஒரேயடியாக்கைவிட்டிட்டாங்களெண்டு ஒரே கொம்பிளைனாம். கிழக்கில அதிகூடின வாக்கெடுத்த நீலமானவருக்கு நடந்த கெதிக்கும் கூத்தணிக்குள்ள இருந்த பதவிப் போட்டிதான் காரணமெண்டு உள்ளூரல பேச்சாம். நீலமானவற்ற செத்தவீட்டில சொன்ன வாக்குறுதிகளைக் காத்தில பறக்கவிட்டிட்டு அவற்றை இடத்தில ஆசனம் போட்டுக் குந்தத்தான் ஆளாலாப் பறந்தவையெண்டு இப்பவெளிச்சமாயிட்டுதாம். நீலமானவற்ற ஆக்களெல்லாம் புறந்தள்ளப்பட்டு வருகினமாம். அதுமட்டுமில்லாமல் போன பாராளுமன்றத்தில முன்னுக்கு முந்தியடிச்சு முழங்கித்தள்ளின சிங்கத்தார் தன்ர ரியட்டர் கொம்பன்சேஷனுகள மட்டும் பின்கதவால வாங்கிக்கொண்டு உதவிகேட்டு வந்தவைய உதறித் தள்ளிப்போட்டாரெண்டு உள்ளூர ஆத்திரமாம். இருந்தாலும் இப்ப அவரைத் தன்னும் ஆவிண்ட பிடாதமாதிரி அழுக்கர் அடக்கி வைச்சிருக்கிறது வடக்கு ஆதிக்கமாக் கிடக்குதெண்டு நினைக்க வைக்குதாம். எல்லாத்துக்கும் மேலால இப்ப கடைசியா அழுக்கற்ற ஐடியாவில கூத்தணி ஆடின கூத்து ஒரு கோமாளிக் கூத்தாப் போட்டுதெண்டு பெருத்த அதிருப்தியாம். அரசாங்கத்த விழுத்த வேணுமெண்டத்துக்காக ஐக்கிய தேசியக் கட்சிய நிமித்த வெளிக்கிட்டது அடி முட்டாள்தனமான வேலையாப் போட்டுதெண்டு மனக்கசப்பாம். அதுக்காக வலிய வலியப்போய் ரணிலரிண்ட கமக்கட்டுக்க சொருகிக்கொண்டு செத்தவீடு ஊர்வலம் பொதுக்கூட்டமெல்லத்திலயும் முகம்காட்டிக் கரிபூசிக்கொண்டேல்லே வந்திட்டுது இந்தாள் எண்டு கரிச்சுக் கொடினமாம் உள்ளுக்க சிலபேர். கடைசியாக் கண்ட மிச்சம் அரசாங்கத்தையும் விழுத்த முடியேல்ல. ஐக்கியதேசியக் கட்சியையும் வழிக்க கொண்டு வர ஏலேல்ல, ஐ.தே.கவிண்ட வழியிலயும் இழுபட ஏலேல்ல, யானை வலைப் பிடிச்சு இழுக்கப்போய் இடறுப்பட்டு வழுக்கி விழுந்துபோய் நிக்கினமெண்டு பரிதாபப் படவேண்டிக் கிடக்குது. கடைசியா அரசாங்கத்துக்குப் பக்கபலமா ஜே.வி.பி.யைச் சேத்துவிட்ட கைங்கரியத்தத்தான் ஆக்கள்செய்து ஒய்ஞ்சிருக்கினமெண்டு விசனிக்கினம் விசயந் தெரிஞ்சவை. பத்துப் பேரை மட்டும் வைச்சுக்கொண்ட ஜே.வி.பி. அரசாங்கத்தோட உடன்படிக்கை செய்த இந்த ஆட்டு ஆட்டுவிக்க ஏலுமெண்டால் இவை எல்லாத் தமிழ்க் கட்சிகளுமாச் சேந்தால் இருபதுக்கு மேல எம்.பி மாரை வைச்சிருக்கறவை ஏன் தாங்கள் ஒரு உடன்படிக்கைக்குப் போய் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு, மற்றய நாளாந்தப் பிரச்சனைகள், கெடுபிடிகளுக்கு முடிவு கட்ட முயற்சித்திருக்கக் கூடாது எண்டு கேக்கினம் அவை. சரி, சேர்ந்து பாக்கிறது, முடியாட்டால் விலகிறது, என்ன குடியா முழுகிப்போயிடும், இந்தா ஜே.வி.பி இருத்தி எழுப்பிறதுக்கெல்லாம் அரசாங்கம் இருந்து எழும்புதெல்லே எண்டு கேக்கிறாங்கள் பாருங்கோ. கூத்தணியிண்டு குறுக்குப் புத்தியால கிடைச்ச சந்தர்ப்பத்தையும் கெடுத்திட்டு நிக்கினமெண்டினம் அரசியல் விசயகாரர்.

இதெல்லாம் இருக்க இப்ப லேட்டஸ்ட்டா ஒரு கூத்து நடக்குது கேள்விப் பட்ட நீங்களோ. கூத்தணிக்குள்ள பொருமி வெடிச்ச தலைமைப் பிரச்சனைக்கு இப்ப வெளிநாட்டிலயிருந்து தலைமைகளை இறக்குமதி செய்து தீர்வு காணலாமா வெண்டெல்லே ட்ரை பண்ணினம். முன்னாள் செயலாளர் அமிரிண்ட மனைவி மங்கைகளுக்கு அரசியானவவை இங்கிலாந்திலயிருந்தும் தந்தை செல்வத்தின்ர புத்திரர் சந்திரமான தந்திரஹாசனை இந்தியாவிலயிருந்தும் இறக்குமதி செய்து தலையை றீப்பிளேஸ் பண்ணி வண்டியச் சரியாக்கலாமோவெண்டு ஆதங்கப்படுகினம் அதுக்குள்ள இருந்து மூச்சுத் திணறுற சில முக்கியஸ்தர்கள். இப்ப இந்தியாவிலபோய் வீல் செயரில ஒய்வெடுத்துக்கொண்டிருக்கிற கூத்தணித் தலைவர் சிதம்பரத்தாரும் தந்திரஹாசனச் சாரதியாக்கிப்பாக்க ஆசைப்படுறதாக் கேள்வி. என்னதான் மாட்டை மாத்தினாலும் ஒட்டை வண்டில ஒழுங்காத் திருத்தாட்டால் கனகாலம் பாவிக்காது கண்டியலோ. இதுக்கிடையில இன்னொரு குறும்பையும் கேட்டியலோ. அதுதான், திருகோணமலையிலயிருந்து நாலைஞ்சு பொது அமைப்புக்கள் கூத்தணியிண்ட தலைமையை தேவ அமைச்சரிட்டக் கையளிக்கச் சொல்லி ஜோக் விட்டிருக்கினம். அரசியலில இடைக்கிடை பகிடியுமில்லாட்டால் போரடிச்சுப் போடும்தான். அதுக்காக இப்பிடி மரத்தால விழுந்தவன மாடேறி மிதிக்கிற கணக்காப் பகிடி விடுறது டூமச், இல்லையா? சரி, எது எப்பிடியோ, கூத்தணியிண்ட கூத்துக்கெல்லாம் இண்டைக்கு அழுக்கர்தான் பலிக்கடாவாப் போச்சு! நாங்களென்ன செய்யிறது?

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை கொழும்பு-06 [580230]
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு




# பங்காளி




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


சாப்பிடுவதற்குத் தயாராக இருக்கும் நூடில்ஸ்களோ இவை என்று எண்ண வேண்டாம். எமது உடலில் உள்ள சிறுகுடலில் உள்ளே காணப்படும் ஒட்டுண்ணிகள் தான் இவை.

உலகில் உள்ள மக்களில் 25 சதவிதத்திற்கும் அதிகமானோரின் சிறுகுடலில் இந்த ஒட்டுண்ணிகள் ஒட்டி வாழ்கின்றன.

சிறுகுடலில் இருந்து எமது அன்றாட உணவினைப் பங்கு போட்டுக் கொள்ளும் இவை, சிறுகுடலை விட்டு வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்தால் ஆபத்து ஏற்படும்.

இந்த ஒட்டிண்ணிகள் சிறுகுடலில் இருந்து நுரையீரலுக்குத் தாவினால், நுரையீரலைத் தாக்கி கபவாதம் என்னும் நோயைத் தோற்றுவிக்கும்.


புழுக்கள் போன்று தோற்றமளிக்கும் இந்த ஒட்டுண்ணி ஒன்றின் நீளம் 45 சென்டி மீட்டர் வரை இருக்கும்.

---

பெரிய கிரீடம் ஒன்றைத் தலையில் வைத்துக் கொண்டு நாக்கில் வேல்களைக் குத்திக் கொண்டிருக்கும் இந்தப் பக்தர் பப்புவா நியூகினியா நாட்டுப் பழங்குடியைச் சேர்ந்தவர்.


எமது நாடுகளிலும் திருவிழாக்களில் அலகு குத்திக் கொண்டு தமது பக்தியை வெளிப்படுத்தும் பக்தர்களைப் பார்த்திருப்பீர்கள். அதேபோன்று பப்புவா நியூகினியா தீவுகளில் வருடந்தோறும் நடக்கும் திருவிழாவிலும் இப்படி அலகு குத்திக் கொண்டிருப்பார்கள்.

இப்படி நாக்கில் வேல் குத்திக்கொண்டு தோன்றும் இந்தப் பக்தர், இதனால் ஏற்பட்ட வேதனையை எப்படித் தான் தாங்கிக் கொண்டார் என்பது ஆச்சரியம்.



# பக்தி

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**ஜீவிதன் | 07.10.2001**

முள்ளேஸ்வரத்தை சேர்ந்த திலகநாதன் ஜீவகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜீவிதன், தனது முதலாவது பிறந்த தினத்தை 07-10-2001 அன்று லண்டனில் (SOUTH ALL) கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பூட்டி, பூட்டம்மா, பாட்டிமார், பாட்டாமார், பெரியம்மா, அத்தைமார், மாமாமார், சித்திமார், சித்தமார், அக்காமார், அண்ணாமார், குட்டி மச்சாள், மற்றும் உற்றார், உறவினர்கள், [illegible] சகல செல்வாக்கியங்களும், [illegible] பெற்று நீடூழிகாலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்

தகவல்- [illegible]

டென்னிஸ் உலகின் கவர்ச்சிப் புயல் யார் என்று கேட்டால் உடனே கூறிவிடுவார்கள் ரஷ்யாவின் அன்னா கோர்னிகோவா என்று. இதற்கு முன் டென்னிஸ் உலகின் கவர்ச்சி நட்சத்திரம் என்று வர்ணிக்கப்பட்ட கேப்ரியலா சபாடினியின் புகழை மிக இள வயதிலேயே தட்டிப் பறித்து விட்டார் அன்னா.

அன்னா டென்னிஸ் களத்தில் இறங்கி விட்டால் போதும் பார்வையாளர் பகுதியில் இருக்கும் அத்தனை கமெராக்களும் 'பளிச் பளிச்' சென்று கிளிக் செய்ய ஆரம்பித்து விடும்.

சிங்காரச் சிரிப்புடன் ஸ்டைல் நடைபோட்டு வரும் அன்னா 'சிச்' என்ற உடையில் 'நச்' சென்று வந்து 'கிக்' ஏற்றிவிடுவார்.

தனக்குப் புகழைத் தேடிக் கொடுத்த 'கவர்ச்சியை' காசாக்கிக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார் இவர்.

'உடம்பைக் கட்டுக்கோப்பாய் எப்படி வைத்திருப்பது?' என்று தானே மொடலிங் செய்து வீடியோ டேப் ஒன்றை வெளியிட்டுப் பெரும் பணம் பார்த்து வருகிறார் அன்னா.

இந்தக் கவர்ச்சிப்புயல் தனது இரசிகர்களுக்கு அண்மையில் பெரும் கவலையை அளித்துள்ளார். ஆம் அண்மையில் திருமணம் செய்து விட்டார் இவர்.



# புயல்



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 8A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஒக்.07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.